# தமிழரசு



16-2-1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

துந்துபி — மாசி 4

(26-1-1983) திறந்துவைக்கப்பட்ட காலஞ்சென்ற கலைமேதைகளின்
திருவுருவப் படங்கள்



பழம்பெரும் நாடக ஆசிரியர் ஏகை சிவசண்முகம் பிள்ளை,
கவிஞர் எஸ். டி. எஸ். யோகியார்,
இசைப் பாடலாசிரியர் கீவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார்,
வயலின் மேதை பாப்பா வெங்கட்டராமையா,
நாதசுரமேதை குளிக்கரை எஸ். பிச்சையப்பா,
பரத நாட்டிய மேதை பந்தணைநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை,
நாடக ஆசிரியர் சலகை ப. கண்ணன்,
நாடக-திரைப்பட நடிகர் பி. பி. ரங்காச்சாரி,
திரைப்படத் தயாரிப்பாளர் சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பத் தேவர்,
நாடக-திரைப்பட நடிகர் கே. பி. கேசவன்,
நாடக நடிகை கோல்டன் பி. சாரதாம்பாள்,
நாடக-திரைப்பட நடிகை எம். ஆர். சந்தானலட்சுமி.
நாடக-திரைப்பட நடிகை எம். எஸ். திரௌபதி,

# வீர சாதனைக்கொரு வள்ளிராணி



இருளையும், நிழலையும் பார்த்ததும் பயந்துவிடக்கூடிய சுபாவம் குழந்தைகளுடையது. அந்த மன நிலையிலும் தன்னுயிரையும் பொருட்படுத்தாது உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இன்னொரு உயிரையும் காப்பாற்றும் துணிவு பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும். அந்தத் துணிச்சலுக்கான வீர விருதை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களிடமிருந்தும் (1982), இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களிடமிருந்தும் பெறும் சிறப்பினைப் பெற்றவள் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 11 வயது சிறுமி வள்ளிராணி ஆவாள்.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் நாள் காலை சுமார் 9 மணி; மேகல சின்னம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்னும் சற்று நேரத்தில் முழு ஆண்டுத் தேர்வு துவங்க இருக்கிறது. ஆறாம் வகுப்பைச் சேர்ந்த நான்கு மாணவிகள் அந்த இடை நேரத்தில் தண்ணீர் அருந்துவதற்காக ஒரு கிணற்றில் இறங்குகிறார்கள். இவர்கள் நீர் அருந்திக் கொண்டிருக்கும்போதே தேர்வு துவங்க இருப்பதற்கான மணியோசை கேட்கிறது.

உடனே அவசர அவசரமாகப் படியேறும் அவர்களில் சாந்தி என்ற மாணவியின் பாவாடை காலில் சிக்கிக் கொள்ள, அவள் தவறி 30 அடி ஆழமுள்ள அந்தக் கிணற்றில் விழுந்து விடுகிறாள். இதைக்கண்டு திகைத்த மாணவிகளில் இருவருக்கு என்ன செய்வதென்றே தெரியாமல்-ஆபத்துக் குரலெழுப்பக்கூட மறந்து நிற்கிறார்கள். விழுந்த மாணவி தலையில் அடிபட்டு மயக்க நிலையில் கிணற்றுத் தண்ணீரில் கிடக்கின்றாள். அவளின் நெருங்கிய தோழியான வள்ளிராணிக்கு மட்டுமே நீந்தத் தெரியும். எதையும் யோசிக்காமல் அந்த வினாடியே கிணற்றுக்குள் குதித்து நீரில் மூழ்கித் தேடுகிறாள். சாந்தியின் பாவாடை கையில் சிக்க, அதைப்பிடித்து இழுத்து அவளை நீரை ஒட்டியுள்ள படிக்குக் கொண்டுசென்று படியின் மீது கிடத்துகிறாள்.

இதனிடையே மற்ற மாணவிகள் இருவரும் நிலைமையை உணர்ந்து உதவிக்குக் கூச்சல் போடுகின்றனர். இதைக்கேட்டு ஓடிவந்த ஆசிரியர்களும் மாணவர்களும் கிணற்றுக்குள் இருந்த சாந்தியையும்வள்ளிராணியையும் வெளியே கொண்டு வந்து ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெறச் செய்கின்றனர். அந்த நிலையிலும் அன்று நடந்த தேர்வுக்கு வள்ளிராணி செல்கிறாள்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த சிறு விவசாயியான சந்திரன், ரத்தினம்மாள் ஆகியோரின் ஒரே பெண் குழந்தை வள்ளிராணி எப்போதுமே தன்னுடன் பயிலும் மாணவியர்க்கு உதவும் மனப்பான்மையும் கொண்டவள். படிப்பிலும் மிகுந்த ஆர்வம் காட்டி, படித்து, பட்டம் பெற்று தான் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்ற கொள்கை உள்ளவள்.

பள்ளி ஆண்டு விழாவின் போது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே. இராமமூர்த்தி அவர்களால் பாராட்டப்பட்டுப் பரிசுகளும் இவளுக்கு வழங்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு குடியரசு நாளில் சென்னையில் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களது திருக்கரத்தால் வீரச்செயலுக்கான அண்ணாவீரப் பதக்கமும் ரொக்கம் ரூபாய் ஆயிரமும் வழங்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு நாளன்று புதுடில்லியில் இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வள்ளிராணியின் துணிவைப் பாராட்டி விருது வழங்கினார். குழந்தைகளுக்கான வீரச் செயலுக்காக இவ்வாண்டு கௌரவிக்கப்பட்ட 16 குழந்தைகளில் வள்ளிராணியும் ஒருத்தி. தற்போது வள்ளிராணி மேகல சின்னம் பள்ளி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலுகிறாள்.

**அட்டை சொல்லும் செய்தி**


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு
2014
துந்துபி — மாசி 4
மலர்: 13
இதழ்: 16
16-2-1983

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் உள்ள தொழில் பிரிவுகளை நேரில் கண்டு வரவும். தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து அங்கு நிலையாகக் குடியிராத இந்தியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் அந்நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள நானும் தொழில் துறையின் அரசு ஆணையாளர் - செயலாளராக முன்னர் இருந்தவரும் தற்போது தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் தலைவராகவும், தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம் - பிற காகித நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகவும் உள்ளவருமான திரு. சி. இராமச்சந்திரன், இ. ஆ. ப. அவர்களும், தமிழ்நாடு மேக்னசைட்டு நிருவாக இயக்குநர் திரு. எஸ்.சுப்ரமணியம்அவர்களும்,தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவாகளால் அனுமதிக்கப் பட்டோம்.

நான் சென்னையை விட்டு 8-6-1982-ல் புறப்பட்டு பம்பாயை அடைந்தேன். மறு



# தொழில்வளம் பெருக்குவோம்!

## மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
## திரு எஸ். திருநாவுக்கரசு

நாள் பம்பாயை விட்டுப் புறப்பட்டேன், பிராங்க்ஃபர்ட், சூரிச், பாரிஸ், லண்டன், நியூயார்க், வாஷிங்டன், பால்டிமோர், பப்பலோ, சிக்காகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், டோக்கியோ, சிங்கப்பூர் ஆகிய நகர்களைச் சுற்றிப் பார்த்த பிறகு 2-7-1982ஆம்நாளன்று நான் சென்னை வந்தடைந்தேன்.

தொடர்ந்து பயணம் மேற்கொண்டு பல இடங்களைச் சுற்றிப் பார்த்த இச்சுற்றுப் பயணம் பின்வருவனவற்றிற்குப் பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. அவை யாவன:

வளர்ச்சி பெற்ற நாடுகள் தொழில் துறையில் அடைந்துள்ள சாதனைகளை நேரில் காண்பது,

தொழில் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று அவற்றின் செயல்பாட்டினை நேரில் கண்டறிவது,

நமது மாநிலத்தில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கண்டு பிடிப்பது,

நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான புதிய தொழில் நுட்ப ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை ஆய்வது,

இந்நாடுகளில் நிலையாகக் குடியிராத இந்தியர்களை, குறிப்பாகத் தமிழர்களைச் சந்தித்தல் ;

தமிழ்நாட்டில் நிலவும் தொழில் நிலவரம் குறித்தும், எதிர்கால வளர்ச்சிக்கான நம்முடைய திட்டங்கள், வாய்ப்புகள், கடன் உதவி, சலுகைகள் பற்றிய விவரங்கள் குறித்தும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல்,

தமிழ்நாட்டில் உள்ள புதிய தொழில் திட்டங்களுக்கு நிதிகளை முதலீடு செய்யவும் தொழில்நுட்ப உத்திகளை அளிக்கவும் அவர்களுக்கு ஆர்வம் ஊட்டுதல்,

நம்முடைய உற்பத்திப் பொருட்களை எங்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது குறித்து ஆய்வு செய்தல்.



மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின் போது மாண்புமிகு முதல்வர் (8-6-1982-இல்) வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறார்.

மின்னணுவியல், இரசாயனப்பொருட்கள், மருந்துப் பொருட்கள், தாள், 'பத்திரிகைத் தாள், கனிவளங்கள், கைத்தறி ஆகியவை போன்ற துறைகளை அறிந்து கொள்வதற்காகவும் அவற்றின் விவாதங்களில் கலந்து கொள்வதற்காகவும் அவ்விடங்களைப் பார்க்கச் சென்றேன். மாக்னசைட்டின் பயன் தொடர்பாகவும் மாக்னசைட்டின் ஏற்றுமதி தொடர்பாகவும் ஐரோப்பாவில் என்னுடைய பேச்சு வார்த்தைகளின்போது, தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் ('டேன்மாக்') நிருவாக இயக்குநர் திரு. எஸ். சுப்ரமணியம் அவர்கள் என்னுடன் இருந்தது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. பல்வேறு இந்தியத் தூதரகங்கள், இந்திய முதலீட்டு நிறுவனங்களின் கிளைகள், நிலையாகக் குடியிராத இந்தியர்களின் அரசுச் சார்பற்ற சில அமைப்புகள், தமிழ்ச் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் உதவியையும் எங்களுக்கு நல்கின.

### மேற்கு ஜெர்மனி

பம்பாயிலிருந்து 9-6-'82 அன்று காலை 8.00 மணிக்கு 'ஏர்இந்தியா' விமானம் 165-ன் மூலம் புறப்பட்டேன். அன்று மாலையே 'பிராங்க்ஃபர்ட்' நகரத்திற்குப் போய்ச்சேர்ந்தேன். 10-6-'82 அன்று அங்குள்ள இந்தியத் தூதரகத்திற்குச் சென்றேன். தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் குறித்தும், மேற்கு ஜெர்மானிய நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாடுகள் குறித்தும் அங்குள்ள அதிகாரிகளுடன் பேசினேன். அங்கே, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற ஆயத்த உடைகள் (ready made garments) கோடைக் கால ஆடைகள் ஆகியவற்றிற்கு அதிக வரவேற்பு இருப்பதாகச் சொன்னார்கள். பிராங்க்ஃபர்ட் நகரிலுள்ள 'இந்தியா இல்லத்தில்' கைத்திறன் பொருட்கள் கொண்ட பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. அப்பொருட்காட்சிக்கு நான் சென்றபோது, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற கைத்திறன் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல விற்பனை மதிப்பு இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அத்தகைய கைத்திறன் பொருட்களின் விற்பனையின் மூலம் நூறு ஆண்டுக் காலத்திற்கும் மேலாக அந்நாடுகள் இந்தியாவுடன் கொண்டிருக்கும் கலாச்சாரத் தொடர்பு, எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நாம் விற்பனை நடவடிக்கைகளை நன்முறையில் மேம்படுத்தினால், ஜெர்மனி ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிற்கு நம்முடைய கைத்தறி, கைத்திறன் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி கணிசமான அளவுக்கு உயரும் என்று நான் நினைக்கின்றேன்.

தமிழ்நாட்டில் கருப்புக்கல் ( Black Granite ) ஏற்றுமதி தொடர்பாகவும் தமிழ்நாட்டில் கருப்புக்கல்லை வெட்டி எடுத்து மெருகிடுகின்ற தொழில் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் பிராங்க்ஃபர்ட் நகரில் திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம் ( M/s. Tako Granites ) ரெயின் என்ஜினிரிங் ( M/s. Rhein Engineering Company ) நிறுவனம் ஆகியவற்றுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தினேன். திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம், இந்தியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கிரானைட்டை இறக்குமதி செய்து, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலுள்ளவர்களுடைய தொழிற்சாலைகளில் அதனை வெட்டி, மெருகிட்டு, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா,

லண்டன் மார்க்கோனி தொலைத் தொடர்பு நிறுவன அலுவலர்களுடன்...



கனடா முதலிய நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது. கச்சா கருப்புக்கல்லின் விலை கனமீட்டருக்கு 400 டாலராகும்; வெட்டி, மெருகிட்டு, வேலை நிறைவு பெற்ற கருப்புக் கல்லின் விலை, மூல விலையைப் போல் மூன்று மடங்கு ஆகும். திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு கனிவள நிறுவனத்திடமிருந்து (டாமின்) அதிக அளவுக்குக் கருப்புக் கற்களை இறக்குமதி செய்கின்றது, நல்ல ஆதாயம் கிடைப்பதன் காரணமாக 'டாமின்' நிறுவனம், சுமார் 50,000 சதுர மீட்டர் மெருகிட்ட கருப்புக்கல் ஓடுகளையும், 8,000 சதுர மீட்டர் மெருகிட்ட கற்களையும் தயாரிக்கக் கருப்புக் கற்களை வெட்டி எடுத்து மெருகிடும் தொழில் பிரிவு ஒன்றைச் சுமார் 3.6 கோடி ரூபாய் செலவில் நிறுவக் கருதியுள்ளது. இவற்றிற்காக, தமிழ்நாடு கனிம நிறுவனம், மேற்கு ஜெர்மனி அல்லது ஜப்பானிலிருந்து தேவையான இயந்திரங்களை வாங்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம், இயந்திரங்கள் வாங்குவதற்கும் கருப்புக்கற்களை வெட்டி எடுத்து மெருகிடும் தொழில் பிரிவு ஒன்றை விரைவில் தொடங்குவதற்குமான அதன் செயற்குறிப்பை முடிவு செய்ய உள்ளது. இதனால், நமது மாநிலம் வேலை நிறைவு பெற்ற கருப்புக்கல் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம்.

மாக்னசைட் பொருட்களை ஏற்றுமதி செய்வது குறித்து, திருவாளர்கள் கான்டி-எர்ஸ் மான் ஹீம் ( Conte-ErzMannheim நிறுவனத்துடன் நாங்கள் விவாதித்தோம். சேலத்திலிருந்து சுமார் 3,000 டன் எடையுள்ள மாக்னசைட் பொருள்களை இறக்குமதி செயது கொண்டிருந்த இந்நிறுவனம் சீனாவிலிருந்தும், கிரீஸிலிருந்தும் கிடைக்கும் மாகனசைட் பொருள்களுடன் ஒப்பிடும் போது, விலை அதிகமாக உள்ளதால் சேலத்திலிருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டது. நமது உற்பத்திப் பொருட்களை இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கான சரக்குக் கட்டணங்கள் அதிகமாக இருந்ததே, அதிக விலைக்கான காரணமாகும். நமது உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைக்கக் கூடுமா என்று தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் நிருவாக இயக்குநரை - ஆலோசிக்க -இயக்குனர்கள் குழுக் கூட்டத்தில் விவாதிக்க அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம், ஜெர்மன் நாட்டு விற்பனையில் பங்கு கொண்டு அந்நியச் செலாவணியை ஈட்ட இயலும்.

**சுவிட்சர்லாந்து**

11-6-1982 அன்று மாலை 5.05 மணிக்கு பிராங்க்ஃபர்ட்டிலிருந்து புறப்பட்டு மாலை சுமார் 6.00 மணிக்கு சுவிட்சர்லாந்திலுள்ள ஜூரி என்னுமிடத்தை அடைந்தோம். பெர்ன் நகரிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகாரி திரு பி. என். ஐயர் (நிருவாகம்) எங்களை வரவேற்றார். திருவாளர்கள் சுல்சர் சகோதரர்களின் தொழிற்சாலையில் மாக்னசைட்டைச் செய்முறைப்படுத்தும் முறையைக் காண்பதற்காக அருகிலுள்ள வின்டர்தாருக்கு 12-6-1982 அன்று சென்றேன். சுல்சர், ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 1,800 கோடி அளவிற்கு வியாபாரம் செய்யும் மிகப் பெரிய நிறுவனமாகும். நீராவி எஞ்சின்கள், டீசல் எஞ்சின்கள் கனிமத்தைச் செய்முறைப்படுத்தல், உலோகக் கனியை வெட்டியெடுத்தல், முதலிய பல்வேறு துறைகளில் சாதனங்களை உருவாக்குதல், தயாரித்தல், வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.



> ஒருமைப்பாடு என்பது அகத்தைப் பொறுத்ததே தவிர, புறத்தைப் பொறுத்ததே யல்ல. உள்ளத்தில் மாற்றம் இருந்தாக வேண்டும். அந்த உள்ளமாகிய மாற்றம் வரும் போதுதான் மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு இருக்க முடியாதென்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உள்ளத்தில் மாற்றம் வேண்டுமானால், வாழ்க்கையிலே சமத்துவம் இருந்தாக வேண்டும்.

சேலத்தில் உள்ள மாக்னசைட் சுரங்கங்களில் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் உயர்தரமுள்ள மாக்னசைட்டையும் 8 சதம், 'சிலிகா' அடங்கிய குறைந்த தரமுள்ள மாக்னசைட்டையும் வெட்டி எடுக்கிறது. 'ரிப்ரேக்டரி' தொடர்பான காரியங்களுக்காக இந்தக் குறைந்த தரமுள்ள மாக்னசைட் பயன்படுத்தப்படுவதில்லை. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 35,000 டன் குறைந்த தரமுள்ள மாக்னசைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு வரவேற்பு அதிகமானால் அதனை மேலும் வெட்டி எடுக்க வாய்ப்புண்டு. கச்சா மாக்னசைட்டில் சிலிகாவுக்கான அனைத்து நாட்டுத் தரம் சுமார் ஒரு சதவீதமாக இருக்க வேண்டும். எனவே, நாம் உற்பத்தி செய்யும் மாக்னசைட்டைப் பயனுள்ள வகையில் மேம்படுத்துவது அவசியம் என்று கருதப்பட்டுள்ளது. அதற்குத் திருவாளர்கள் சுல்ஸர் நிறுவனம் 'சுல்மாக்' என்ற ஒரு முறையை உருவாக்கியுள்ளது. சேலத்திலிருந்து சுமார் 150 டன் கச்சா மாக்னசைட் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. வின்டர்தார் என்னுமிடத்தில் உள்ள ஆலையில் இது பயனுக்கு உரியதாக்கப் பட்டது. சோதனையில் இறுதியாக வரும் மாக்னசைட்டில் 0.5 சிலிகா மட்டும்தான் உள்ளது. ஆண்டு ஒன்றிற்கு 25,000 டன் மாக்னசைட்டைச் செய்முறைப் படுத்தும் திறனுடன் ரூ.25 கோடி செலவில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. அதிக மூலதனம் தேவைப்படும் தொழிற்சாலையாக இருந்த போதிலும் இது ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டும் 'சுல்சர்' தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி மாக்னசைட் ஆலை ஒன்றை அமைக்க நமது அரசும் 'டான்மாக்' நிறுவனமும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நான் ஜூரிச்சில் தங்கியிருந்தபோது, அம் மாநகரில் வசித்து வரும் இந்தியர் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். தமிழ்நாட்டிலுள்ள தொழில்களில் முதலீடு செய்வதைப் பற்றியும் அவர்களுக்கு விளக்கினேன்.

**அடுத்த இதழில் முடியும்**



# ஊனமுற்றோருக்கு உதவுவோம்!..

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
**திருமதி கோமதி சீனிவாசன்**

ஒரு இலட்சிய சமுதாயத்தில் எல்லோருக்கும் சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமுதாயத்தில் எல்லாப் பகுதியினரும் முறையாக முன்னேறுவதற்குரிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதிலும் இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட ஊனமுற்றோர்களுக்கு உரிய வாய்ப்புகளும், முன்னுரிமைகளும், சிறப்புச் சலுகைகளும்,வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தினைச் சமுதாயத்தில் நாம் காணமுடியும்.

இத்தகைய இலட்சிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு தமிழக அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

கண் தெரியாதவர்கள், காது கேளாதவர்கள், கை, கால் குறைவுடையோர்கள் மன வளர்ச்சி குன்றியோர்கள், தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர்கள் ஆகிய பலவகையான ஊனமுற்றோர்களைத் தாங்கள் அறிவீர்கள். அவர்களுடைய உடலிலே குறை இருக்கலாம். ஆனால் உள்ளத்திலே குறை இல்லை. அறிவில் மற்றும் ஆற்றலில் குறையில்லை என்பதனை நாம் அறிவோம். அதையே வாழ்வுக்கு வழிகாட்டும் வள்ளுவப் பெருந்தகை,

'பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவற்றது
ஆள்வினை இன்மை பழி''

என்று கூறுகிறார்..

அதாவது உறுப்புக் குறைவு என்பது பெரும் பழி அல்ல. பாவமும் அல்ல. ஆனால் முயற்சியின்மை தான் பெரும் பழியாகும். உடல் ஊனமுற்றோரிடத்தில் முயற்சிக்குக் குறைவே இல்லை.

இன்றைய சமுதாயம் உடல் ஊனமுற்றோரிடம் மறைந்து கிடக்கும் அறிவாற்றலை உணர வேண்டும். அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு உதவ வேண்டும். நாம் அவர்களிடம் பரிவு காட்ட வேண்டியதில்லை. ஆனால் உறவுக் கரங்களை நீட்டினாலே போதும். அவர்களும் உழைப்பால் உயர வேண்டும். சமுதாயத்தையும் முன்னேற்றுவதற்கு அவர்களால் உதவ முடியும். தமிழக அரசைப் பொறுத்தமட்டில் அவர்களின் பிரச்சனைகளை நன்கு உணர்ந்துள்ளது.

உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981ல் 20 புதிய சிறப்புத் திட்டங்களைத் திட்டி 128 லட்சம் ரூபாய்களை அவர்களின் நலனுக்காகச் செலவு செய்தது. நடப்பு ஆண்டிலும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக 109 லட்சம் ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. 1981-82ல் மட்டும் சுமார் ஊனமுற்றோர் 44000 பேர் பயனடைந்தார்கள்.

கண் பார்வையற்றோர் பள்ளிக்கூடங்கள், காது கேளாதோர் பள்ளிக்கூடங்கள் ஆகிய சிறப்புப் பள்ளிகளின் மூலம் 4400 குழந்தைகள் கல்வி வசதி பெற்று வருகிறார்கள். மேலும் சாதாரணப் பள்ளிகளில் முதல்வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோர்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 25 ரூபாய் தமிழ்நாடு அரசு உதவிப் பணம் வழங்குகிறது.

இதனால் சுமார் 8000 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

பொதுக்கல்வி வழங்கப்படுவதோடு இவர்களுக்குத் தொழிற் கல்வியும் கற்றுத் தரப்படுகிறது. கண்பார்வை இழந்தவர்களுக்கு இயந்திரப் பணியாள், புத்தகம் கட்டுதல், நெசவுத் தொழில், சாக்கட்டி செய்தல் போன்ற பணிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காதுகேளாதவர்களுக்குப் பொறிப்பகுதி பொருத்துபவர் ( Fitter ) மின்கம்பியாளர் (Wire man) போன்ற பணிகளில் பயிற்சி தரப்படுகிறது.

பயிற்சி பெற்ற ஊனமுற்றோரைப் பணியில் அமர்த்தும் பொருட்டு நமது தமிழக அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வரு

கிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் பழகுவதற்காக ஓராண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த ஓராண்டுக் காலத்தில், மாதம் 150 ரூபாய் வீதம் அரசால் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சி முடிந்த பின், இந்த நிறுவனம் அவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்திக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 735 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும் இவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் பொருட்டுக் குறைந்த வட்டியில் வங்கிக் கடனுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. 1000 ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு அரசு மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 10,000 பேர் பயன் பெற்றுள்ளனர். மான்யமாக நமது அரசு 25 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. ஆண்டுதோறும் சுமார் 1600 பேர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஊனத்தினைத் தடுக்கும் நோக்குடன் திருச்சி மாவட்டத்தில் ஒரு சிறப்புத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. இதன்கீழ் குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்தும், முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டு சுமார் 1,32,000 குழந்தைகள் ஊனம் ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம் செயல்படுத்தப்படும் 32 திட்டப் பகுதிகளில் ஊனத்தைத் தடுக்கும் மருத்துவப் பணித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மேலும் சுமார் 1,20,000 குழந்தைகள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6-1-'83-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை).

உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த வகைக்குத் தமிழக அரசு பரிசுச்சீட்டு வருமானத்திலிருந்து 21 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இது தவிர, கை, கால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோர்க்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, தொழிற்பயிற்சி தவசதி, சுயவேலை வாய்ப்பு ஆகிய எல்லா வசதிகளும் ஒரே இடத்தில் வழங்கப்படுவதற்காகச் சென்னையிலும், திருச்சியிலும் 2 நிலையங்கள் ஏற்படுத்தத் தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. இதற்காக 50 லட்சம் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊனமுற்றோர் மறுவாழ்வு என்பது ஒரு சமுதாயப் பிரச்னை. அதனை அரசு மட்டும் முழுமையாகத் தீர்த்துவிட முடியாது. பொது மக்களும் கை கொடுத்து உதவ வேண்டும். தொழில் அதிபர்கள் ஊனமுற்ற நண்பர்களைப் பணியில் அமர்த்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மேலும் முன்வரவேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். அதே போன்று வங்கிகளும், இதர நிதி நிறுவனங்களும் இவர்களுக்குத் தாராளமாகக் கடன் வழங்கி அவர்களது சுயவேலைக்கு ஊக்கமளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நலிந்தோர் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசும், பொது மக்களும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக மேலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம் என்று இந்த நன்னாளில் சூளுரை ஏற்போம். ஊனமுற்ற சகோதர, சகோதரிகளுக்கு என்னுடைய சார்பிலும் அரசின் சார்பிலும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

---



# எல்காட்

## குவார்ட்ஸ் டிஜிட்டல் வாட்ச்



அனைத்து இந்தியாவில் பொதுத்துறையில் உள்ள மாநில மற்றும் மத்திய மின் அணு நிறுவனங்களில், தமிழ்நாடு அரசின் நிறுவனமான எல்காட்தான் முதன்முதலாக டிஜிட்டல் கைக்கடிகாரங்களைத் தயாரித்து, பெருமிதத்துடன் வெளியிட்டுள்ளது.

இந்திய சூழ்நிலைக்கேற்ப பல சிறப்பு அம்சங்கள் கொண்ட இந்தக் கைக்கடிகாரங்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளான ஐப்பான், ஹாங்காங் போன்ற இடங்களில் தயாரிக்கப்படும் கடிகாரங்களின் தரத்திற்கு இம்மியும் குறைந்ததல்ல.



முதல் கட்டமாக, எல்காட் நிறுவனம் 50 ஆயிரம் கடிகாரங்களை - ரூபாய் 150 இலட்சம் மதிப்புள்ளவை-தயாரிக்கும். பின்பு படிப்படியாக, உற்பத்தியைப் பெருக்கி மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட அளவான 2 இலட்சம் கடிகாரங்களைத் தயாரித்து விற்பனை செய்து ரூபாய் 6 கோடி ஈட்டத் திட்டமிட்டுள்ளது.

ரூபாய் 1 கோடி மூலதனம் செய்தால் மின் அணுத் துறையில் 312 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். இது, நீண்ட காலமாக இருந்து வரும் சர்க்கரைத் தொழிலுடனும் (70 பேருக்கு வேலைவாய்ப்பு) பருத்தித் துணி தொழிலுடனும் (133 பேர்) ஒப்பிட்டுப் பார்த்தால் பல மடங்கு அதிகமாகும்.



எல்காட் நிறுவனம் அலுமினியம் எலக்ட்ரோலிடிக் கபாசிட்டர்ஸ், இருவழி கம்பியில்லாத் தொடர்புக் கருவி, ஆய்வு மற்றும் வளர்ச்சிக்காக, சீரிய வானொலிப் பெட்டிகள், தூக்கிச் செல்லக்கூடிய தொலைக்காட்சி பெட்டிகளைத் தயாரித்து குறுகிய காலத்திலேயே, ஈராண்டுக்குள் ரூபாய் 6 கோடி முதல் 7 கோடி வரையான பொருள் ஈட்ட முடிவு செய்துள்ளது.













# திரு.வி.க.வின் சிந்தனைகள்


திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப.,

இயக்குநர்

செய்தி—மக்கள் தொடர்புத் துறை.


தமிழாய்ந்த மாமுனிவர் திரு. வி. க. மனிதன் வாழும் முறைகளை உலகுக்குத் தந்தருளினார். அவைகளைத் தானே ஏற்று வாழ்ந்தும் காட்டினார். ''தமிழினைப் போல் உயர்ந்த மொழி தரணியில் வேறெங்குமில்லை. தமிழனைப்போல் மொழிக் கொலையில் தலைசிறந்தோர் எவருளரே'' என்று அறுதியிட்டு உறுதியாக உரைக்கிறார். பண்டைத் தமிழ்மக்கள் உரை நடையில் அவருக்குப் பெரும் பற்றுண்டு. பிற மொழிக் கலப் பின்றித் தமிழ் பேசல் வேண்டும், எழுதல் வேண்டும் என்னும் ஆர்வமும் அவர்க்குண்டு. எனவே தான் வீட்டின்பத்தில் வெறுப்பும், தமிழ்நாட்டில் பலமுறை பிறவி தாங்கித் தொண்டு புரிவதில் விருப்பும் அவருக்கு நிகழ்ந்தன என்கிறார்.

அவரது தமிழ்க் காதல் கரையிலாதது. தமிழர்கள் தாய்மொழியில்தான் பொதுக்கூட்டங்களில் பேசுதல் வேண்டும். அயல் மொழியில் பேசுதல் கூடாது, எவரேனும் அயல்மொழியில் பேசப் புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டுமென்று வலியுறுத்தி, தீர்மானங்கள் நிறைவேற்ற உதவி புரிந்து, பல்லாற்றானும் தொண்டாற்றினார். இறந்த காலத்தின் தன்மைகளைச் சரித்திரக் கண்கள் வாயிலாகவும், கற்பனா சக்தி மூலமாகவும் கண்டால், இந்தச் சூரத்தனமான பணியின் செம்மாந்த சிறப்புத் தெரியும். புத்தகம் எழுதினார், மொழிவளர வேண்டுமென்ற ஒரே உயரிய நோக்கில் தான், நல்ல கருத்துக்கள் வலம் வரவேண்டும் என்ற தீர்க்கமான எண்ணத்தில்தான். பணம்பண்ண வேண்டும் என்ற எண்ணமே கிஞ்சித்தேனும் கிடையாது.

ஆங்கில நாட்டு இலக்கிய மன்னன் என்று போற்றப்படும் டாக்டர் ஜான்சன், உயிர் பெற்று தமிழகம் வந்து தமிழ்த்தென்றலின் இச்சீரிய செயலை அறிந்திருந்தால், தான் சொன்னது, முட்டாளைத் தவிர வேறு ஒரு மனிதனும் பணத்தைத் தவிர வேறு ஒன்றிற்காகவும் எழுதுவது இல்லை என்றுதான் இயம்பியது எவ்வளவு தவறு என்று மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயப்பட்டிருப்பார்.



எனினும் விதிவிலக்குகள் விதியை நிரூபிக்கின்றன என்று அறைந்து இறும்பூது எய்தியிருப்பார்.

விரல் விட்டு எண்ணக்கூடிய இப்படிச்சில விதிவிலக்குகள் நம் தமிழகத்தில் இருந்தன என்பது பெருமிதமான பழைய வரலாறு தான்.

திரு. வி. க. வின் கருத்துக்கள் ஒளவையார் ஆத்தி சூடி போன்று பிஞ்சு நெஞ்சங்களில் பெரிய எண்ணங்களை விதைக்கின்றன.

"ஆக்கத் தொழிலில் ஊக்கம் வேண்டும்
ஈரம் சுரக்கும் வீரம் வேண்டும்
உலகொரு குலமெனும் உணர்வு வேண்டும்"

''சிந்தனை செய்க, சிந்தனை செய்க
எந்தப் பொருளையும் சிந்தனை செய்க
சிந்தனை ஆய்வை உந்துதல் உறுதி

சிந்தனை செய்க, சிந்தனை செய்க
வளர்ச்சி என்றே உணர்ச்சியில் படுமே''

—''வளர்ச்சியும், வாழ்வும்''

சிந்தனையில் முனைந்தால் தான் உலகம் உய்ய உரிய வழி பிறக்கும். அருளறமும் பொருளறமும் பெருகும். அறம் கொழுத்தால்தான் அகிலத்தில் அன்பும் அமைதியும் செழிக்கும், இன்பமும் இனிமையும் தவழும்; கூடி வாழும் மனித சமுதாயத்தின் ஆன்மா அறம். அறம் அழிந்தால் இந்தச் சமுதாயத்தின் கட்டுக் கோப்பே தகர்ந்து விடும். அதனால்தான் திரு. வி. க. அறத்தின் பெருமையை விரித்துரைக்கிறார்.

அறத்திற்கு அடுத்த இடம் தொண்டு. திரு. வி. க. இரண்டு கண்களெனப் போற்றியவை

அறமும் தொண்டும் ஆகும். தொண்டு செய்தால் அறம் துலங்கும். தொண்டு உள்ளம் அறச் சிந்தனை சுரக்கும் கேணி. அறம், தொண்டு இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டை வாழைகள். பிரிக்க இயலாதவை. அறவாழ்க்கையின் அடையாளமே தொண்டு தான். தொண்டே இறைவழிபாடு. இறைபோற்றும் நிறை வழிபாடும் அதுவே.

ஆசை, பித்து இதெல்லாம் துன்பத்தை விலைக்கு வாங்குவதாகும். வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கை நடத்து. அதைமிஞ்சிய வாழ்வுக்கு ஆசைப்படாதே. தேவைக்கு மேல் தேவை இல்லை என்ற தத்துவம் வாழ்க்கைமுறையானால் உலக நலிவுகள் பெருமளவு நீங்கிப் போகும்.

தனி மனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றை வலியுறுத்துகிறார், திரு. வி.க.

**கற்றபடி ஒழுகு. கற்றபடி நட. அதுதான் கல்வியின் பயன். பருவத்தே பயிர் செய் என்பார்கள். கல்விப் பயிர் செய்ய வேண்டிய பருவம் இளமைப்பருவம்.**

பெற்றோரைப் போற்றி மதித்தல்-நெஞ்சில் நிலை நிறுத்த வேண்டிய போதனை இது. சன்றோரைப் போற்றி மதிக்காதவன் உலகில் வேறு எதையும் போற்றி மதிக்க அறியான். குருவும், தெய்வமும் வணக்கத்திற்குரியவர்கள். அவர்களுக்கும் முன்னர் வணங்கப்பட வேண்டியவர்கள் மாதா, பிதா என்பதை மறவாதே.

மண வாழ்க்கையில் அன்பு வேண்டும்;அன்பும்அறமும் இல்லா மணவாழ்க்கை நரக வாழ்க்கை. கணவனும், மனைவியும் உயிர், உடல் போன்று ஒன்றிடல் வேண்டும். எளிய வாழ்வு, எளியஉணவு, எளிய உடை-இவையே வாழ்க்கை வெற்றியின் ரகசியங்கள்.

போலித்துறவு வாழ்க்கை வேண்டா, இல்லறத்தோடு இயைந்து வாழ். அதுதான் வாழ்வின் சிறப்பு.

பிறர் துன்பத்தை உன் துன்பமாகக் கருது. உன் உதவிக்கரங்களை நீட்டு. துன்பச் சகதியில் சிக்கித் தவிப்போரைக் கை தூக்கிவிடு. அதுவே உனது துன்பத்தைப் போக்கிக்கொண்டதாகும்.

அன்பு, அடக்கம், உள்ள நிறை உண்மை, சுருங்கக்கூறின் திரு. வி. க. காட்டிய வாழ்க்கைப் பாதைகள், வாழ்வின் முறைகள், ஒவ்வொரு மனிதனும் பின்பற்றி நடக்கத்தக்கவை. அவரே சிரமேற்கொண்டு வாழ்ந்து காட்டியவை. சொன்னதைச் செய்தது, செய்ததைச் சொன்னது, இது தான் அவரின் தனிச்சிறப்பு. அப்பழுக்கற்ற வாழ்வு வாழ்ந்தவர், பலர் வாழத்தான் வாழ்ந்தவர். தன்னலம் கருதாத பெருந்தகையாளர். அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிகள் சமுதாயப் பிணிகள் நீக்கிடும் அருமருந்து. மானுடம் பெற்ற பெரும் பேறு. அவர் விட்டுச் சென்றதைத் தொட்டுச் சென்றால் உலகம் உய்யும். இது நிச்சயம், நிச்சயம் நிச்சயம்.



* * * *

தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஓர் அறிவார்ந்த ஆன்மீகச் சிந்தனையாளர். விஞ்ஞான யுகத்தின் அறைகூவல்களுக்கு சடு கொடுத்த சன்மார்க்க நெறியாளர். அறிவையும், ஆன்மீகத்தையும் இணைத்த புதுமையாளர். பழமைக்கும், பகுமைக்கும் பாலமாகத் திகழ்ந்த பண்பாளர். அவர் பழமையில் மலர்ந்த புதுமை மலர். பழமை எனும் தாய் சன்ற சேய்தான் புதுமை. இன்றைய புதுமை நாளைய பழமை என்றார். பழமையின் பெயரால் அறிவை ஒதுக்குவதையும் புதுமையின் பெயரால் அறியாமைக்கு ஆளாவதையும் சாடினார். அறிவு பூர்வமான ஆன்மீகமே மனிதனைத் துன்பக் கடலிலிருந்து மீட்கவல்லது என வாதித்தார். அறிவும், ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று பகை அல்ல என்று பகர்ந்து, அறிவில் ஆன்மீகத்தையும் ஆன்மீகத்தில் அறிவையும் கண்டார்.

இயற்கையே ஆன்மீகத்தின் ஆன்மா. இயற்கையைப் போற்றி வணங்குவதே இறை வணக்கம். திரு. வி. க. வின் இறைக் கொள்கை பகுத்தறிவின்பாற்பட்டது. பகுத்தறிவு இல்லாத ஆன்மீகம் மூடத்தனம். ஆன்மீகம் இல்லாத பகுத்தறிவு அரக்கத்தனம். பகுத்தறிவு மூளைக்கு, ஆன்மீகம் ஆன்மாவுக்கு என்று கண்டவர் தமிழ்த் தென்றல்.

அறிவையும், ஆன்மாவையும் பக்குவப்படுத்துவதே சமயம். சமயம் என்ற வார்த்தைக்குப் பக்குவப்படுதல் என்பதே பொருள். மனிதனை மனிதனாக வாழப் பக்குவப்படுத்துவதே சமயங்களின் நோக்கும் போக்கும் ஆகும். நெறி தவறா வாழ்க்கை, நேர்மை தவறா வாழ்க்கைக்கு ஆகியவற்றுக்கு வழிகாட்டியாகச் சமயங்கள் விளங்க வேண்டும். பாதைகள் பலவானாலும் மார்க்கங்கள் வேறுபட்டாலும் நோக்கம் ஒன்றே.

திரு. வி. க. சமரச சன்மார்க்க சான்றோர். மனிதனை ஒன்றுபடுத்தும் மதமே அவரின் மதம். மதத்தின் பேரால் ரணகளங்களும் ரத்தக்களங்களும் தோன்றுவதே ஆன்மீக நெறிகளுக்கு முரண்பட்டவை. அதனால்தான் சமயங்களுக்கிடையே சமரசம் தோன்ற வேண்டுமென எண்ணினார். சமரச சன்மார்க்கமே மனிதனை ஒன்றுபடுத்த வல்லது என்று திடமாக நம்பினார். எல்லாச் சமயங்களிலும் அவர் பொது அம்சங்களைப் பார்த்தார். எல்லாத் தெய்வ வரலாறுகளிலும் பொதுத் தன்மைகளைக் கண்டார். முகமதுவின் தெய்வ ஒருமை, கிறிஸ்துவின் அன்பு, புத்தரின் தர்மம், அருகரின் அகிம்சை, கிருஷ்ணனின் நிஷ்காமியம், தட்சணாமூர்த்தியின் சாந்தம், முருகனின் அழகு எல்லாம் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை என்று அவர் கண்டவை, கண்டு விண்டவை, தானே பின்பற்றியவை. சமரச சன்மார்க்கம் பாரெங்கும் பரவவேண்டுமென விழைந்தார். சமரச சன்மார்க்கம் தழைத்திட்டால் உலகெங்கும் மகாத்மா காந்தி, வள்ளலார், திருவள்ளுவர் உலா வருவர்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

# தேவையும் சேவையும்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாடினார் உலக மகாகவி பாரதியார். அவர் கூற்றுக்குச் செயல் வடிவம் கொடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உழவர்களுக்கும், மற்றும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் வேண்டிய நிதி உதவி செய்து அவர்கள் வாழ்க்கை மேம்பாடடையச் செய்கிறது, திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி. இவ்வங்கி 12.4.1918ஆம் ஆண்டு தனது சேவைப் பணியைத் துவங்கி கடந்த 64 ஆண்டுகளாகச் செவ்வனே ஆற்றி வருகிறது.

இதன் தலைமையகம் நெல்லையில் பொருனையாற்றங்கரையில் அமைந்துள்ளது. மாவட்டம் முழுதும் 26 கிளைகளையும், பேட்டையில் தென்னிந்தியாகூட்டுறவு நூற்பாலையில் ஒரு விரிவாக்கக் கிளையையும் கொண்டு இவ்வங்கி செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் தலைமை நிறுவனம் திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி. இந்த வங்கி மக்களுடைய வங்கி; மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் வங்கி. இதன் சொந்தக்காரர்கள் 950க்கு மேற்பட்ட இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள். இதில் பங்குகள் எடுத்துள்ள அனைத்து உறுப்பினர்களும்- ஒவ்வொரு உறுப்பினரும் எத்தனைப் பங்குகள் எடுத்துக் கொண்ட போதிலும், சம பங்குதாரர்களேயாவர். எனவே, இலாபம் கருதாது, சேவையே நோக்கமாகக்கொண்டு, எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும் என்ற கூட்டுறவுச்சமத்துவக் கொள்கையைச் செயல்படுத்தி, மக்களுக்குக் குறிப்பாக நலிந்த பிரிவு மக்களுக்கு மகத்தான சேவையை இந்த வங்கி ஆற்றிவருகிறது.

வழக்கமான வங்கியில் பணிகளான வைப்புகள் சேகரித்தல், வாடிக்கையாளர்களுக்கு வங்கி வசதிகள் அளித்தல் மட்டுமல்லாது, மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு, வாழ்க்கை வளத்துக்கு, கடன் வசதிகளை நியாயமான வட்டி விகிதத்தில் வழங்கி வருகிறது இந்த வங்கி.

இந்த வங்கி விவசாய சேவைச் சங்கங்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனம், கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு நகர வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், பிரதமக் கூட்டுறவுப் பண்டக சாலைகள், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கிளைகள் மூலம் நகைக் கடன் என்ற வகையில் இதுவரை வழங்கியுள்ள கடன் தொகை மொத்தம் ரூ. 1537.13 இலட்சம் ஆகும்.

வங்கியின் வைப்புகள் ஆண்டுக்கு ஆண்டு கணிசமாக வளர்ந்து வருகின்றன. தற்போது ரூ.12.00 கோடி அளவுக்கு இவ்வங்கி வைப்புத்தொகை சேகரித்துள்ளது. ஆண்டுதோறும் வைப்புநிதி அதிகரித்துவருவது மக்கள் இவ்வங்கியின்மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பெரிதும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலத்துக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது இந்த வங்கி.

கூட்டுறவுச் சங்கங்கள், வெறும் பொருளாதார மேம்பாட்டு நிறுவனங்கள் மட்டுமல்லாது சமூக நல மையங்களுமாகும். நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி மத்தியக்கூட்டுறவு வங்கி பல்வேறு சமூகநலப் பணிகளையும் ஆற்றி வருகிறது. அவை பின்வருமாறு:

உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு முடநீக்க கருவிகளை நன்கொடையாக அளித்தது. நெல்லை மருத்துவமனையின் எலும்பு



அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவையொட்டி உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு வங்கி நன்கொடை வழங்கிய முடநீக்கக் காலணிகளை நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.என்.ஸ்ரீரா, ஐ.ஏ.எஸ். அவர்கள் அளிக்கிறார்.

முறிவுச் சிகிச்சைப் பிரிவிற்குத் ( orthopaedic ) தசை இயக்கிக் கருவியை (Muscle stimulator) நன் கொடை அளித்தது. 'போலியோ' பிணியிலிருந்து சிறார்களைக் காக்க 'போலியோ' தடுப்பு ஊட்டு மருந்தை நெல்லையி லுள்ள சிறார்களுக்கு ஊட்ட குழந்தைகள் நலப் பாதுகாப்பு முகாம் நடத்தப்பட்டது. தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத் திற்கு ரூ.10000 நன்கொடை அளிக்கப்பட்டது. எட்டையபுரத் தில் நடைபெற்ற மகாகவி பாரதி யாரின் நூற்றாண்டு விழாவில் கவின்மிகு அலங்கார வளைவு அமைத்து வங்கி பங்குகொண்டது. 1981 மற்றும் 1982ஆம் ஆண்டு களில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு வார விழாக்களில் வங்கி ஊழியர்கள் இரத்த தானம் செய்தனர். புளியங்குடியில் கல வரத்தால் பாதிக்கப்பட்ட நெச வாளர்களுக்குப் புதிய தறிகள் வாங்கி தொழில் துவங்க உடனடி நிவாரணமாக ரூ. 0.60 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டு, பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத, புதிய கடன் களைப் பெறத் தகுதியிழந்திருந்த விவசாயப் பெருமக்களின் கடன் சுமைகளை நீக்கவும், அவர்கள் புதிய கடன்கள் பெற உதவும் வகையிலும் தமிழக அரசு நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை இவ்வாறு தள்ளு படி செய்த பயிர்க் கடன்கள் ரூ. 4.34 கோடிகள் ஆகும்.

சென்ற ஆண்டு (1981-82) நெல்லை மாவட்டத்தில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறிய விவசாயிகளுக்கு மற்றும் மிகச்சிறிய விவசாயிகளுக்கும் முறையே 25 சதவிகிதம், 33 1/3 சதவிகிதம் விலையைக் குறைத்து உரம், பூச்சிமருந்துகள் விநியோ கம் செய்யப்பட்ட வகையில் தமிழக அரசு இம்மாவட்ட விவ சாயிகளுக்கு அளித்த மானியம் ரூ. 7.41 இலட்சங்கள் ஆகும்.

வேளாண்குடிப் பெருமக்க ளுக்குக் கடன்கள் வழங்குதலோடு அவர்கள் தேவை நிறைவு பெறா தென்பதைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய விளைபொருட் கட்கு நல்ல விலைகளைப்பெற் றுத் தருவதுதான் அவர்களு டைய பொருளாதார முன்னேற் றத்திற்கு வழிகோலும் என்ற பெருநோக்கோடு, தமிழக அரசு தற்பொழுது உற்பத்தியாளர்கூட் டுறவு சங்கங்களை அமைக்கின் றது. நெல்லை மாவட்டத்தில் தற்போது கருங்குளம் மற்றும் திருவேங்கடம் பகுதிகளில் இத் தகைய உற்பத்தியாளர் கூட்டுற வுச்சங்கங்கள் அமைக்கப்படுகின் றன.

தேவைகள் முடிவுறுவதில்லை. தேவைகள் உள்ளவரை சேவை யும் அவசியம்; அதிலும் இலாப நோக்கற்ற கூட்டுறவு சேவை மனி தனின் பொருளாதார மேம்பாட் டுக்கு, சமுதாய நல்வாழ்துக்கு மிக மிக அவசியம். எனவே, திரு நெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கியின் கூட்டுறவு சேவை, காலமுள்ளவரை தேவையான சேவை. அச்சேவை தொடர் கிறது.


**இரா. தங்கவேலு,**
**இணைப் பதிவாளர்/**
**தனிஅலுவலர்,**
**திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி.**




# பாங்காய் வளரும் பட்டுத்தொழில்!

**தி**ருநெல்வேலி மாவட்டத்தில் பட்டு வளர்ப்புப் பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின் றன. பட்டு வளர்ப்புத் தொழிலைத் தீவிரப்படுத்தும் நோக்கத்தோடு, இந்த ஆண்டு 500 ஏக்கரில் புதிதாக மல்பரி பயிரிடத் திட்டமிடப்பட்டது. 1982 டிசம்பர் 328.70 ஏக்கரில் புதிதாக மல்பரி பயிரிடப்பட்டுள் ளது.

மல்பரி நடுகை செய்வதற்குப் புதுரக விரிய எம் 5 விதைக் குச்சிகள் சேலம், இராசிபுரம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு விவசாயி களுக்கு விநியோகம் செய்யப் பட்டு வருகிறது. 1982 டிசம்பர் வரை 101 லாரி நிறைய விதைக் குச்சிகள் விவசாயி களுக்கு விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 210 விவசாயிகள் புதிதாக மல்பரி பயிரிட்டுள்ளனர். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 137 இளைஞர்களுக்குப் புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின் றது.

திட்டப்பணியின் கீழ் 45 விவ சாயிகளுக்குப் புழு வளர்ப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வரு கின்றது.

குற்றாலத்தில் உள்ள அரசு கலப்பின வித்தகத்தில் 1982 டிசம்பர் 45930 முட்டைத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

செங்கோட்டையில் உள்ள அரசு பட்டுப் பண்ணையில் 1982 டிசம்பர் வரை 3.06 இலட்சம் உள்நாட்டின் விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு முட்டை தயாரிப்பிற்காக குற்றாலம் கலப்பின வித்தகத் திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே காலத்தில் 2056.360 கிலோ பட்டுக்கூடுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளது. 113.010 கிலோ கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



# திருநெல்வேலித் துணுக்குகள்

திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி அருகே உள்ளது பருத்தி-சிறுதானிய ஆராய்ச்சி நிலையம்.

1901ல் துவக்கப்பட்ட இந்த நிலையம் 160 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதாகும். சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கோயில்பட்டி நெட்டைச் சோளம் போன்றவற்றின் விதை ஆராய்ச்சிப் பண்ணையாக இது விளங்குகிறது.

பெண்கள் 120 பேர்களும், ஆண்கள் 35 பேர்களும் அலுக்காமல் விவசாயப் பணியாற்றும் இங்கே இன்னொரு முக்கியப் பயிர் விளைச்சல் சூரியகாந்தி.

நெல்லை மாவட்டத்தில் ஓடும் 'கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டவுன் பஸ்'களில் பெண்களுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆண்களைப் ''பின்னால் போ, பின்னால் போ!'' என்கிறார்கள்.

''ஓடி விளையாடு பாப்பா—நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா..''

என்று பாடிய தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த நெல்லை மாவட்ட இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலே பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனவே, 1981-82ல், 14வது பொங்கல் வார விளையாட்டுப் போட்டிகளிலும், 1981-82 குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று வெற்றிவாகை சூடிய மாணவர்களுக்கு மானியத் தொகையாக ரூ. 600 மற்றும் ரூ. 400 தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

1981-82-ல், இளமையில் தெரிந்தெடுத்தல் என்ற திட்டத்தின்படி கோவையில் நடைபெற்ற மாநில தடகளப் போட்டியில் நெல்லை மாவட்டக்குழு 'சாம்பியன்' பட்டம் பெற்றது.

பெரியார் மாவட்டத்தில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியிலே நெல்லை மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கே வெற்றிக் கோப்பை கிட்டியது.

இந்த ஆண்டு (1982-83) மாநில அளவிலான பொங்கல் வார விளையாட்டு விழா பாளையங்கோட்டை அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

நவதிருப்பதி எனப்படும் ஆழ்வார்திரு நகரியில் உள்ள புளியமரம் 'உறங்காப் புளி' எனக் குறிப்பிடப்படுகிறது. எல்லாப் புளிய மரங்களும் போல இந்த மரம் இரவில் உறங்குவதில்லையாம்; அதாவது இலைகள் தூங்கி வழிவதில்லையாம்! அதனருகே உள்ள ஒரு மண்டபத்தில் 108 வைணவத் தலங்களிலும் உள்ள மூலவர் விக்கிரகங்கள் வடிக்கப்பட்டுள்ளன கல்லில்! எல்லாத் தலங்களுக்கும் செல்ல இயலாதவர்கள், இங்கே வந்து எல்லாத் தலத்தையும் கண்டு தொழலாம்!

திருநெல்வேலி நகர் வாழ் பெருமக்களின் ஒரே குறை 'Number Dialing Telephone இன்னும் வரவில்லையே' என்பது!

திருநெல்வேலி விரைவிலேயே மாநகராட்சி ஆகலாம்; அதற்கான வாய்ப்புக் கூறுகள் தமிழக அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன!

# மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!





நாதசுர இசை என்றால் உடனே நம் நினைவுக்கு இப்போது வருபவர் காருகுறிச்சி அருணாசலம் ஆவார். நெல்லை மாவட்டத்தில் உள்ள அவர் பிறந்த காருகுறிச்சியில் மண் பாண்டத் தொழில் மேம்பட்டு வருகிறது.

இங்குள்ள காருகுறிச்சி மண் பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம், 30அங்கத்தினர்களைக் கொண்டு, ரூ. 820 பங்குத்தொகையுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 64 அங்கத்தினர்களைக் கொண்டு ரூ. 20,980 பங்குத்தொகையுடன் இச்சங்கம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது.

ஆரம்ப காலத்தில் ரூ. 10,000 செலவில் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் ஒன்று கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு, இச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு நவீன மண்பாண்ட முறைகளைப் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1968ல் கதர் கிராமத்தொழில் கமிஷன், தமிழகக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக ரூ. 20,000 செலவில் மூலப் பொருட்கள் மற்றும் விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்காக, மாவட்ட மண்பாண்டப் பொதுப்பணி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பொதுப்பணி நிலையம் மூலம் இம்மாவட்டத்திலுள்ள மண் பாண்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலப்பொருட்கள் வழங்கியும், சங்கங்களில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி விற்பனை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. 1972ல் தமிழகக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக ஓடு மற்றும் செங்கற்கள் உற்பத்தி நிலையம் ஒன்று ரூ. 30,000 செலவில் ஆரம்பிக்கப்பட்டு இங்குள்ள அங்கத்தினர்களுக்கு முழு நேர வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டன.



கேரளா, செவ்வாய்ப்பேட்டை போன்ற மண்பாண்டப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வந்த வல்லுநர்களால், இப்போது இங்கே காய்கறி குளிர் பாத்திரம், கூஜாக்கள், தண்ணீர் பீப்பாய்கள், புகைபோக்கி அடுப்புகள், பொம்மைகள், பலதரப்பட்ட பூந்தொட்டிகள் இதர அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்களுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் இச்சங்கத்தில் மின்விசையினால் இயங்கும் 14 சைலா சக்கரங்கள் இயங்குகின்றன. இதற்குமுன் ரூ. 3 முதல் 7 வரை சம்பாதித்தவர்கள் தற்பொழுது சைலா சக்கரத்தின் மூலம் நவீன முறைகளைக் கையாண்டு இரட்டிப்பு உற்பத்தி செய்து பத்து ரூபாய்க்கு மேல்



வருவாய் பெறுகிறார்கள்.

மேலும், 25 மெம்பர்களுக்குக் கடன் ரூ. 36,250ம், மான்யம் ரூ. 36,250ம், கொடுக்கப்பட்டுள்ளது. சங்கத்திற்குக் கதர் கிராமத்தொழில் கமிஷனும், தமிழகக் கதர் கிராமத்தொழில் வாரியமும் தேவையான நிதி உதவிகளையும் தொழில் நுட்ப ஆலோசனையும் கொடுத்து வருகிறது. இதனால் சங்கம் நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம்-தென்காசி வட்டம் தேன்பொத்தையிலும்மண்பாண்டத்தொழில் மேம்பாடடைந்து வருகிறது. இங்குள்ள மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் 51 அங்கத்தினர்களைக் கொண்டு ரூ.1500பங்குத் தொகையுடன் துவக்கப்பட்டது. தற்பொழுது 68 அங்கத்தினர்களைக் கொண்டு மூலதனம் ரூ. 25,590 பங்குத்தொகையுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

அங்கத்தினர்களிடம் உற்பத்தி ஆகும் மண்பாண்டங்களைச் சங்கத்தின் மூலம் நேர் முகமாகக் கொள்முதல் செய்யப்பட்டு 10 சதவீதம் இலாபத்துடன் சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இச்சங்கத்தில் உற்பத்தியாக்கும் மண்பாண்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் அண்டை மாநிலமாகிய கேரள வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு 19,500 மானியமும், 27,500 கடனும் தமிழ்நாடு கதர்கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டது. அதன்பின் மெருகு மண்பாண்ட வேலைவாய்ப்பு அதிமாயிற்று. இச்சங்கம் தமிழகத்தில் மெருகு மண்பாண்டத்தைக் கூட்டுறவுத்துறை மூலம் உற்பத்தி செய்வதில் முதன்மை பெற்றது ஆகும். மெருகு மண்பாண்டப் பிரிவில் இங்கு சுமார் 30 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

மெருகு மண்பாண்டத்தில் ஜாடிகள், கிண்ணங்கள், பொம்மைகள் மற்றும் இந்திய கழிவுரைக் கோப்பைகள் போன்றவைகள் உற்பத்தி செய்யப்பட்டுப் பெரும்பான்மைக் கதர் அங்காடி மற்றும் சர்வோதய சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இச் சங்கம் 1981-82ஆம் ஆண்டில் 5,34,000 ரூபாய்க்கு விற்பனை செய்து ரூ. 27,208க்கு நிகர லாபம் சட்டி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேன்பொத்தை சங்கம், கடந்த 1980-81, 1981-82, இரண்டாண்டுகளிலும் தமிழகத்தில் தலைசிறந்த மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் என்று கருதப்பட்டும், இரண்டாண்டாக, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் கேடயம் பெற்றும் வருதுள்ளது.

இச்சங்கத்திற்குத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் 33 அங்கத்தினர்களுக்கு ரூ. 37,000 மானியமும், ரூ. 70,200 கடனும் தரப்படடுள்ளது. மேலும் அங்கத்தினர்கள் ஐந்து பேருக்குச் சைலா சக்கரமும் இங்கே வழங்கப்பட்டு உள்ளது.

சங்கத்திற்கு மொத்தத்தில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் ரூ. 1,56,703 மானியமும் ரூ. 3,98,295 கடனும் வழங்கப்பட்டுள்ளது.



நெல்லைப் பகுதியில் மட்டுமே சிறப்புற்றிருக்கும் பூவிலாச்சுண்டன் என்ற வாழை, பூ இல்லாமலே காய்க்கும் என்கிறார்கள்:

அலைமோதா சமுத்திரங்கள் ஐந்துள்ளன நெல்லை மாவட்டத்தில். அம்பா சமுத்திரம், கோபால சமுத்திரம், வடமலை சமுத்திரம், இரவண சமுத்திரம், ரெங்க சமுத்திரம் ஆகியவையே அவை!

—ராஜா

## நெல்லை மாவட்டச் சிறப்புகள்!

தஞ்சை மாவட்டத்தில் கோயில்கள் அதிகமிருக்கலாம்; ஆனால் சிற்பச் சிறப்பு மிக்க கிருஷ்ணாபுரம், கழுகுமலை, தென்காசி, திருமலாபுரம் ஆகியவை நெல்லை மாவட்டத்திலேதான் இருக்கின்றன!

தூத்துக்குடி உப்பில் பெரும்பகுதி ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது!

கருங்குளம் என்ற கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில், எல்லாச் சமயத்தினரும் வழிபடுவதாக இருக்கிறது!

கைலாசமும், வைகுண்டமும் இங்குள்ளன. ஆம்; கங்கைகொண்டானில் கைலாசநாதரும், ஸ்ரீ வைகுண்டத்தில் வைகுந்த நாதரும் இந்த மாவட்டத்திலேதான் மும்மூர்த்திகளாக விளங்குகிறார்கள்.





# நெல்லையின் ஜீவ நதி

திருநெல்வேலி மாவட்டத்தின் ஜீவநதியாக அமைந்துள்ளது தாமிரபரணி நதியாகும். நெல் விளையும் பழனங்கள் சூழ்ந்த பகுதியானதால் திருநெல்வேலி எனப் பெயர் பெற்றது. அப்பெயர் காரணத்திற்கும் மூலமாய் அடைந்தது, தாமிரபரணியே.

தாமிர வண்ணப் படுகைப் பரப்பினைக் கொண்ட காரணத்தினால் தாமிரபரணி என்றாயிற்று எனக் கூறுவர். இந்நதியின் பண்டைப் பெயர்தான் பொருநை என்பதாகும். 'தண் பொருநை' என்னும் சொல்லே தாம் பொருணி, தாம்பரணி, தாமிரபரணி என மருவிற்று எனக் கொள்ளுதலே ஏற்ற விளக்கமாகும்.

தமிழ்மொழி தோன்றிய இடம் பொதிகை என்பர். அகஸ்திய கூடமலை என்பதும் அதுவே. பொதிகை மலையினின்றும் உற்பத்தியாகி 75 மைல் ஓடி புன்னைக்காயல் என்னுமிடத்தில் மன்னார் வளைகுடாவில் கலக்கிறது. தாமிரபரணியும் அதன் கிளை நதிகளும் 1750 சதுர மைல் பரப்பின் வடிநீரை ஏந்தி வரும். திருநெல்வேலி மாவட்டத்தின் நடுவாய் அமைந்துள்ள இந்நதி இருமருங்கினையும் வளமுறச் செய்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையினின்றும் உற்பத்தியாகின்ற காரணத்தால் தென்மேற்குப் பருவ்மழையும் இந்நதிக்குப் பயன்தரும். வடகிழக்குப் பருவமழையே மிகுதி பலன் தருவது.

காட்டுப் பகுதியில் பேயாறு, வெள்ளாறு, காரையாறு, சேர்வலாறு, பாம்பாறு என்பன தாமிரபரணியுடன் சேர்கின்றன. மணிமுத்தாறு ஓர் முக்கிய கிளை நதியாகும். இராமநதி, ஜம்புநதி, கடனாநதி ஆகியவை ஒன்றாக இணைந்து வராகநதியென இணைகிறது. பச்சையாறு தருவைக்கருகே தாமிரபரணியில் கலக்கிறது. தாமிரபரணியின் பிரதான கிளை சிற்றாறு ஆகும். சுற்றுலாச் சிறப்புமிகு குற்றாலம் மலைகளில் உற்பத்தியாகி 17 அணைக்கட்டுகள் மூலம் இருபக்க நிலங்களுக்கும் பாசனமளித்துப் பின் சீவலப்பேரியில் தாமிரபரணியில் கலக்கிறது.

கார் க்காலத்தில் பலன்தரும் பயிர் கார் பயிர் எனப்படுகிறது. தென்மேற்குப் பருவமழையினால் கார் பருவம் வளம் பெறும். வடகிழக்குப் பருவமழைப் பயனால் ஏற்றப் பெறும் பயிர் பாசனம் எனப்படுகிறது. பின் பனிப் பாசனம், பிசானம் என மருவிற்றாதல்வேண்டும்

மழைக் காலங்களில் வீணாகும் தண்ணீரைத் தேக்கி மின்சார உற்பத்திக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. 5,500 மில்லியன் கன அடி கொள்ளளவினைக் கொண்ட பாபநாசம் அணை 1944-ல் செயல்படத் துவங்கிற்று. இதற்குத் துணையாய் 1225 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு நீர்த்தேக்கத் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது. பாசனத்திற்கென்றே ஏற்படுத்தியுள்ள நீர்த்தேக்கம் மணிமுத்தாறு ஆகும். இஃது 1957-ல் நிறைவுற்றது. இதன் கொள்ளளவு 5511 மில்லியன் கன அடியாகும். மணிமுத்தாறு நீர் வீழ்ச்சியும், பூங்கா முதலிய அமைப்புகளும் உல்லாசப் பயணிகளைக் கவரும் சிறப்பின. 350 மில்லியன் கன அடிக் கொள்ளளவு கொண்ட கடனா நீர்த்தேக்கமும், 182 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இராமநதி நீர்த்தேக்கமும் பாசனத்திற்கேற்ப அமைக்கப் பெற்றுள்ளன.

தாமிரபரணி நதியின் குறுக்கே கட்டப்பெற்றுள்ள எட்டு அணைக் கட்டுகள் மூலம் கால்வாய்களும் கால்வாய்கள் மூலம் குளங்களும் பாசனம் பெறும் கடைசி அணை ஸ்ரீவைகுண்டம் அணையாகும். அதற்கு மேல் உள்ள ஏழு அணைகளும் பாறைகள் மேல் கட்டப் பெற்றுள்ள பழைய அணைகளாகும். மருதூர் அணைக் கட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

தாமிரபரணியாற்றின் எட்டு அணைக்கட்டுகள் மூலம் 86,000 ஏக்கர் நன்செய் நிலம் பயன் பெறுகிறது. மணிமுத்தாறு கால்வாய் மூலம் 22,800 ஏக்கர் பயன் பெறும். மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் 80 அடி மட்டத்தில் மணிமுத்தாறு தலைவாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. மிகுதியும் நெற்பயிர்தான் பயிர் செய்யப்படுகிறது. 5·/. பகுதிகளில் வாழை வெற்றிலை போன்ற பணப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

தூத்துக்குடித் துறைமுகம் விருத்தி செய்யப்பட்டதனைத் தொடர்ந்து தொழில் விருத்தி மிகவும் முன்னேறி வருகிறது. ஸ்பிக் உரத்தொழிற்சாலை அனல் மின்உற்பத்தி நிலையம் மற்றும் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. இத்தொழில் வளத்திற்கும் தாமிரபரணி உறுதுணை புரிகிறது. நாடோறும் 20 மில்லியன் காலன் தண்ணீர் விடப்படுகிறது.

மக்கள் பெருக்கத்திற்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுவது இன்றியமையாததாகும். ஆகவே, தாமிரபரணியாற்றின் அனைத்துக் கால்வாய்களையும் லைனிங் செய்து, அதனால் மிச்சமாகும் தண்ணீரைப் பயன்படுத்தி பாசனப் பரப்பினைப் பெருக்குவதோடு தொழில் வளர்ச்சிக்கும் உதவ முடியும்.




# ஆதிதிராவிடர் நலத்துக்கு அரசு ஆற்றிவரும் பணிகள்

ஆதி திராவிடர் நலத்துக்கு அரசு ஆற்றி வருகின்ற பணிகள் பலப்பல. கல்வி, வீடு, வேலை இப்படிப் பலவேறு துறைகளில் அவர்களுக்கு உதவிகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிட மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக, நெல்லை மாவட்டத்தில் ஆதி திராவிட நலத் துறையினரால் கல்விக் கூடங்கள், விடுதிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

மேல்நிலைப்பள்ளி— 1 பயன் பெறுவோர் 650 மாணவர். இதே போல 21 ஆரம்பப்பள்ளிகளில் 2,553 மாணவரும், 2 ஓராசிரியர் பள்ளியில் 109 மாணவரும், ஒரு மலைவாழ் மக்கள் உண்டுறைப் பள்ளியில் 69 மாணவர்களும் பயன்பெறுகிறார்கள்.

இரண்டு அரசு கல்லூரி மாணவர் விடுதிகளில் 80 பேரும், ஒரு அரசு கல்லூரி மகளிர் விடுதியில் 50 பேரும், 40 அரசு மாணவர் விடுதிகளில் 1,178 பேரும் 25 அரசு மகளிர் விடுதிகளில் 1095 பேரும் உள்ளனர். தனியார் கட்டடத்தில் இயங்கும் 22 அரசு மகளிர் விடுதிகளில், 15 அரசு மகளிர் விடுதிகளுக்கு அரசு கட்டடம் கட்டிட நிலம் தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 இடங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

இம்மாணவர்கட்குத் தேவையான பாடப்புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், கரும் பலகைகளும் ஆண்டுதோறும் இரண்டு இணை சீருடைகளும் உரிய காலத்தில் வழங்கப்பட்டு விட்டன.

முதலமைச்சர் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் ஆதி திராவிட நலத்துறையினரால் நடத்தப்படும் 25 பள்ளிகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகின்றன.

பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2760. இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 85,000.

தமிழக அரசின் ஆணைப்படி, ஆதி திராவிட மாணவர் மாணவியர்க்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

இதுவரை பயன்பெற்ற மாணவர்கள் 2,82,000. தொகை ரூ. 2.5 கோடி. இவ்வாண்டு ஒதுக்கீடு ரூபாய் 37,40,000 செலவினங்கள் ரூபாய் 14,00,480.

தீண்டாமை ஒழிப்பில் சிறந்து விளங்கும் கிராமங்களுக்குப் பரிசு என்ற வகையில் 28 கிராமங்கள் பயன் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு வட்டத்திற்கு ஒரு வானொலிப் பெட்டி என்ற வகையில், சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிடர் காலனிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கல் மூலம் 178 கிராமங்கள் பயன்பெற்றுள்ளன. கலப்புத் திருமணத் தம்பதியர்க்குப் பரிசு என்ற வகையில் 46 தம்பதியர் பயன்பெற்றுள்ளனர். ஒவ்வொருவருக்கும் திருமணச் செலவுத் தொகை மற்றும் தங்கப்பதக்கம், பாராட்டுப்பத்திரம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை இம்மாவட்டத்தில் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பட்டாக்கள் 19830. இம் மனைகளில் கட்டப்பட்ட வீடுகள் 12237 இதுவரை நிலம் கையகம் செய்திட செலவிடப்பட்ட தொகை 41.07 இலட்சம் ரூபாய்

ஆதி திராவிடர்களுக்கு காலாட்படை - காவலர் படையில் சேர்ந்திடத் தக்க உடல், உள்ள வலு அளித்திட 115 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 27.12.82 முதல் 24.2.83வரை இப் பயிற்சி முகாம் மாவட்ட முன்னாள் இராணுவ வீரர்கள் நல இணை இயக்குநர் அவர்களால் நடத்திட இருக்கிறது. இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 63,300.

1981-82ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 72 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 65 மாணவர்கள் தேர்வு பெற்றனர். இவர்களில் 40 பேர் தற்பொழுது இந்திய விமானப்படையில் பணிபுரிகின்றனர்.

ஆதி திராவிட மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய நெல்லை மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் 12 கிராமங்களிலுள்ள பொருளாதார முன்னேற்றம் 925 ஆதி திராவிட குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு, இவர்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் செய்திட திட்டங்கள் 1982-1983ஆம் நிதியாண்டில் ''தாட்கோ'வினரால் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் பல துறைகளிலும், இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 7வது அம்சத்தின்படி ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

**சே. பொ. சீனிவாசன்**
**மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்,**
திருநெல்வேலி



# கைத்தறி மறுமலர்ச்சி

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடையை மேல் நாட்டவரெல்லாம் விரும்பி வாங்கிக் கொண்டனர் என்பது வரலாறு. ஆலைகளின் போட்டி அதிகரித்துள்ள இக்காலத்திலும், கைத்தறியால் நெசவு செய்யப்பட்ட ஆடைகள் அயல் நாட்டவரும் விரும்பும் வண்ணம் தமிழ்நாட்டு நெசவாளர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நம் நாட்டில் இன்று இயங்கி வரும் சுமார் 36 இலட்சம் தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 5.6 இலட்சம் தறிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தறிகளை நம்பி சுமார் 30 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சுமார் 48,000 தறிகளை நம்பி 2.50 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அரசு கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாக்கப் பல திட்டங்களைக் கொண்டு வந்தது.

இதனடிப்படையில் - நெசவாளர்களை ஒருங்கிணைத்துக் கூட்டுறவின் அடிப்படையில் நெசவாளர்கள் சங்கங்கள் அமைத்து அரசு பல வகைகளில் உதவி புரிந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 17,300 தறிகள் கொண்ட 106 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன.

நெசவாளர்கள் நலிந்த சமூகத்தினராக இருப்பதால் அவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேருவதற்கு 90 சதவிகிதம் பங்குத் தொகை கடனாக அரசு வழங்குகிறது. சேரும் நெசவாளர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவினராக இருந்தால் 10 சதவிகித தொகையையும் இரண்டு சம தவணைகளில் கட்டினால் போதும். மேலும் ஆண்டு தொட்டே குழித்தறிகளில் நெசவு செய்து வரும் நெசவாளர்களின் வசதியை முன்னிட்டு சட்டக் கூட்டுத்தறி வாங்குவதற்கு அரசு ரூ. 2500 வரை நிதியுதவி, மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், மீதி கடன் என்ற அடிப்படையிலும் ஒரு நபருக்கு வழங்குகிறது. இந்த நிதியுதவி பாலியஸ்டர் மற்றும், நவீன ஏற்றுமதி ரகங்கள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு அச்சு, விழுது வாங்கவும் அளிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்திக்குத் தேவைப்பட்ட தரமான நூல், எந்த நெருக்கடியான நிலையிலும் தகுந்த விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க அதற்காகவே நிறுவப்பட்ட 12 கூட்டுறவு நூற்பாலையிலிருந்து பெற்று தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் 75,000 கதிர்கள் கொண்ட இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் எட்டயபுரத்தில் ஒரு ஆலை ஆரம்பிக்கப்பட்டு பாலியஸ்டர் ரக நூல்கள்போன்ற பருத்தி நூலில்லாத நூல் உற்பத்தி செய்வதற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் தேக்கமின்றி விற்பனையாகத் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கொள்முதல் செய்து சங்கங்கள் தொடர்ந்து தொழில் புரிய ஏற்பாடு செய்கிறது. அது தவிர மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் சங்கங்களில் தேங்கியுள்ள சரக்குகளைப் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்ய 10 சதம் முதல் 20 சதம் வரை தள்ளுபடி மானியம் அளித்து உதவுகிறது. ஆண்டுக்கொரு முறை கைத்தறி வார விழா நடத்தி விற்பனை செய்யவும் தமிழ்நாடு அரசு தள்ளுபடி மானியம் அளித்து உதவுகிறது. இதனால் நெசவாளர்கள் ஒழுங்கான முறையில் சங்கத்திலிருந்து நூலும் கூலியும் பெற்றுத் தொழில் புரிய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் தற்கால நாகரிகத்தை ஒட்டி அனைவரும் விரும்பும் பாலியஸ்டர் ரகம் கைத்தறித்துணியினால் உற்பத்தி செய்யப்பட்டு ஆலைத் துணியையும் மிஞ்சும் வகையில் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. மேலும் 'காஞ்சீனா' என்ற ஒரு வகைப் பட்டுத் துணியும், கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு மக்களிடத்தில் அமோக வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

தற்கால நாகரிகத்திற்காக 'டிசைன்' தயாரித்து நெசவாளர்களைப் பயிற்றுவிக்க, இம்மாவட்டத்தில் கடையநல்லூரில் ஒரு 'டிசைன் சென்டர்'ரும் செயல்படுகிறது. மேலும் தரமான முறையில் சாயம் பிடிக்க தமிழ்நாட்டில் 8 சாயச் சாலைகள் நிறுவப்பட்டு அதில் ஒன்று திருநெல்வேலியில் செயல்பட்டு வருகின்றது.

பெருமளவில் நெசவாளர்கள் தறியில்லாமலும், அதனால் தனிப்பட்ட முதலாளிகளிடம் நெசவு செய்து கூலிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களை விடுவிக்கும் பொருட்டுத் தொழிற்கூட அடிப்படையில், தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 100 முதல் 150 தறியில்லாத நெசவாளர்கள் ஒரு சங்கத்தில் வேலை வாய்ப்புப் பெற முடிகின்றது. இவ்வித நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க ஒரு சங்கத்திற்கு அரசு ரூ. 4 இலட்சம் முதல் 6.50 இலட்சம் வரையிலும் கடனாகவும், மானியமாகவும் கொடுத்து உதவுகிறது. இவ்வகையில் திருநெல்வேலி சரகத்தில் 30 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 4 சங்கங்கள் ஆதி திராவிடர்களுக்கென்றே அமைக்கப்பட்டவை.

வீடில்லாத நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 100 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டன.

தற்போது கட்டப்பட விருக்கும் வீடுகளுக்கு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஒரு வீட்டிற்கு அதிகபட்சம் தொகையாக ரூ. 12,000 கடனாகவும், தமிழக அரசு மானியமாக வீடு ஒன்றுக்கு ரூ. 1000 மான்யமும் வழங்குகிறது.

இப்பொழுது தமிழகத்திலுள்ள 5.6 இலட்சம் தறிகளில் சுமார் 3.15 இலட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ் செயல்பட்டுவருகின்றன.

# மன நிறைவு தரும் மகத்தான திட்டம்



கிராமத்தின் வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சியாகும். குடிநீர் வசதி, சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையங்கள், மருந்தகங்கள், ஆதி திராவிட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட சிறுபாசன ஆதாரங்கள், குடிசைகளுக்கு மின்னொளி ஆகியவை முழுமையாகவும், விரைவாகவும் கிடைக்க வகை செய்வதற்காகத் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இதுபோன்ற திட்டம் மாநில அளவில் எந்த மாநில அரசும் மேற்கொள்ளவில்லை என்பதும் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்கு முன் அறிமுகப்படுத்தப் படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கவை

## திட்டத்தின் கரு

தனி மனிதனின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவனை உயர்த்துவதன் மூலம், சமுதாயத்தை உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் விஞ்சியது இத்திட்டம்; அது மட்டுமல்ல, கிராம மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் நல்வாழ்வு ஏற்படுத்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளை தீர்ப்பதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்வதே இத்திட்டத்தின் கருவாகும்.

பொருநை நதி வளமாக்கும், முல்லைத்தமிழ் பேசும் நெல்லை, மாவட்டத்திலே, தன்னிறைவுத் திட்டம் சென்ற 1980-81-ல் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பகுதி ஊராட்சி ஒன்றிய மக்களின் ஆதாரமான வசதிகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையக் கட்டடங்கள், மருந்தகக் கட்டடங்கள், ஆதி திராவிடர்கள் குடியிருப்பிலிருந்து மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற 623 வேலைகள் ரூ. 129.06 இலட்சங்கள் செலவில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பெற்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கிராமங்களில் வாழும் நலிந்த பிரிவினரான ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுதல், குடிசைகளுக்கு மின்னொளி ஆகிய திட்டங்களும் உரிய அரசுத் துறையினரால் ரூ. 106.461 இலட்சங்கள் செலவில் செவ்வனே முடிக்கப் பெற்றன.

இரண்டாம் கட்டமாக 1981-82ல் நாங்குநேரி, வள்ளியூர், ராதாபுரம், சேரன்மாதேவி, கடையம், மானூர், தென்காசி, கோவில்பட்டி, கயத்தாறு, மேல நீலித நல்லூர், தூத்துக்குடி திருச்செந்தூர் ஆகிய 12ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டம் சிறப்பாகச் செயலாக்கப்பட்டது.

இதன் மூலம் இணைப்புச் சாலைகள், சிறுபாலங்கள், ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானப் பாதைகள் அமைத்தல் பள்ளிக் கட்டங்கள், சிறுபாசன வேலைகள், கிராம மருந்தகங்கள் மகப்பேறு நிலையங்கள் அமைத்தல் போன்ற வேலைகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினராலும், கிராம மக்களுக்கு வீட்டுவசதி செய்தல், ஊரகக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமும், ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு, மயானங்களுக்குச் சாலை அமைக்கும் பணி ஆதி திராவிடர் நலத்துறையினராலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன.

மூன்றாம் கட்டமாக 1982-83 இல் 14 ஊராட்சி ஒன்றியங்களில் - அதாவது, 1 குருவிகுளம், 2. வாசுதேவநல்லூர், 3. அம்பாசமுத்திரம், 4. பாப்பாக்குடி, 5. களக்காடு, 6. ஆலங்குளம், 7. கடையநல்லூர், 8. கீழப்பாவூர், 9. பாளையங்கோட்டை 10. செங்கோட்டை. 11. ஆழ்வார்த் திருநகரி, 12. சாத்தான்குளம், 13. திருவைகுண்டம். 14. உடன்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தன்னிறைவுத் திட்டம் சிறப்பாகச் செயல்பட முனைப்பான பணிகள் நடந்து வருகின்றன.

## குருவி குளம் :

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 120 பணிகளைச் செயல்படுத்த ரூ. 31.742 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



குன்னத்தூரிலுள்ள மகப்பேறு நிலையம்

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.512 இலட்சங்களில் 25.6 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 20.480 இலட்சம் மதிப்பீட்டில் 87 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

ரூ. 1,800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும் ரூ. 1.950 இலட்சம் செலவில் 3 கிராம மருந்தகங்களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,746 ஆதிதிராவிட மக்களும் 67,338 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## வாசுதேவ நல்லூர் :

வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 127 பணிகளைச் செயல்படுத்த ரூ. 38.368 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.248 இலட்சங்களில் 30.2 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 28.070 இலட்சம் மதிப்பீட்டில் 95 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும் ரூ.0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,745 ஆதிதிராவிட மக்களும், 76,288 மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.

## அம்பாசமுத்திரம்

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 76 பணிகளைச் செயல்படுத்த ரூ. 18.240 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 9.280 இலட்சங்களில் 30 கி.மீ. நீளமுள்ள 28சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 4.110 இலட்சம் மதிப்பீட்டில் 40 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

ரூ. 4.200 இலட்சம் மதிப்பீட்டில் 7 மகப்பேறு நிலையங்களும், ரூ.0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 14,387 ஆதிதிராவிட மக்களும், 97,563 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## பாப்பாக்குடி

பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 120 பணிகளைச் செயல்படுத்த ரூ. 28.730 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 14.370 இலட்சங்களில் 34 கி.மீ. நீளமுள்ள 42சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 10.660 இலட்சம் மதிப்பீட்டில் 72 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும், ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 8,413 ஆதிதிராவிட மக்களும் 45,398



மேல திருவேங்கடபுரத்திலுள்ள சமுதாயக் கூடம்



மணப்பாடு - சிலுவைக் கோயில்



தெற்கு ஆத்தங்கரை - பள்ளிவாசல்

## தேவாலயங்கள்

நெல்லை மாவட்ட தெற்கு, கிழக்குப் பகுதிகளில் மிகுதியாக கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். பாளையங்கோட்டை தூத்துக்குடி சாயர்புரம், மெய்ஞ்ஞானபுரம், வடக்கன்குளம், முதலூர், இடையங்குடி, மணப்பாடு ஆகிய இடங்களில் புகழ்பெற்ற — மிக உயரமான தேவாலயங்கள் (சர்ச்சுகள்) உள்ளன. கடற்கரையைச் சார்ந்த உவரி என்னுமிடத்தில், கத்தோலிக்கர்களின் நூதனமான தேவாலயம் ஒன்றும் உள்ளது. இங்கு சமய வேறுபாடின்றி எல்லாரும் வந்து வழிபடுகின்றனர். இம்மாவட்டத்தில் 300 புராட்டஸ்டன்ட் கோயில்கள் உள்ளன. வடக்கன் குளம் மாதாகோயிலிலும், சமயவேறுபாடின்றி மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

## பள்ளிவாசல்கள்

பொட்டல்புதூர், காயல்பட்டணம், செல்வமருதூர் பெட்டைக்குளம், ஏர்வாடி, ஆத்தங்கரை, மேலப்பாளையம், கடையநல்லூர் ஆகிய இடங்களில் முஸ்லீம்கள் பெருமளவில் வாழ்கின்றனர். ஆத்தங்கரை பள்ளிவாசல் புகழ் பெற்ற புனிதத் தலமாகும்.

இந்தியாவின் மிகப்பெரும் தர்க்கா பொட்டல்புதூரில் உள்ளது. இதைக் கட்டியவர்கள் இந்துக்களே. அதனால்தான் இந்தத் தர்க்கா, வடிவில் இந்துக்கோயில் போல உள்ளது. இன்றும் கந்தூரியில் ஒரு தினம், தீப அலங்கார தினமாக இந்துக்களுக்காகக் கொண்டாடப்படுகிறது.

மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.

## களக்காடு

களக்காடு ஊராட்சி தன்னிறைவுத் திட்டத்தில் 98 பணிகளைச் செயல்படுத்த ரூ. 30.420 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 14,500 இலட்சங்களில் 33.9 கி.மீ. நீளமுள்ள 32 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 14.620 இலட்சம் மதிப்பீட்டில் 64 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 11,291 ஆதிதிராவிட மக்களும், 65,398 மற்ற இனமக்களும் பயன் பெறுவார்கள்.

## ஆலங்குளம்

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 121 பணிகளைச் செயல்படுத்த ரூ. 26.330 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 8.250 இலட்சங்களில் 30 கி. மீ. நீளமுள்ள 22 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ.14.380 இலட்சம் மதிப்பீட்டில் 93 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும் ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 10,599 ஆதிதிராவிட மக்களும் 67,543 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## கடையநல்லூர்

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 70 பணிகளைச் செயல்படுத்த ரூ. 21.100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் 13.200 இலட்சங்களில் 30 கி. மீ. நீளமுள்ள 30 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலைமேற்கொள்ளப்படும். ரூ. 5.45 இலட்சம் மதிப்பீட்டில் 36 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 12,084 ஆதிதிராவிட மக்களும், 34,145 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## கீழ்ப்பாவூர்

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 92 பணிகளைச் செயல்படுத்த ரூ. 30.330 இலட்சங்கள்



பாரதி நூற்றாண்டு நினைவுத் துவக்கப் பள்ளி (தருவை)

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 9.960 இலட்சங்களில் 29.2 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 17.07 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 9.283 ஆதிதிராவிட மக்களும் 93,245 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

### பாளையங்கோட்டை

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 109 பணிகளைச் செயல்படுத்த ரூ. 37 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 10.910 இலட்சங்களில் 30.4 கி. மீ. நீளமுள்ள 29 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 21.04 இலட்சம் மதிப்பீட்டில் 72 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ. 2.600 இலட்சம் செலவில் 4 கிராம மருந்தகங்களும், ரூ. 0·650 இலட்சம் செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,702 ஆதிதிராவிட மக்களும் 82,270 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

எடுத்துக் காட்டுக்கு, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளைப் பார்க்கச் சென்றபோது பல பணிகள் முடியுந்தறுவாயிலும், முடிந்தும் இருந்ததைப் பார்க்க முடிந்தது. தருவை என்னும் கிராமத்தில் ரூ. 96,000 மதிப்பில் கிராம மருந்தகக் கட்டடம் முடியும் தருவாயில் உள்ளது. இதே போல பொன்னாக்குடி, திருவேங்கடநாதபுரம், சீவலப்பேரி ஆகிய இடங்களிலும் மருந்தகங்கள் உள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், பாரதி நூற்றாண்டு நினைவு உயர் துவக்கப் பள்ளி ஒன்று தருவை கிராமத்தில் ரூ. 66,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேலத்தம் கிராமத்தில் ரூ. 86,000 மதிப்பில் துவக்கப்பள்ளி ஒன்று கட்டப்பட்டு முடியுந்தறுவாயில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விளாகம் சாலையில் 1.4 கி. மீ. தூரத்துக்கும் கல்பரத்தும் வேலை நடந்துள்ளது.

போக்குவரத்து தடை இல்லாமல் இருக்க, குன்னத்தூர் - மேல திருவேங்கடநாதபுரம் சாலையில் ரூ.30,000 சிமெண்ட் குழாய் பாலம் கட்டப்பட்டுள்ளது. குன்னத்தூரில் ரூ. 80,000 செலவில் மகப்பேறு நிலையம் முடியும் தருவாயில் உள்ளது. இதேபோல, நடுவர்குறிச்சி, மேலபுத்தனேரியிலும் மகப்பேறு நிலையங்கள் உள்ளன. மேலபுத்தனேரி, ஆதிதிராவிடர்கள் மிகுதியாக வாழக் கூடிய பகுதியாகும்.

தேசிய ஊரக் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சமுதாயக் கூடம் ஒன்று, மேலதிருவேங்கடநாதபுரத்தில் ரூ. 38,500 மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இது மதிய சத்துணவுக்கும் பயன்படுத்தப்படும்.

### செங்கோட்டை

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 94 பணிகளைச் செயல்படுத்த ரூ. 18.520 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 7.520 இலட்சங்களில் 24.1 கி.மீ. நீளமுள்ள 32 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 9.750 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூபாய் •600 இலட்சம் மதிப்பீட்டில் 1 மகப்பேறு நிலையமும், ரூ. •650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் 12,339 ஆதிதிராவிட மக்களும், 40,274 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

### ஆழ்வார் திருநகரி:

ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 100 பணிகளைச் செயல்படுத்த ரூ.27.460 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.660 இலட்சங்களில் 28.4 கி. மீ. நீளமுள்ள 29 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 12.900 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் 5 மகப்பேறு நிலையங்களும், ரூ. 3.900 இலட்சம் செலவில் 6 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 12,664 ஆதிதிராவிட மக்களும், 88,035 மற்ற இனமக்களும் பயன் பெறுவார்கள்.

### சாத்தான் குளம்:

சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 97 பணிகளைச் செயல்படுத்த ரூ. 25.910 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 11.160 இலட்சங்களில் 31 கி.மீ. நீளமுள்ள 35 சாலைகளை அகலப்

படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 12.300 இலட்சம் மதிப்பீட்டில், 58 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ0·650 இலட்சம் செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் 4,888 ஆதிதிராவிட மக்களும், 78,252 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## திருவைகுண்டம்:

திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 84 பணிகளைச் செயல்படுத்த ரூ. 13.968 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.248 இலட்சங்களில் 30 கி.மீ. நீளமுள்ள 33 சாலைகளைஅகலப் படுத்திக் கல்பரத்தும் ·வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 3.070 இலட்சம் மதிப்பீட்டில் 45 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் 5 மகப்பேறு நிலையங்களும், ரூ.0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப் பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 15,529 ஆதிதிராவிட மக்களும், 88,159 மற்ற இன மக்களும் பயன்பெறுவார்கள்.



சிமெண்ட் குழாய்ப் பாலம்

## உடன்குடி:

உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 49 பணிகளைச் செயல்படுத்த ரூ, 17.562 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 10.692 இலட்சங்களில் 29.7 கி. மீ. நீளமுள்ள 25 சாலைகளை அகலப்படுத்தி சுல்பரத்தும் வேலைமேற்கொள்ளப்படும். ரூ. 3.12 இலட்சம் மதிப்பீட்டில் 17 சிறுபாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் ரூ. 1.300 இலட்சம் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 4,725 ஆதிதிராவிட மக்களும் 62.573 மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.

கிராமங்களுக்கும், நகரங்களுக்குமுள்ள இடைவெளியைக் குறைத்து நகர மக்கள் பெறும் வசதிகள் அனைத்தும் கிராமங்களில் அமைய தன்னிறைவுத் திட்டம் முனைந்து செயல்படுத்தப்படுகிறது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அளிப்பதில் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட்டு. அரசின் அனைத்துத் துறையினரின் ஒத்துழைப்புடன், காலவரையறையும் நிர்ணயிக்கப் பட்டு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. இப்புதிய மாபெரும் முயற்சியால் கிடைக்கும் நன்மைகளோ கணக்கற்றவை. இதனால் கிராமப்புறங்களில் புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும், புது நம்பிக்கையும் காண முடிகிறது.

கிராமத்தில் வாழும் நலிவடைந்த பகுதியினரான ஆதிதிராவிட மக்களை ஒளிபடைத்த கண்ணினராய், உறுதிகொண்ட நெஞ்சினராய், ஆற்றல்மிக்கவராய் வையத்து வாழ்வாங்கு வாழ வைக்க தன்னிறைவுத் திட்டங்களில் முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது என்பதை நாம் மன நிறைவோடு குறிப்பிட வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# மணிமுத்தாறு நீர்த்தேக்கம்



மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி

திருநெல்வேலியிலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ள அழகிய நீர்த்தேக்கம் இது. இங்கு நீர் வீழ்ச்சி, பூங்கா, நீச்சல் குளம், விலங்குக் காட்சிச் சாலை, மாஞ்சோலை தேயிலைத் தோட்டம் ஆகியவை உள்ளன.

இதன் நீர் வடிப்பரப்பு: 62.4 சதுர மைல். அணையின் மொத்த நீளம் 9605 அடி. மண் அணையின் நீளம் 8375 அடி கட்டட அணையின் மொத்த நீளம் 1230 அடி. நீர்த்தேக்க நிறைமட்டம் 358.00 அடி. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 5511 மில்லியன் கன அடி.

பாபநாசம் — தாமிரபரணி மூலம் 83,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மணிமுத்தாறு மூலம் அம்பை, நாங்குநேரி, நெல்லை, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், வட்டங்களிலுள்ள 322 குளங்கள் வாயிலாக கார் பருவத்தில் 22,748 ஏக்கர் நிலம் ஒரு போக விளைச்சலுக்குப் பயன் படுகிறது.









# கைவண்ணம் இங்கே கண்டோம்!





அந்தத்தொழிற் கூடத்தினுள் நுழைகிறோம்.

ஆரணங்குகள் பலர் அழகிய பொருள்களைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

வெறும் பனை ஓலை விதவிதமாய் வடிவம் பெறுவதைப் பார்க்கின்றோம்.

மனத்தைக் கவரும் அந்தப் பொருள்கள் தயாராகும் இடம் தான், மணப்பாடு பெண் தொழிலாளர் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

திருச்செந்தூருக்குப் போகிற வழியில், அழகிய கடற்கரைக்கு அருகே அமைந்துள்ள சிறிய தொழிற்கூடம் தான் இது.

பனை ஓலையினால் கைவினைப் பொருட்கள் செய்யும், வறுமையில் வாடிடும் பெண் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட இத் தொழிற்கூடம் 1957 முதல் இயங்கி வருகிறது. குலசேகரப் பட்டணம் நகரப்பஞ்சாயத்துக்குட் பட்ட கிடங்குகளைத்தனது விவகார எல்லையாகக் கொண்டு இச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.



94 உறுப்பினர்களையும் ரூ. 517 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்கள் எண்ணிக்கை 517, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 36,365- ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 2500- உறுப்பினர்களை ஊக்குவிக்கு முகமாக 1977-78 லிருந்து பங்குத் தொகையின் மேல் டிவிடென்ட் 9 சதவிகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் இலாபம் பங்கீடு செய்யும்போது பங்குத் தொகையின்மேல் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள அதிகப்படி டிவிடென்ட் 12 சதவீதம் கொடுக்கப்படும்.

அரசிடமிருந்து பெற்ற சகல கடன்களையும் 6.11.74க்குள் வட்டியுடன் முழுமையாகத் திரும்ப செலுத்தி தற்போது அரசு கடன் எதுவுமில்லாமல் நிதி நிலைமையில் தன்னிறைவுபெற்று தனது சொந்த மூலதனத்திலேயே இச்சங்கம் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

துவக்கத்தில் நட்டத்திலேயே இயங்கிவந்த இத்தொழிற்கூடம், படிப்படியாக முன்னேறி இன்று 1981-82ம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ. 315969. இதில் ஏற்றுமதி விற்பனை மாத்திரம் ரூ. 241076 ஆகும். சங்கம் அடைந்துள்ள மொத்த லாபம் இவ்வாண்டில் ரூ. 1,00,600 ஆகும்.

சங்கம் தொடங்கிய காலத்திலிருந்ததைவிட உற்பத்தியும், விற்பனையும் சுமார் 10 மடங்கு பெருகியுள்ளது. தொடக்ககாலத்திலிருந்து 1981-72 வரை சங்கம் தனது உற்பத்திப் பொருட்களைத் தனியார் வியாபாரிகளிடமே விற்பனை செய்து வந்ததால் மிகவும் குறைந்த லாபமே கிடைத்தது. 1972-73 முதல் சங்கமே தனது தயாரிப்புகளை நேரடியாக மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதால் உற்பத்திபெருகி வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளதுமல்லாமல், அந்நியச் செலாவணியையும் சட்டிவருகிறது. தமிழ்நாட்டிலேயே பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்யும் ஒரே தலைமைச் சங்கமாக இது இயங்கி வருகிறது.

இச் சங்கத்தின் செயல்படுதிறனை ஆய்ந்து 1980-81 1981-82லும் மாநில அளவில் பனை ஓலை தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில், சிறந்த சங்கமாகத் தேர்ந்தெடுத்து தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினரால் பாராட்டுக் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டுக்கு 200க்குக் குறையாமல் பொருட்கள் செய்து அளித்த உறுப்பினர்களின் குழந்தைகளுக்கும், திருமணமாகாத உறுப்பினர்களாக இருந்தால் அன்னாரின் சொந்தத் தம்பி தங்கைகளுக்கும் 12ஆம் வகுப்புவரை பள்ளிப் பாடப்புத்தகங்கள் சங்கப் பொது நல நிதியிலிருந்து வாங்கி இலவசமாக வழங்கி வருகிறது.

இதே போன்று ஆண்டு ரூ. 200க்குக் குறையாமல் பொருட்கள் செய்து கொடுத்த உறுப்பினர்களுக்கு, உறுப்பினர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாக இருப்பதால், கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தலா பருத்தி நூல் சேலை ஒன்று, 76 ஆம் ஆண்டு முதல் சங்கப் பொது நல நிதியிலிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

தற்போது இத் தொழிற்கூடத்தில் 350 பெண்கள் பணியாற்றுகின்றனர். இங்குத் தயாராகும் அழகிய கண்கவர் பனை ஓலைப் பொருள்கள் அமெரிக்கா, இலண்டன், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 50 காசிலிருந்து 50 ரூபாய் வரை பொருள்கள் உள்ளன.

''சங்கத்தின் தேவைகளை அறிந்து, தகுந்த ஆலோசனைகளையும், தேவையான நிர்வாக அனுமதிகளையும் உடனுக்குடன் தந்து வரும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலுவலர்கள் அனைவருக்கும் இச்சங்கத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு உண்டு'' என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார் சங்கச் செயலாளர் டாக்டர் பி. வி. பால்ராஜ்.

— பி.வி.ஜி.

# தமிழ் வளர்த்த மாவட்டம்!

வித்வான்
**தி. சு. ஆறுமுகனார்,**
திருநெல்வேலி

**செ**ந்தமிழ் நாட்டில் தெய்வத் தமிழ் வளர்த்த பணியில், நெல்லை மாவட்டத்துக்கும் பெரும் பங்குண்டு. அங்ஙனம் பங்கு கொண்ட இம்மாவட்டத்துப் பெரு மக்களுள், கடந்த ஒரிரு நூற்றாண்டுகளில் வாழ்ந்து புணி புரிந்து, மறைந்தாருள் ஒரு சிலரைப் பற்றி, யானறிந்தவாறு கோடி காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பைந்தமிழ் வளர்த்த பாவலர் பெருமக்கள் பல நூற்றுவர் ஆவர். அவருள் ஒரு சிலர் தமிழ்வானில் ஆதவனெனவும், அருமதியெனவும் அரிய புகழொளியோடு பவனி வருகின்றனர்; மற்றும் ஒரு சாரார் உடுக்களென ஒளிர்கின்றனர்; பெரும்பான்மையர் பெயரளவில் பேசப்படுகின்றனர். அவருள் பதின்மரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.

## குமரகுருபர சுவாமிகள்

இப்பெருமகனார் நெல்லை மாவட்டத்தில் இன்றைய ஸ்ரீவைகுண்டமாம் கைலாசபுரத்தில் சைவ வேளாளர் மரபில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமி அம்மையாருக்கும் அருமகவாய்த் தோன்றினார். ஐந்து ஆண்டளவும் மூங்கையாக இருந்து, பின்னர் பேசுந்திறன் பெற்றார். அவ்வமயமே கந்தர் கலிவெண்பாவைப் பாடி முருக பிரானைப் பரவினார்.

கைலாசபுரம் வந்து தந்தையாரிடமும் மற்றும் அருந்தமிழ்ப் புலவர்கள் மாட்டும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். கயிலைக் கலம்பகம் எனும் அரிய நூலொன்றினைப் பாடினார். மணவாழ்வினுள் செலவிழையாமல் வடக்கு நோக்கிச் சென்றார். மதுரையம்பதியை அடைந்தார். திருமலை நாயக்க மன்னரால் ஆதரிக்கப் பெற்றார். மன்னர் விழைந்தவாறு திருக்குறள் கருத்துக்களை எளிய நடையில் நீதிநெறி விளக்கமாகப் பாடினார். மற்றும், மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மன் குறம், மீனாட்சியம்மன் இரட்டைமணி மாலை ஆகிய நூல்களையும்


வ. உ. சிதம்பரனார்

யாத்தருளினார். பிள்ளைத்தமிழ், அம்மன் திருமுன் மன்னர் மேற்பார்வையில் அரங்கேறியது.

பின்னர் தருமபுரத்தை அடைந்தார். தருமையில் அப்போது நான்காவது மடாதிபதியாக மாசிலாமணி தேசிகர் வீற்றிருந்தார். அவருடன் சொற்போர் நடாத்தித் தோற்றதனால் அவரைத் தம் ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டார். தம் ஆசிரியரைப் பரவிப் பண்டார மும்மணிக் கோவை பாடினார்.

மற்றும் வேளூர்க்கலம்பகம், முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், திருவாரூர் நான்மணி மாலை, சிதம்பரம் மும்மணிக் கோவை, சிதம்பரம் செய்யுட் கோவை ஆகிய நூல்களையும் அவர் பாடியுள்ளார்.

ஞானாசிரியர் கட்டளையிட்டவாறு வடக்கே காசிநகர் சென்றார். 'சகலகலாவல்லி மாலை'யைப் பாடி, இந்துஸ்தானி மொழியுணர்ந்து, மன்னனைப் பேட்டி கண்டு, அனுமதி பெற்று ஆங்கே காசி மடத்தை நிறுவினார். காசிக் கலம்பகம் பாடினார். ஒரு முறை தருமபுரம் வந்து ஞானாசிரியரைக் கண்டு வணங்கி மீண்டும் காசியை யடைந்து அங்கே தமிழையும் சைவத்தையும் வளர்த்தார்.

## திரிகூடராசப்பக் கவிராயர்

இவர், திருக்குற்றாலத்திற்கும் தென்காசிக்கும் இடையேயுள்ள மேலகரம் என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் தோன்றினார். முறையாகத் தமிழ் நூல்களைக் கற்றுப் புலமை பெற்றார். யமகம், திரிபு முதலிய பாடல்களையும் விரைந்து பாடும் ஆற்றல் பெற்றார். குறவஞ்சி நூல்களுள் தலையாயதாய் ஒளிரும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' இவரால் பாடப்பட்டதேயாம். இவ்வினிய நூல் திருக்குற்றால நாதர் சன்னதியில் அரங்கேறியது. இதன் பீடுணர்ந்த அன்றைய பாண்டி மன்னன் முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கன் இவரைப் பாராட்டிப் போற்றித் ''திருக்குற்றால நாதர் கோயில் வித்துவான்'' என்ற விருதுப் பெயரையும், ''குறவஞ்சி மேடு'' ஆகிய இறையிலி நிலத்தையும் இவருக்கு அளித்துச் சிறப்பித்தான்.

இப்புலவர் பெருமானுக்கு ஆண் மகவில்லை. பெண் வழி மரபினர் இன்றும் அவ்வுரிமையை ஆண்டனுபவித்து வருகின்றனர்.

மற்றும், இப்புலவர் பெருமான் திருக்குற்றாலம் பற்றிக் குறவஞ்சிதவிர, வேறு பல நூல்களையும் பாடியுள்ளார். அவற்றுள் 'திருக்குற்றாலத் தல புராணம்' சிறப்புடைத்தாம். ஏனையவை, அத்தலம் பற்றிய மாலை, சிலேடை வெண்பா,


ஜெகவீர பாண்டியன்



## எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம்

எட்டயபுரத்தில் மகாகவி பாரதி மணிமண்டபம் அழகுற அமைந்துள்ளது. 11.12.80இல் இது புதுப்பிக்கப்பெற்றது. இந்த மணி மண்டபத்தில் பாரதியின் சிலை, அவரது வரலாற்றைச் சித்திரிக்கும் கண்காட்சி, நூலகம் ஆகியவை உள்ளன.

யமக அந்தாதி, உலா, ஊடல், பரம் பொருள் மாலை கோவை, குழல்வாய்மொழி மாலை, கோமளமாலை, வெண்பா அந்தாதி, பிள்ளைத்தமிழ், நன்னகர் வெண்பா என்பனவாம்.

### வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

இவர், தென்காசி வட்டத்தில் சுரண்டையை அடுத்துள்ள வெள்ளக்கால் எனும் சிற்றூரில் தோன்றியவர். தோன்றிய காலம் கி.பி. 1857, ஆகஸ்டு திங்கள், 14ஆம் நாள். கால்நடை மருத்துவத் துறையின் தலைமையதிகாரியாகப் பணி புரிந்தவர். தமிழ்க் காப்பியங்களிலும் பிரபந்தங்களிலும், ஆங்கில நூல்களிலும், சிறந்த பயிற்சியுடையவர். மதிநுட்பமும் பரந்த நூலறிவுமுடையவர். இனிய உரைநடை நூல்களும், அரிய கவிதை நூல்களும் பல யாத்தவர், இராவ் சாகிப் விருது பெற்றவர்.



வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

சிறப்பாகக் கம்பராமாயணத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர். அதன் சாரத்தைப் பிழிந்தெடுத்துக் ''கம்பராமாயண சாரம்'' என நூல் வடிவில் தந்தவர்.

இது தவிர, இவர்தம் நூல்களில் சிறப்புடையவை — சுவர்க்க நீக்கம் (மில்டனின் ''பேரடைஸ் லாஸ்ட்'' எனும் ஆங்கில நூலின் தமிழாக்கம்) அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா என்பனவாகும்.

### அண்ணாமலை ரெட்டியார்

இவர், கரிவலம் வந்த நல்லூரை யடுத்துள்ள சென்னிகுளத்தில் கி. பி. 1861-ல் தோன்றினார். முப்பது ஆண்டுகளே வாழ்ந்தார். இவரிழப்பு தமிழுக்குப் பெரிய நட்டமாகும். தந்தை சென்னவ ரெட்டியார். தாயார் ஓவு அம்மாள். ஏழை விவசாயக் குடும்பத்தினர். அன்னதான மடம் எனப் புகழ் பெற்ற, கூவலப்புரம் மடத்தின் தலைவர் சுந்தர அடிகளாரின் உதவியால் முகவூர் இராமசாமிக் கவிராயரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்து கவிபாடும் திறன் பெற்றார். இவருக்கு விழுப்புகழைத் தந்த நூல், இவர் பாடிய காவடிச் சிந்தே ஆகும். ஊற்றுமலை மன்னர் இருதயாலய மருதப்பத் தேவரால் ஆதரிக்கப் பெற்றவர். இவரது காவடிச் சிந்தை ஊற்றுமலை வித்துவான் இரா. தங்கப் பாண்டியன் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார். மற்றும் அவர்தம் சீட்டுக் கவிகளைப் பாளை புனித யோவான் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் நெல்லை க. சுப்பிரமணியம் பதிப்பித்திருக்கின்றார்.



தேவநேயப் பாவாணர்

மற்றும், வீரையந்தாதி, நவநீதிகிருட்டிணன் பிள்ளைத்தமிழ் சங்கர நாராயணர் திரிபந்தாதி, கருவை மும்மணிக் கோவை கோமதி அந்தாதி என்பன இப்புலவர் பாடியுள்ள பிற நூல்களாம்.

### சங்கரதாஸ் சுவாமிகள்

நாடகத் தந்தை எனப்புகழ் பெற்ற இவர் கி. பி. 1867-ல் தூத்துக்குடியில் பிறந்தார். தந்தை தாமோதரக் கணக்கப் பிள்ளை என்பவராவர். தமிழ்ப் புலமையுடைய தாமோதரனார் இராமாயணச் சொற்பொழிவில் வல்லவராதலால் மக்களால் இராமாயணப் புலவர் என அழைக்கப்பட்டார். வண்ணச்சரபம் நெல்லைத் தண்டபாணி சுவாமிகளிடம், சங்கரதாஸ் இளமையில் பாடம் கேட்டவர். உடுமலைச்சரபம் முத்துசாமிக் கவிராயரும் உடன் பயின்றார்.



கா. சுப்பிரமணிய பிள்ளை

சங்கரதாசும் சிறிது காலம் கணக்கு வேலை பார்த்தார். பின்னர் நாடகப் பணியில் சேர்ந்தார். அடுத்துத் துறவியாகச் சிலகாலம் திரிந்தார். இறுதியாக மான்பூண்டியா பிள்ளையின் தூண்டுதலால் மீண்டும் நாடகத் துறையில் இணைந்து, அத் துறைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

சமரச சன்மார்க்க சபை, பால மீனரஞ்சனி சபை, தத்துவ மீன லோசனி சபை—என்பன இவர் நடத்தி வந்த நாடகச் சபைகளாம். இரணியன், எமன், இராவணன்போன்ற ஆர்ப்பாட்ட பாத்திரங்களில் இவரைப்போல் நடித்தார் எவருமில்லை. செகநாத நாயுடு, கோவிந்தசாமிப் பிள்ளை, கன்னையா நாயுடு சாமண்ணா ஐயர், கே. எஸ். அனந்த நாராயண ஐயர், அவர் அண்ணன் செல்லப்ப ஐயர், நவாப் ராஜமாணிக்கம், டி.கே. எஸ். சகோதரர்கள் முதலியோர் இவரது சீடர்களில் முக்கியமானவர்கள். இவர் கி. பி. 1922-ல் இயற்கை எய்தினார்.



மு. சி. பூரணலிங்கம் பிள்ளை

அபிமன்யு சுந்தரி, பிரபுலிங்க லீலை, அல்லி அர்ச்சுனா, சதி அனுசூயா, சதி சுலோசனா, சீமந்தனி, பாதுகா பட்டாபிஷேகம், மிருச்சகடி, மணிமேகலை, கோவலன், ரோமியோ சூலியத் போன்ற சுமார் இருபது நாடகங்களை இவர் படைத்துள்ளார்.

## வ. உ. சிதம்பரனார்

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என ஒல்காப் புகழ் படைத்த இப்பெருமகனார் நாட்டு விடுதலைக்காகப் போராடிய முன்னணி வீரர்களுள் ஒருவர் என்பதை யாவரும் அறிவர். ஆயின் இவரது தளராத் தமிழ்ப் பணியை ஒரு சிலரே அறிவர்.



க. வையாபுரிப் பிள்ளை

இவர் ஒட்டப்பிடாரத்தில் கி. பி. 1872-ல் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் தவமகனாய் அவதரித்தார். இவர்தம் தமிழ்ப் பணியினை மட்டும் இவண் காட்டின், அமையும் எனக் கருதுகின்றேன். தம் சுயசரிதையை இரண்டு பாகங்களாகப் பாடியுள்ளார். சிவஞான போதத்துக்குத் தெளிவுரை வரைந்துள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னிலைக்கு விருத்தியுரை எழுதியுள்ளார். மற்றும் மெய்யறம், மெய்யறிவு, அகமேபுறம், மனம் போல் வாழ்வு வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் ஆகிய நூல்களையும் ஆக்கியுள்ளார்.

சிறப்பாகத் திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையையும் தெளிவாக நன் முறையில் செப்பம் செய்து பதிப்பித்துள்ளார். 1936-ல் இறையடி சேர்ந்தார்.

## தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்

பாரதி நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டு வரும் இந்நாளில் இவரை அறியாதார் இலர். இவரது தமிழ்ப் பணியையும்நாட்டுப் பணியையும் நாடு நன்கறியும். காலம் கி. பி. 1882-1921.



ச. சோ. பாரதியார்

## எஸ். வையாபுரிப்பிள்ளை

இவர் நெல்லை நகரையடுத்துள்ள சிக்கநரசய்யன் கிராமத்தில் கி. பி. 1888-ல் சரவணப் பெருமாள் பிள்ளையின் திருமகனாய்த் தோன்றினார். தொடக்கக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் நெல்லையில் கற்றார். க. அ. நீலகண்ட சாஸ்திரியார், பெ. நா. அப்புசாமி ஐயர், பி. ஸ்ரீ. ஆச்சார்யா ஆகியோர் இவருடன் பயின்றவர்கள்.

அப்போது குறுக்குத் துறையில் தங்கியிருந்த பாம்பன் குமர குருதாச அடிகளிடம் தமிழைக் கற்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றார். இதில் முதன்மையாகத் தேர்ந்து சேதுபதியின் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். 1912-இல் திருமணம். திருவனந்தபுரத்தில் சட்டப்படிப்பு. 1922 முதல் நெல்லையில் வழக்கறிஞர் தொண்டு செய்தார். 1926-இல் சென்னை சென்று தமிழ் அகர வரிசைக்குப்பதிப்பாசிரியர் (ரீடர்) ஆனார். 1936 முதல் சுமார் பத்தாண்டுகள் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவராகப் பணியாற்றினார். 1938ல் இராவ் சாகிப் பட்டம். 1951 முதல் 3 ஆண்டுகள் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர். இவர்தம் நூல்களுள் சில : இலக்கியச் சிந்தனைகள், இலக்கிய உதயம், இலக்கிய மணி மாலை, தமிழின் மறுமலர்ச்சி, காவிய காலம், சொற்கலை விருந்து ஆகியவை. இவர் 1956-இல் காலமானார்.



ரா. பி. சேதுப்பிள்ளை

## பி. ஸ்ரீ ஆசாரியா.

கம்பராமாயண மேதை எனப்



தண்டபாணி சுவாமிகள்

படும் பி. ஸ்ரீ. ஆசாரியா தென் திருப்பேரையில் தோன்றியவர். அபிநவ காளமேகம், கவி அனந்த கிருஷ்ண ஐயங்காரின் சகோதர ரின் புதல்வர். நெல்லை இந்து கல்லூரியில் கற்றார். சிறிது காலம் காவல் துறையில் பணி யாற்றினார். அதை உதறி விட்டுத் தமிழ்ப் பணிக்கே தமைமை அர்ப்பணித்துக் கொண் டார். இடைக்காலத்தில் சென்னையிலும், இறுதி நாட் களில் விட்டிலாபுரத்திலும், வாழ்ந்து வந்தார். கம்பர் மீதும் அவர்தம் காவியத்தின் மீதும் மிக்க ஈடுபாடுடையவர். ஆனந்த விகடனில் இவர் எழுதி வந்த கம்ப சித்திரம், சித்திர ராமா யணம், திவ்ய பிரபந்தசாரம், சிவநேசச் செல்வர்கள், சித்திரத் திருப்பாவை முதலிய படைப்பு கள் இவருக்கு அழியாப் புகழை அளித்தன.

இராமானுஜர் என்ற நூல் இவருக்குச் சாகித்ய அகாடமிப் பரிசைப் பெற்றளித்தது. மதுரை யில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசு இவ ருக்குப் பொன்னாடை போர்த்தி யும் பொற்கிழி அளித்தும் பாராட்டியது.

நாற்பதுக்கும் அதிகமான அரிய தமிழ் நூல்களை வடித்துதவி தமிழன்னைக்குச் சிறந்த தொண் டாற்றியுள்ள இவர், 28-10-81-ல் இயற்கை எய்தினார்.

### ரா. பி. சேதுப்பிள்ளை

சொல்லின்செல்வராகிய இவர் இராஜவல்லிபுரத்தில் தோன்றிய வர். சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர். தாம் பி. ஏ. பட்டம் பெற்ற சென்னை பச்சையப்பன் கல்லூரியிலேயே தமிழ்த் தொண் டாற்றிக் கொண்டே சட்டப் படிப்பும் படித்து வெற்றி பெற் றார். கம்பராமாயணத்திலும் திருக்குறளிலும் மிகுந்த ஈடுபாடு டையவர். அவற்றில் பெரும் பான்மையான பாடல்கள் இவ ருக்கு மனப்பாடம்.

ஆறு ஆண்டுகள் நெல்லை நகர்மன்ற உறுப்பினராக (1924-1930)ப் பணி செய்தார். அதில் இறுதி இரண்டாண்டில் துணைத் தலைவராகவும் தொண்டாற்றி னார். 1930-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரி வுரையாளரானார். 1936-ல் சென்னைப் பல்கலைக் கழகத் தில் பணி புரியச் சென்றார். பின்னர் அங்கே தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். ஆற்றொழுக்காக இனிய இசை கலந்த நடையில் சொற்பெருக் காற்றும் திறனுடையார். இவர் தம் காலம் கி. பி. 1896-1961.



தேசிய கவி பாரதி

தமிழ்த் தாய்க்கு இவர் படைத் துள்ள அணிகள் பலவாம்.

இவரை நினைவுறும் போதெல் லாம் இவருக்குப் பல்லாற்றா னும் உதவியவரும், நெல்லை யின் சிறந்த தமிழ்த் தொண்ட ரும், தாகூர் சட்ட விரிவுரையாள ரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவ ரும் எம். எல். பிள்ளை என மக்களால் போற்றப்படுபவரும் ஆகிய கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களே முன் வந்து நிற்பார். இவர் வரைந்துதவிய தமிழ் ஆராய்ச்சி நூல்கள் பல வாம்.

— இவர்கள் தவிர விக்கிரம சிங்கபுரம், சிவஞான முனிவர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், ரசிகமணி டி.கே.சி., தச்சநல்லூர் அழகிய சொக்கநாத பிள்ளை, கடிகை முத்துப் புலவர், தேவநேயப் பாவாணர், நாவலர் சோமசுந்தர பாரதியார், சுந்தர சுவாமிகள், சுந்தரராசப் பாண்டியர், பால்வண்ணனார், ரெட்டியாபட்டி அடிகள், மு. பொ. ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை, ஞானசித்தர், சிதம்பர நாதத்தம்பிரான், ஆழ்வாரப்பப் பிள்ளை, தி. செ. சுப்பிரமணிய பிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, அனந்தகிருஷ்ண ஐயங்கார், திருமலைவேற் கவி ராயர், தொண்டைமான் முத் தையா, பாஸ்கரத் தொண்டை மான், எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, சாமிக்கண்ணு பிள்ளை, எஸ். இராகவனார், மு. நல்லு சாமி நாடார் போன்ற தமிழறி ஞர் பெருமக்களையும் ஈன்று சிறப்புற்றது நெல்லைச் சீமை யாகும்.



**வ.வே.சு. ஐயர் நினைவு மண்டபம்**

பாபநாசம் அருவியிலுள்ள கல்யாணி தீர்த்தத்தில் விழுந்து இறந்த சுதந்திரப் போராட்ட வீரர் வ.வே. சுப்பிரமணிய ஐயர் நினைவாக, அந்த இடத் தில் அழகிய நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப் பெற்றுள்ளது. இது 8.8.1957-ல் கட்டப்பட்டது.



# இயற்கையின் எழிற்கோலம்!

வனவளம் மிக்க தமிழ்நாட்டில் வகை வகையான வனவிலங்கு உய்விடங்களும் உள்ளன. பல்வேறு வகையான விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் புகழ் பெற்ற இடங்கள் பல உண்டு. ஆனைமலை, முதுமலை, முண்டந்துறை, களக்காடு, கோடிக்கரை, வேடந்தாங்கல் கூன்றடைப்பு கூந்தன் குளம் இப்படி பல வனவிலங்கு உய்விடங்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

## களக்காடு

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு, சிங்கவால் குரங்குகளுக்கான உய்விடமாகும். இது திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்கில் அமைந்துள்ளது. நாங்குநேரி வட்டாரத்தில் களக்காடு ஒதுக்கு காடு முழுவதும் இவ்விதக் காப்பகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

களக்காடு நகரிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இந்தக் காப்பகம் உள்ளது. நெல்லையிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் - நாங்குநேரியிலிருந்துசாலைமூலம் இந்தக் காபபகத்தை எளிதில் அடையலாம்.

இதன் நிலப்பரப்பு - 22,359 எக்டேர். இங்கு மாறி மாறி உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ள மலைப் பிரதேசம் குறிப்பிடத்தக்கது. குன்றுகள் செங்குத்தானவை இங்கு குன்றுகளினூடே வற்றாது ஓடும் சில சிற்றாறுகளும் ஓடைகளும், மழைக் காலங்களிலும் மட்டுமே பாயும் ஓடைகளும் உள்ளன. அவை கீழ்மணிமுத்தாறு, குசங்குளியாறு, நம்பியாறு, குளிராத்தியாறு, மேலமணி முத்தாறு, பச்சையாறு, கொடுமுடியாறு முதலியன.

இந்தக் காடுகளின் வெளிப்புறத்தில் வெப்பமாகவும் வறட்சியாகவும் இருக்கும். சமவெளிப் பகுதியில் 43 டிகிரி செண்டிகிரேட் முதல் 24 டிகிரி செண்டிகிரேட் வரை இருக்கும் மலைப் பகுதிகளில் கோடைக் காலத்தில் குளிர்ச்சியாக இருக்கும்.

தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் ஆண்டு முடிய தொடர்ந்து மழைபெய்யும். வடகிழக்குப் பருவமழை அக்டோபர் முதல் டிசம்பர் முடிய பெய்யும். வடகிழக்குப் பருவமழையே இப்பகுதிக்குப் பெரிதும் உதவுகிறது.

அடர்த்தியான இக்காட்டில் நாவல், கொங்கு, மருது முதலிய மரங்கள் மிகுதியாக உள்ளன. இங்குள்ள நெட்டேரிக்கல் நீர்வீழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

வேங்கை நாயக்கன் அணைக்கட்டும் காண வேண்டிய ஒன்றாகும்.

களக்காடு ஒதுக்கக்காட்டில்-(1) களக்காடு - செங்களத்தேரிசாலை இந்தச் சாலையில் பராமரிப்பு பணிகள் நடைபெறுகின்றன. (2) திருக்குறுங்குடி நம்பிகோயில் சாலை காப்பகத்தின் மத்தியில் செல்லும் பாதை, இதனை இரண்டாகப் பிரிக்கிறது.

களக்காடு உய்விடம் சிங்கவால் குரங்குகள் வளர்ந்து வரும் ஒரு பகுதியாகும். இங்கு சிங்கவால் குரங்கு தவிர, புலி, காட்டுநாய், கரடி, ராட்சச அணில், குள்ள நரி, யானை, நீலகிரி மலை ஆடு மற்றும் அழகிய பல வண்ணப் பறவைகளும் உள்ளன.

களக்காடு உய்விடம், 1980-81ஆம் ஆண்டில் ரூ.1.20 இலட்சமும், 1981-82ஆம் ஆண்டில் ரூ. 10.73 இலட்சமும் செலவிட்டு மேம்படுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 11.28 இலட்சம் தொகைஒதுக்கப்பட்டுள்ளது.

காட்டில் - 1907-இல் கட்டப்பட்ட ஓய்வு இல்லம் தங்கும் விடுதி உள்ளது. பிறகு இது 1977-ல் புதுப்பிக்கப்பட்டது. இதற்குச் 'சிங்களம் இல்லம்' என்று பெயர். களக்காட்டிலிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ள இந்த விடுதி மிக்க அழகிய சூழ்நிலையில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதிகள், அலுவலர்களுக்கு இல்லங்கள் முதலியனவும் கட்டப்பட்டு வருகின்றன.

இங்கு முக்கியமாக, கடல் ஆமைகளின் முட்டைகளிலிருந்து

---

**பி.வி. கிரி**



குஞ்சு பொரிக்கும் பண்ணை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்த இனம் அழிந்து விடாது பாதுகாக்க மைய அரசும், மாநில அரசும் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. கடல் ஆமைகளின் முட்டைகள் குஞ்சுபொரிப்பதற்குப் பண்ணை அமைத்துப் பின்னர் குஞ்சுகளைக் கடலில் விடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நெல்லை மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் - திருச்செந்தூர் - கன்னியாகுமரி கடலோரப் பகுதிகளில் இவை விடப்படும். சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தக் காட்சி நல்விருந்தாக அமையும்.

## முண்டந்துறை

கடல் மட்டத்திலிருந்து 655 அடி உயரத்தில் உள்ளதுதான் முண்டந்துறை வனவிலங்கு உய்விடம். 1970-ல் துவக்கமான இந்த உய்விடத்தில், புலிகள் அதிகம் எனக் கூறப்படுகிறது. அதனால் முக்கியமாக புலிகளுக்கான உய்விடமாக இது கருதப்படுகிறது. பாபநாசம் வனவிலங்குச் சரகத்தைச் சேர்ந்து முண்டந்துறை.

இந்தக் காட்டில் புலிகள் தவிர, காட்டெருமைகள், மிளா, மான்கள், காட்டுப் பன்றிகள், கரடி, காட்டுக் கோழிகள், முள்ளம் பன்றிகள் ஆகியவையும் உள்ளன. இவையன்றி வண்ணப் பறவைகளும் இங்கு அதிகம்.

முண்டந்துறையில் தற்போது வன அலுவலராக உள்ள திரு தி. குற்றாலிங்கம் வனத்துறையில் 22 ஆண்டுகளாகப் பணிபுரிகிறார். அவர் கூறுகிறார்.

''வனவிலங்குகளைப் பாதுகாப்பதும், காடுகளைப் பராமரிப்பதும் வனத்துறையின் முக்கிய நோக்கமாகும். இங்குள்ள சேர்வரலாறு நீர்ப்பகுதிகளிலுள்ள மரங்களை வெட்டி நாகர்கோயில் மரக்கிடங்குக்கு அனுப்புகிறோம். இதன் மூலம் வனத்துறைக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது. நீர்மூழ்கிய பகுதியை வனத்துறை சரி செய்தது போக, மீதியுள்ள பகுதியை 'சர்வே' செய்து பகிரங்க ஏலம் விடுகிறோம். இதன் மூலம் சுமார் 12 இலட்சம் ரூபாய் கடந்த ஆண்டு வருமானம் கிடைத்தது.

''நாங்கள் காடுகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது, கரடிக் குட்டிகளையும், புலிக் குட்டிகளையும் பார்ப்பதுண்டு. ஒரு சமயம் மாலை 5:30 மணிக்கு ஒரு பெரிய புலியும், அதன் குட்டியும் சென்று கொண்டிருந்தது. அது யாரையும் ஒன்றும் செய்யவில்லை. விலங்குகளுக்கு நாம் தொந்தரவு கொடுத்தால்தான் அது நமக்குத் தொந்தரவு கொடுக்கும்.

''இங்கு கொடமாடிக்கு மேலே உள்ள சோலையிலும், கன்னிக் கட்டிப் பகுதியிலும் யானைகள் அதிகம் உள்ளன. இப்பகுதி முண்டந்துறையிலிருந்து 10கி.மீ. தூரத்தில் உள்ளது. யானைகள் மனிதர்களைக் கண்டால் ஒரு விதச் சத்தம் போடும். அப்போது நாம் விலகிக் கொள்ள வேண்டும்.''

முண்டந்துறை வனப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான அழகிய பங்களா ஒன்று உள்ளது. அது தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ளது. சலசலவென ஓடும் ஆற்று நீரும், கலகலவென ஓடும் மரங்களின் இலைகளின் ஒலியும் மனத்துக்கு இன்பம் தருகின்றது. அதேசமயம் மனத்துக்கு அச்சந்தரும் மந்திக் கூட்டங்களும் இங்கு உண்டு! நாம் கொஞ்சம் அசந்தால் போதும், ஒரு குரங்கு தாவி வந்து ஜன்னலைத் திறந்து பார்க்கும். ஏதாவது பண்டம் இருந்தால் எடுத்துக் கொண்டு ஓடும். அதனால்தான் பங்களா வரண்டாவைச் சுற்றி கம்பி வலை அடித்திருக்கிறார்கள்.

இங்கு சந்தனம், தேக்கு நெருப்புக் கொன்னை, கருங்கோங்கு, வைமரம், சரக்கொன்னை இப்படிப் பலமரங்கள் பங்களாவைச் சுற்றி இருக்கின்றன. பங்களாவுக்குச் சற்றுத் தொலைவில் மலைப் பாம்பு ஒன்று உள்ளது, காட்சிக் கூடத்தில்!

வனங்கள் நம்மை வாழ்விப்பதால், வேட்டையாடுதல் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வனங்களைப் பார்க்கும்போது- வனம் பூமித்தாயின் மனம், அவள் புன்னகையோ பூத்துக் குலுங்கும் புதுமலர், அவளது ஆனந்தக் கண்ணீர்தான் அடைமழை, அவள் அசைவோ இலைகளின் சலசலப்பு, இயற்கையன்னையின் எழிற்கோலம் நம் இதயத்தை வருடவில்லையா— என்று கவிதை பாடத் தோன்றுகிறதல்லவா?



இந்த ஆமைக் குஞ்சுகளுக்குத் தஞ்சம் திருச்செந்தூர் கடல்



# ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

சேர்வலாறு நீர்மின் திட்டம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில், முண்டந்துறை வன விலங்கு சரணாலயத்தினுள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேர்வலாறு தாமிரபரணி நதியின் முக்கியமான கிளைகளில் ஒன்றாகும். தாமிரபரணி நதி, பொதிகை மலையில் அடர்த்தியான பசுமை நிறைந்த காடுகளில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 1500 மீட்டர் உயரத்திற்கு மேலுள்ள பகுதியிலிருந்து உற்பத்தி ஆகி,பல கிளை நதிகள் சேர்ந்து வங்க விரி குடாக் கடலில் திருச்செந்தூருக்கு வடக்கே கலக்கிறது.

பாபநாசம் நீர்மின் திட்டம் இந்த நதியின் குறுக்கே அமைக்கப்பட்டு 1946ஆம் ஆண்டில் இருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. இந்நீர்த் தேக்கத்திலிருந்து நீர்ப்பாசனத்தின் தேவைக்குத் தக்கபடி தண்ணீர் கீழேவிடப்பட்டு தாமிரபரணியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு சிறிய அணைக்கு வந்து சேர்கிறது. இந்த சிறிய நீர்த்தேக்கத்தில் இருந்து இரண்டு பெரிய எஃகுக் குழாய்கள் வழியாகத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, நான்கு குழாய்களாகப் பிரிந்து பாபநாசம் மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நான்கு மின் உற்பத்திக் கலன்களுக்கும் சென்று அங்கு மின்சாரம் உற்பத்தியாகிறது. இங்கே அமைக்கப்பட்டுள்ள மின்கலன்களின் திறன் ஒவ்வொன்றும் 7 மெகா வாட்டுகள் ஆகும்.

சேர்வலாறு தாமிரபரணி ஆற்றுடன் கீழ் அணைக்கு மேல் புறத்தில் முண்டந்துறை என்னுமிடத்தில் சேருகிறது. கீழ் அணையின் கொள்ளளவு குறைவாக இருப்பதால், மழைக் காலங்களில் சேர்வலாற்றில் வெள்ளம் வரும்போது பாபநாசம் மின் உற்பத்தி நிலையத்தின் தேவைக்கு அதிகமாக வரும் நீர் கீழ் அணையின் மீது வழிந்தோடி மின்சாரத்திற்குப் பயனில்லாமல் பாய்ந்தோடி விடுகிறது. மேலும் தாமிரபரணி குறுக்கே அணைக்கட்டுகள் மட்டுமே இருப்பதால் ஆண்டுக்குச் சுமார் 3000 மில்லியன் கன அடி தண்ணீர் விவசாயத்திற்கும் பயன்படாமல் கடலில் கலந்து விடுகிறது.

சேர்வலாறு நீர்மின் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகள் நடைபெறுகின்றன. 1. சேர்வலாறு அணை, 2. தாமிரபரணி நீர்த்தேக்கத்தையும் சேர்வலாறு நீர்த் தேக்கத்தையும் இணைக்கும் சுரங்கம். 3. சேர்வலாறு அணையின் கீழ் 20 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் உற்பத்திக் கலன் உள்ள மின் நிலையம்.

சேர்வலாற்றில் அணை கட்டப்படுவதால் சேர்வலாற்றின் தண்ணீர் தேக்கப்பட்டு சேர்வலாறு மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் தற்போது தாமிரபரணி நீர்த் தேக்கத்தில் இருந்து கீழே விடப்படும் தண்ணீரும் சுரங்கம் வழியாகச் சேர்வலாறு தேக்கத்திற்கு வந்து சேர்வலாறு மின் நிலையத்தில் மின் உற்பத்திக்குப் பயன்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் சராசரி ஆண்டு ஒன்றிற்கு 55.5 மில்லியன் யூனிட்டுகளாகும்.

சேர்வலாறு நீர்த் தேக்கத்தின் காரணமாக, பாபநாசம் கீழ் அணையின் மீது தண்ணீர் வழிந்தோடுவது தவிர்க்கப்படுவதால், பாபநாசம் மின்நிலையத்திற்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக்கிறது. இதனால் பாபநாசம் மின் நிலையத்தில் சராசரி ஆண்டொன்றிற்குக் கூடுதலாக 19.5 மில்லியன் யூனிட்டுகள் கிடைக்கும்.

ஆக, இத்திட்டத்தினால் சராசரி ஆண்டொன்றிற்கு 175 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும்.

சேர்வலாறு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் சேமிக்கப்படுவதால் கடலில் தண்ணீர் கலப்பதும் தவிர்க்கப்பட்டு தாமிரபரணி நீர்ப்பாசனப் பகுதிகளில் விவசாயத்திற்குக் கூடுதலான தண்ணீர் கிடைக்க ஏதுவாகிறது. இதன் காரணமாக, சேர்வலாறு அணைக்காகும் செலவில் 60 விழுக்காட்டை பொதுப்பணித் துறை ஏற்றுக் கொள்கிறது.

ஆக, இத்திட்டம் மின்சாரம், விவசாயம் ஆகிய இருதுறைகளுக்கும் பயனளிக்கிறது. அதே தண்ணீர், சேர்வலாறு பாபநாசம் ஆகிய இரு மின் நிலையங்களிலும் மின் உற்பத்திக்குப் பயன்படுவதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.



# மகளிர் நலம்


**பூ. சண்முகவடிவு**

சமூகநல அலுவலர்,

நெல்லை மாவட்டம்.


திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோருக்கான பல சிறப்புத் திட்டங்கள் சமூகநலத்துறை மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

முதலமைச்சர் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் 1536 குழந்தைகள் காப்பகங்களும் நகராட்சிப் பகுதிகளில் 262 குழந்தைகள் காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்குழந்தைகள் காப்பகங்களில் 2 வயதுக்கு மேல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு அனைவருக்கும் ஆண்டு முழுவதும் மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் நல்லமுறையில் செயல்பட ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் ஒரு குழந்தைகள் நல அமைப்பாளரும் மதிய உணவு தயாரிக்கவும் குழந்தைகளைக் கவனிக்கவும் இரு உதவியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். குழந்தைகளுக்கெனக் கல்வி உபகரணங்களும் விளையாட்டுப் பொருள்களும் உள்ளன.

30.6.82க்கு முன்பு செயல்பட்டு வந்த காப்பகங்கள் அனைத்தையும் நர்சரி பள்ளிகளாக மாற்றி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அக்காப்பகங்களில்பணியாற்றும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் தற்போது ஒரு மாத சிறப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் 930 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மகளிர் மன்றங்களில் குழந்தைகள்நலம், சுத்தம், சுகாதாரம் குடும்பநலம், சிறுசேமிப்பு ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. சமையல் செய்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,24,000 - நிதி ஒதுக்கீடு செய்கின்றது. குழந்தைகள் கண்காட்சி நடத்தி சிறந்த குழந்தைகளுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. ஆண்டுக்கொருமுறை சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆண்டுஒன்றுக்கு 8 பயிற்சி முகாம்கள் சமூகநலத்துறை மூலம் நடத்தப்படுகிறது.

இத்துறையின் கீழ் ஆத்தூரில் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு தையல் பயிற்சி நிலையம் நடைபெறுகிறது. அதில் 15 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். தேவர் குலத்தில் பிற்பட்ட வகுப்பினரான 18 பெண்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள். ரெட்டியார்பட்டியில் 19 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 30 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மூக்குப்பேரியில் 22 பெண்களும் மருதகுளத்தில் 10 பெண்களும் பனைஓலைப் பயிற்சிபெறுகிறார்கள். திருச்செந்தூரில் 9 பேர் துணி பொம்மை தயாரிக்கும் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கும் ரூ. 30- உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பாளையங்கோட்டையில் ஒரு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம் உள்ளது. அங்கு 6 அபலைப் பெண்கள், பயிற்சிக்குப் பின் மெழுகுவர்த்தி தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு ரூ.100 மாதக் கூலியாக வழங்கப்படுகிறது.

மறுமணம் செய்து கொண்ட 30 வயதுக்குட்பட்ட இளம் விதவைகளுக்குத் தலா ரூ. 1000- தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. விதவைகளின் குழந்தைகளில் 269 குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 13,000க்கு 1 முதல் பிளஸ் 2 வரை புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. ஊனமுற்ற 640 குழந்தைகளுக்கு 1 முதல் 8 வரை படிப்பவர்களுக்கு ரூ. 25 உதவித் தொகை வழங்கப்படுகிறது. விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்கப்படுகிறது.

70 ஏழை மாணவிகளுக்குத் தட்டச்சு படிக்க ஒரு மாணவிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150ம், கணக்கியலுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 165ம், சுருக்கெழுத்து பயில ரூ. 220ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

விதவைகள், அனாதைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எட்டாம் வகுப்புவரை படித்திருந்தால், அவர்களுக்கு இரண்டாண்டுக் காலக் குறுகிய காலப் பயிற்சி அளித்து பள்ளி இறுதித் தேர்விற்கு அனுப்பப்படுகிறது. எட்டாம் வகுப்புவரை படித்தவர்களுக்குத் தையல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பணிபுரியும் மகளிர் இல்லம் ஒன்று தூத்துக்குடியில் இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. அதில் தற்போது 26 பேர் தங்கியுள்ளனர்.

பாளையங் கோட்டையில் நடைபெறும் பிளாரன்ஸ் ஸ்வின்ஸன் செவிகேளாத - பேசுந்திறனற்ற விழி இழந்தோர் பள்ளி, சிவசைலம் காந்தி கிராம சாந்தி கல்வி நிறுவனம் முதலியனவாகும். இம்மூன்றுசிறப்புப் பள்ளிகளுக்கும் சமூகநலத்துறையிலிருந்து ஆசிரியர் ஊதியம், பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

தன்னிச்சை நிறுவனங்களால் நடைபெற்று வரும் குழந்தைகள் காப்பகம், ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள், பணிபுரியும் மகளிர் இல்லம், காவலர் குடியிருப்பு மகளிர் மன்றம் ஆகியவைகளுக்குத் தமிழ்நாடு மாநில சமூகநல வாரியம் மூலம் அவ்வப்போது நிதி உதவி வழங்கப்படுகிறது.

# பார் போற்றும் பத்தமடைப் பாய்கள்




அந்த ஊர் மிகச் சிறியது என்றாலும், அதன் புகழோ மிகவும் பெரியது; மூர்த்தி சிறியது என்றாலும் கீர்த்தி பெரியது என்பார்களே அப்படி!

திருநெல்வேலியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில், முண்டந்துறை புலிகள் உய்விடத்திற்குப் போகிற வழியில் உள்ளது தான் பத்தமடை கிராமம்.

சேலம் என்றதும் மாம்பழம் நினைவுக்கு வருவதுபோல, பத்தமடை என்றதும் பாய்தான் நம் கண்முன் காட்சியளிக்கிறது.

முஸ்லீம்கள் மிகுதியாக வாழும் பகுதியில், பாய் தயாரிக்கும் தொழிற்கூடம் உள்ளது. உள்ளே நுழைகிறோம். சின்னஞ்சிறிய கைகளினால் உருவான பலவண்ணப் பாய்கள் நம் கண்ணைக் கவர்கின்றன.

இவர்களுக்கென ஒரு சங்கம் உள்ளது. அது, பத்தமடை உயர்ரகப் பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட். இது 1964ல் துவக்கப்பட்டது. கடந்த 28 ஆண்டுகளாக இச்சங்கம் பாய் உற்பத்தியில் பேரும் புகழும் பொருளும் ஈட்டி வருகின்றது. தற்சமயம் இச்சங்கத்தில் 190 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு அடிப்படையில் இத்தொழில் இவர்களுக்கு நிலையான வருமானத்தையும் புகழையும் ஈட்டித் தருகின்றது.

அங்குள்ளவர்களை மேலும் விசாரிக்கும்போது, கடந்த 300 ஆண்டுக் காலமாகவே இத்தொழில் நடந்து வருகிறதென்றும், பரம்பரையாக இது இன்றளவும் தொடர்ந்து வருகிறது என்றும் அறிகிறோம். குலத்தொழில் கல்லாமல் பாகம்படும் என்பது போல, இத்தொழில் ஒரு குடும்பத் தொழிலாக, குடிசைத் தொழிலாக ஆல்போல் தழைத்து வருகிறது. குடும்பத்தில் பெரியவர்கள் மட்டுமல்ல, சிறுவர்கள் கூட இத்தொழிலில் ஈடுபட்டு குடும்ப வருவாய்க்குக் கை கொடுக்கிறார்கள். இவர்கள் ஒரு நாளைக்கு நான்கு ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். குடும்பத்தில் எல்லாரும் இத்தொழிலில் ஈடுபடுவதால் குடும்ப எண்ணிக்கையைப் பொறுத்து வருமானம் சற்றுக் கூடுதலாகக் கிடைக்கிறது. அதாவது வேலைக்குத் தகுந்தாற்போல கூலி கிடைக்கிறது. பொதுவாக, ஒரு குடும்பத்தில் கோரை பதனிடுதல் முதல் நெசவு வரை எல்லாருக்கும் எல்லாத் தொழிலும் தெரியும். சுமார் 50 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.

பாய்த் தொழிலுக்கு முக்கியமான மூலப்பொருள் கோரை இது எங்கு கிடைக்கிறது? நெல்லையில் தாமிரபரணி பாயும் கரைகளில் கோரை நிறையக் கிடைக்கிறது. இது தவிர கரூரிலிருந்தும் தருவிக்கப்படுகிறது.

சாதாரணக் கோரைதான் என்றாலும், இதைப் பதப்படுத்தி வகைப்படுத்தி, அதைச் சன்னம் சன்னமாகக் கிழித்து, அதில் கைவண்ணம் காட்டுவதே பெருங்கலையாயிற்றே?

நூலைச் சாயத்தில் தோய்த்து வண்ணப்புடவை தயாரிப்பது போல, கோரை நாரையும் சாயத்தினால் ஊறவைத்து வண்ணப் பாய்கள் தயாரிக்கின்றனர்.

படுக்கைப் பாய்கள், மடிக்கும் பாய்கள், பந்திப் பாய்கள், உட்காருவதற்கான பாய்கள் இப்படி பல அளவுகளில், பல வண்ணங்களில், பல வடிவமைப்புகளில் தயாரிக்கப்படுகின்றன. கோரை



பாங்காய் நடக்கும் பாய்நெசவு

களினால் பாய்கள் தவிர அழகிய கைப்பைகள், தட்டுகள், மணி பர்சுகள் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன. இவையன்றி பெயர்களும்கூட பாய் நெசவில் மிக நேர்த்தியாகச் செய்யப்படுகிறது. எல்லாவற்றுக்கும் எல்லா இடங்களிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. கைவண்ணமும் தரமும் இருந்தால் எதுவும் எளிதில் விலை போகும் அல்லவா?


கோரை இழைக்கும் பணி நடைபெறுகிறது.

பாய்நெசவு மிகவும் கவனமாகச் செய்யப்படுகிறது. வெள்ளை மற்றும் வண்ணங்களில் நெசவு செய்யும்போது, தேவைப்படும் வடிவங்கள் (டிசைன்கள்) அதில் வரவழைக்கப்படுகின்றன. சாதாரணப் பாய் தயாரிக்க 3 நாட்கள் ஆகும். உயர்ரகப் பாய்கள் தயாரிக்க 10 அல்லது 15 நாட்கள் ஆகும். ஒரு பாயின் குறைந்த விலை ரூ. 6.50 லிருந்து அதிக விலை ரூ. 120 வரை உள்ளது. உயர்ரகப் பாயின் அதிக நீளம் 6 அடி அகலம் 3 அடி. உயர் ரகப் பாய், சன்னமான துணி போன்று மிகவும் மிருதுவாக அழகாக இருக்கின்றது.

பத்தமடை கிராமத்தில் தயாராகும் பாய்கள் நம்நாடு மட்டுமல்ல, உலகமே விரும்பி வாங்குகிறது. இந்தப் பாய்கள் ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாகிறது. ராணி எலிசபெத்துக்கும், அவரது மகன் சார்லஸ் திருமணத்துக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாயின் நேர்த்தியைப் பண்டித நேரு அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் பாய்களை காதிகிராப்ட், வி.டி.ஐ. ஆகிய நிலையங்களிலும் நாம் வாங்கிக் கொள்ளலாம்.

பாய் நெசவுக்கு முந்தி, உயர் ரகப் பாய்களுக்கான கோரைகள் முறுக்கேற்றப்படுகின்றன. 40, 50 நெம்பர் பாய்களுக்கான நார் அவ்வாறு முறுக்கேற்றப்படுவதில்லை.

பச்சைக் கோரையானது உருண்டை வடிவில் இருக்கும். அதை இரண்டாகக் கிழித்து வெயிலில் காயப்போடுவார்கள். 10-15 நாள் கழித்து ஓடுகிற தண்ணீரில் ஊற வைப்பார்கள். மூன்று நாள் கழித்து அதை எடுத்து, அதிலுள்ள சதைப் பற்றை எடுத்துவிட்டு, ரக வாரியாகக் கிழிப்பார்கள். இவ்வாறு நார் எவ்வளவு மெல்லியதாகக் கிழிக்கப்படுகிறதோ அது பாயின் தரத்தை உயர்த்துகிறது. நூலில் 100ஆம் நெம்பர் இருப்பது போல, பாய் தயாரிக்கும் கோரை நாரிலும் 40, 50, 100, 120, 140 என்று நெம்பர்கள் உள்ளன.

முதலில் கோரையைப் பதப்படுத்துகிறார்கள். இதை 'இழைத்தல்' என்கிறார்கள்.

1980-81ல் ரூ. 1,71,028க்குப் பாய்கள் தயாரிக்கப் பெற்றன. விற்பனை ரூ. 2,32,650. இலாபம் ரூ, 10,659. தமிழகத்தில் குறிப்பாக நெல்லைக்குப் பெருமை சேர்க்கும் பத்தமடைப் பாய்கள் பார்போற்றும் பாய்களாக விளங்குகின்றன என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடவேண்டும்.

— பி. வி. கிரி.

## கயத்தாற்றில் கட்டபொம்மன் நினைவுத் தூண்

வெள்ளையனை எதிர்த்து வீரமுழக்கமிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட கயத்தாறு என்னுமிடத்தில் அமைந்துள்ள நினைவுத்தூண்தான் இது. 16.7.1970இல் இத்தூண் எழுப்பப்பெற்றது.



# சிறுசேமிப்பில் முதலிடம் வகிக்கும் மாவட்டம்!

சேமமுற வாழ்வதற்குச் சிறுசேமிப்பு இன்றியமையாதது என்பதை நாமறிவோம்.

நெல்லைமாவட்டம் தொடர்ந்து 1978-79, 1979-80, 1980-81 ஆகிய மூன்று ஆண்டுகளாகச் சிறுசேமிப்பில், மாநிலத்திலேயே முதலிடம் வகித்து வருகின்றது. அதற்குக் காரணம் என்ன?

இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியதுதான்!

பெருவாரியான மகளிர் முகவர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட முகவர்களின் சலியா உழைப்பின் மூலம் இவ்வியக்கம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றது.

இந்த முகவர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அடிக்கடி பயிற்சி மற்றும் பல வழிகளில் ஊக்கம் அளித்து, சரியான முறைகளில் வழி நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியக் களப் பணியாளர்கள், நகராட்சி மத்திய மாநிலச் சேமிப்பு அலுவலர்கள் இடையறாது உதவினர்.

அஞ்சலகங்களும் தங்களது பணியினைச் சுணக்கமில்லாமலும் பயனுள்ள வழியிலும் செயல்பட அஞ்சலகச் சேமிப்பு வளர்ச்சி அலுவலர் மற்றும் பல அலுவலர்கள் உதவினர். கிராமங்களில் பரவியுள்ள கிளை அஞ்சலக அலுவலர்களின் பணியும் குறிப்பிடத்தக்க அளவில் அமைந்தது. எனவே இது ஒரு கூட்டு முயற்சி என்றால் மிகையாகாது.



1981-82-ல் குறியீடு ரூ. 275 இலட்சம். வசூல் மொத்த தொகை ரூ. 1822-95 இலட்சம். முதிர்ச்சி அடைந்த கணக்குகளுக்குத் திரும்பக் கொடுத்த தொகை போக நிகர வசூல் தொகை ரூ. 427.25 இலட்சம். இதே போல், 1982-83 ல் இலக்கு ரூ. 300 இலட்சம். மொத்த வசூல் ரூ. 1297.79 இலட்சம். நிகர வசூல் தொகை ரூ. 267.11 (நவம்பர் முடிய) இலட்சம்.

மகளிர் முகவர்கள் பெருவாரியாகப் பட்டி தொட்டிகளில் நியமிக்கப்பட்டனர். கிராமங்கள் தோறும், வீடு வீடாகச் சேமிப்புப் பிரச்சாரம், அஞ்சலக அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்களின் நேரடிக் கவனிப்பில், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஊக்கத்தின் பேரில், மத்திய மாநில சேமிப்பு அலுவலர்களின் தொடர்ந்த ஈடுபாட்டுடன் நடைபெற்றது. இதன் காரணமாக, ஆயிரக்கணக்கில் கணக்குகள் குவிந்தன. பல கிராமங்கள் முழுச் சேமிப்புக் கிராமங்களாக அறிவிக்கப்பட்டன.

அதற்குப் பிறகு உள்ள ஆண்டுகளில் இந்த இயக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. மக்கள் சேமிப்பினை அஞ்சலகம் மூலம் சேமிக்கத் துவங்கினர். நீண்ட காலச் சேமிப்பும் அவசியம்- அதனை அஞ்சலகம்மூலம் சேமித்தால் வட்டி அதிகம் என்ற உணர்வும் ஏற்படலாயிற்று. எனவே, ஒழுங்குபடுத்தப்பட்ட முகவர்கள் மாவட்ட முழுவதும் வலை பின்னியதுபோன்று தோன்றினர். பலன், வரலாறு காணாத அளவில் தனிப்பட்ட மக்கள் மூலமும், அஞ்சலகக் குறிப்பிட்ட காலவைப்புக் கணக்குகளின் மூலமும், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் விற்பனை மூலமும் வரவு பெருகுகின்றது.

தரமான முகவர்களின் சாதனை விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1977—78 | ... | ரூ. 8,64,450 |
| 1978—79 | ... | ரூ. 40,16,280 |
| 1979—80 | ... | ரூ. 75,41,470 |
| 1980—81 | ... | ரூ. 92,27,830 |
| 1981—82 | ... | ரூ. 1,04,47,250 |
| 1982—83 | ... | ரூ. 1,30,00,000 |

(நவம்பர் முடிய)

இந்தக் கால கட்டத்தில் தொடர்ச்சியாக 800-க்கும் மேற்பட்ட கிளை அஞ்சல அலுவலர்களுக்கும்பயிற்சியளிக்கப்பட்டது. இதன் விளைவாக, கிளை அஞ்சலக அலுவலர் மூலம் வசூல் மேலும் தீவிரமடைந்தது. அஞ்சலகங்களின் ஒத்துழைப்பு கணிசமான அளவு உயர்ந்தது ஒரு சிறப்பு அம்சம்.

மேலே கண்ட சிறப்பு அம்சங்கள் தவிர சம்பளப்பட்டியல் சேமிப்பு, 'சஞ்சாயிகா' என்று அழைக்கப்படும் பள்ளி மாணவர் சேமிப்பு ஆகிய இரு திட்டங்களும் முறையாக அமல் நடத்தப்பட்டன.

சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்ட மூலம் வசூல் விவரம் :—

| | | |
|---|---|---|
| 1977—78 | ... | ரூ. 52,39,000 |
| 1978—79 | ... | ரூ. 81,72,000 |
| 1979—80 | ... | ரூ. 77,79,000 |
| 1980—81 | ... | ரூ. 85,72,310 |
| 1981—82 | ... | ரூ. 1,01,46,675 |
| 1981—83 | ... | ரூ. 76,24,500 |

(நவம்பர் முடிய)

1978—79-ல் நெல்லையின் சாதனை 253.43 இலட்சம் குறியீடாகிய 75 இலட்சத்தைவிட இது 338 சதம் ஆகும். தமிழக அரசு, மேற்கண்ட சாதனையைப் பாராட்டி வெள்ளிக்கேடயம் இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ளது. சுழல் கேடயம் பரிசளிக்கும் போது மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக முதலிடம் வகித்தால், கேடயம் சுழலாது, நெல்லைக்குப் பெருமையளிக்கும் வண்ணம் நிலைபெறும் என்றார்.

நெல்லை 1979-80-லும் முதலிடம் பெற்றது. 1980-81-ல் மறுபடியும் முதலிடம் பெற்று சுழல் கேடயத்தைச் சுழலவிடாமல் நிலை நிறுத்தியது. 1978-79, 1979-80 இரண்டு ஆண்டுகளுக்கும் தமிழக அரசு, குறியீட்டை அடைந்ததற்கு ரூ. 25,000மும் முதலிடம் பெற்றமைக்கு 1 இலட்ச ரூபாயும் ஆக 1,25,000 ஊக்கப் பரிசாக நெல்லைக்குத் தந்து பெருமைப்படுத்தியது. 1980-81ஆம் ஆண்டிற்கும் இதே போல் ஊக்கப் பரிசு எதிர்பார்க்கப்படுகிறது.

1978-79, 1979-80 ஆண்டில் அரசினர் வழங்கிய ஊக்கப் பரிசுத்தொகையாகிய ரூ. 2.50 இலட்சத்தை இம்மாவட்டத்தில் அதிகமாக மக்கள் கூடும் இடங்களிலும், பேருந்து நிலையங்களிலும் மணிக் கூண்டுகள் கட்டி சிறுசேமிப்புத் திட்டம் மற்றும் குடும்பநலத் திட்டம் போன்ற திட்டங்கள் விளம்பரப்படுத்த அரசினர் அனுமதி பெற்று, திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



# கிராமப்புற வீட்டுவசதி திட்டம்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகமெங்கும் 2 இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க தமிழக அரசு திட்டம் வகுத்தது. இந்தத் திட்டத்தினை கோட்ட மற்றும் வட்ட அளவில் அமைக்கப்பட்ட கிராமியக் கூட டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் 3000 வீடுகள் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, குறியீடும் நிறைவேற்றப்பட்டு விட்டது. 1980-81ஆம் ஆண்டு முதல் 1982-83 ஆம் ஆண்டு அதாவது 30.11.82வரை 7150 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு உள்ளன. அதில் 5762 வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டடப்பட்டு உள்ளன.

1.7.82 முதல் 30.11.82 முடியவுள்ள காலத்தில் 1509 கடன் மனுக்கள் பெறப்பட்டு, தற்சமயம் கடன் மனுக்கள் வாங்கவும் ஒப்புவிக்கவும் தடையுள்ளது. ஹட்கோ திட்டத்தின் கீழ் மட்டும் கடன் மனு வாங்கத் தடையில்லை. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்குப் பட்டுவாடா கோரிக்கைகள் அனுப்பப்பட்டதில், இன்னும் 1705 கடன் மனுக்களுக்கு ரூ.48.43 இலட்சம் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

1.7.82 முதல் 30.11.82வரை திருநெல்வேலி மாவட்டத்தில் 417 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. அதில் 362 வீடுகள் ஆதிதிராவிடர்களைச் சார்ந்தது.

31.10.82 தேதியில் 904 வீடுகள் கட்டப்பட்டுப் பல்வேறு நிலையில் உள்ளன. அவை அடிமட்டம்-765, ஜன்னல்மட்டம்- 110, கூரை மட்டம்-29, ஆக மொத்தம் 904 வீடுகள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 கிராமிய வீட்டுவசதிச் சங்கங்களை நிர்வகிக்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு கூட்டுறவு முதுநிலை ஆய்வாளரின் பதவி இலவசமாக அரசினரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கும், கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் பெரும்பான்மையாக ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் வசிக்க முன்வரும் ஆதிதிராவிடரல்லாதாருக்கும் வழங்கப்படும் கடன் தொகைக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. ரூ.3750 மதிப்பீடுடன் உள்ள வீட்டுக்கு ரூ. 3000 கடன் தொகை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்கு ரூ 1000 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கட்டும் உறுப்பினர்களுக்குச் சிமெண்ட் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்காக இச்சங்கங்கள் மூலம் சிமெண்டும் விநியோகம் செய்யப்படுகிறது.



# திருநெல்வேலி மாவட்டத்தில் மின்சாரம்

**துணை மின் நிலையங்கள்:**

1. 230 கே. வி. தானியங்கி துணை மின் நிலையம் 2, 2. 110 கே. வி. துணை மின் நிலையம் 5, 3. 66 கே. வி. துணை மின் நிலையம் 16, 4. 33 கே. வி. துணை மின் நிலையம் 3, 5. 66 கே. வி. மின்பாதை துணை மின் நிலையம் 4, 6. 33 கே. வி. மின் பாதை துணை மின் நிலையம் 1.

**1982—83 ஆண்டில் அமைக்கப்படவிருக்கும் துணை மின் நிலையங்கள்:**

1. நாராயணபுரம் 66 கே. வி. துணை மின் நிலையம், 2. சுரண்டை 66 கே. வி. துணை மின் நிலையம், 3. பாளையங்கோட்டை 110 கே.வி. துணை மின் நிலையம், 4. உடன்குடி 33 கே. வி. துணை மின் நிலையம்.

புதிதாகத் துவங்கப் பெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலையம் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று இயந்திரங்களுடன் செயல்பட்டு வருகிறது. அம்பாசமுத்திரம் வட்டத்தில் பாபாநாசத்தின் அருகில் சேர்வலாறு என்ற இடத்தில் புனல் நீர் மின் உற்பத்தி நிலையம் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு, மேல்தாம்பிரபரணி, புனல்நீர், மின்நிலைய திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடங்குளம் அருகே அணு மின் நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களின் நற்பயனாக, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது அண்டை மாவட்டங்களான இராமநாதபுரம், மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றின் மின் தேவையைத் தன்னிறைவுசெய்வதோடு, நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக, கிராமப்புறங்களில் மின் இழப்பு குறைந்து, மின் அழுத்தக் குறைபாடு வெகுவாகச் சீர் செய்யப்படும்.

**அரிசனக் குடியிருப்புகளுக்கு:**

1. 1-11-82 நிலவரப்படி மொத்த அரிசனக்குடியிருப்புகளின் எண்ணிக்கை, 859. 2. 30-11-82 முடிய தெரு விளக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகள், 857. 3. மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய மீதி அரிசனக் குடியிருப்புகள் 2, (1) சிவலப்பேரி அரிசனக் குடியிருப்பு—நாங்குனேரி தாலுகா, (2) பிரதான்குளம் அரிசனக் குடியிருப்பு — (மனகாவலம்பிள்ளை நகர்) திருநெல்வேலி தாலுகா.

**குடிசைகளுக்கு:**

1. 30-10-82 முடிய பெறப்பட்ட மனுக்கள்-3,048. 2. 30-11-82 முடிய மின் இணைப்பு வழங்கப் பெற்ற குடிசைகளின் எண்ணிக்கை-21,974. 3. 30-11-82 முடிய மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய மீதி குடிசைகளின் எண்ணிக்கை - 2,818.




## புனித கோயில்களும், புண்ணிய தீர்த்தங்களும்!

**ஆசிரியர்:**

புலவர் சி. முத்துப் பிள்ளை,

**கிடைக்குமிடம்:**

இலக்குமி நிலையம்,
10, காசிம் சாகிப் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**விலை ரூ. 21.50 பக். 340**

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றின் சிறப்புடைய வாகிய சிவன், சக்தி, திருமால், முருகன், விநாயகர் உள்ளிட்டன வுமான ஐம்பத்து மூன்று திருக் கோயில்களின் புனித அருள் நலத்தை விளக்கும் அற்புதமான நூலாகத் திகழ்கிறது இது.

பக்திநெறி அன்பர்கட்கும் பயன்பட வேண்டும் என்ற நோக் கோடு இந்நூல் எழுதப்பட்டிருந் தாலும் திருக்கோயில்கள் பற்றிய பல விவரங்களை எடுத்துரைக் கின்றது. திருக்கோயில்கள் அமைப்பு முறையிலிருந்து, தலங் களின் தன்மை பெருமைகளை விளக்கி, திருக்கோயில் வழிபாட்டு முறைகளையும் விளக்கிக் கூறு கிறது இந்நூல்.

திருக்கோயில்களைப் பற்றிய முறையான விவரங்களைவேண்டு வோரும், பக்திநெறி மிகுந்த அருள்நலம் வேண்டுவோரும் விரும்பிப் படிக்க பயன்தரக்கூடிய நிலையில் உள்ள இந்நூல், அனை வருக்கும் பயன்தரத்தக்கதாகும்.

## மேடை மின்னல்

**ஆசிரியர்:**

மு.முத்துக்காளத்தி,

**கிடைக்குமிடம்:**

பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600 001.

**விலை ரூ. 10.75 பக். 168**

நெருப்பினும் சுடும் புழுதியில் செருப்பின்றி தனக்காகத்தேய்ந்த 'ஆசைக்குரிய மீசை வாத்தியார்' ஜான் ஜேசுதாசன் அவர்களின் திருப்பாதங்களுக்கு ஆசிரியர் சூட்டியுள்ள இந்தக் கவிமலர்கள் பல்வேறு நேரங்களில் கவியரங்கு களில், விழாக்களில், மாநாடு களில் கருத்தரங்குகளில் தனி நிகழ்ச்சிகளில் பாடியதாகும்.

புதுக்கவிதைப் போக்கில் அமைந்த இக்கவிதைகள் மேடை யில் வீசிய மேன்மைத் தமிழின் பாட்டரங்குத் தீங்கனிகள்.

வாழும் நெறிமுறையை வகைப் படுத்திக் காட்டுவதில் வல்லவ ரான நூலாசிரியர்

''கண்டு மகிழ்ந்து குலவினால்
கொண்டு கொடுத்துக் போதாது
கொள்வோம் உறவு''

என்று ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எளிமையாக அடித் தளம் அமைத்துக் காட்டுகிறார். இப்படி எத்தனையோ எடுத்துக் காட்டுகளை நயம்பட எடுத்து ரைக்கலாம்.

சிந்தனை முத்துக்களின் குவிய லான இந்நூல், எல்லாரும் படித் துப் பயனடைய வேண்டிய பைந்தமிழ் நூலாகும்.

## பாரதியைப் பற்றி ஜீவா!

**ஆசிரியர்:**

ப. ஜீவானந்தம்,

**கிடைக்குமிடம்:**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிட்டெட்,
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை-600 098.

**விலை ரூ. 6.50 பக். 134**

1962-ஆம் ஆண்டில் பாரதி யைப்பற்றி அவருடைய பிறந்த நாள் விழாவில் மறைந்த தலை வர் ஜீவானந்தம் அவர்கள் ஆற் றிய உரையே பாரதியைப் பற்றி கடைசியாக ஆற்றிய உரையாகும் அதில் 'பாரதியார் பெயரில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்' என்று ஜீவா கூறியுள் ளார். இந்தக் கருத்தை இன்று தமிழ் நாடு அரசு செயல்படுத் தியுள்ளதை அறிவோம்.

இப்படி பாரதியைப் பற்றி தீர்க்க தரிசனமான கருத்துக் களை ஜீவா மொழிந்ததை அள் ளித் தருகிறது இந்நூல்.

கவியரசர் பாரதியாரின் படைப்புகளை புதிய நோக்கில் ஆராய்ந்து ஜீவானந்தம் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் பாரதியின் புகழுக்கு அடித்தள மாக அமைந்தவை ஆகும்.

பாரதி உலகமகாகவி என்பதை ஆணித்தரமாக ஜீவானந்தம் அன்றே கூறிய கருத்துக்கள் எத் தனை உண்மையானவை என் பதை இன்று இந்நூலைப் படிப்ப வர்கள் ஒவ்வொருவரும் உணரு வர்.

'பாரதியைப் பற்றி ஜீவா' என்ற இந்நூல் இரண்டாம் பதிப் பாக இப்பொழுது வெளிவந் துள்ளது. பாரதி நூற்றாண்டு விழா ஆண்டில் வெளியாகியுள்ள சிறந்த நூல்களில் இது மிகவும் பாராட்டுக்குரிய நூலாகும்.

—மாமூலன்

## சர்வாதிகாரி இடி அமீன்

**ஆசிரியர்:** பிரபு சங்கர்,

**வெளியீடு:** மருதமலையான் பதிப்பகம்,
33, பொன்னுச்சாமி நாயக்கன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014

**பக்கம்: 376 விலை ரூ. 24.**

உகாண்டாவை ஆட்சி செய்த சர்வாதிகாரி இடி அமீனின் வர லாற்றை இனிய தமிழ்நடையில் விறுவிறுப்பான முறையில் எழுதி யிருக்கிறார் நூலாசிரியர். இட் லரைவிடக் கொடியவன், ஜார் மன்னனைவிடக் கொடுங்கோன் மையாளன் இடிஅமீன் என்பதைத் தக்க சான்றுகளுடன் தெரிவித்து நிறுவியிருக்கிறார்.

கொடூரமான நடவடிக்கை களும் குரூரமான சிந்தனைகளும் பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் சுபாவமும் கொண்ட இடிஅமீன் - நமது புராண காலத் துக் கம்சன் - சூரபத்மன் போன்ற கொலைபாதக உணர்வுகளைக் கொண்டவன் என்னும் செய்தி இந்நூலில் தெளிவாகச் சொல் லப்பட்டிருக்கிறது. காட்டு தர் பார் எப்படி இருக்கும் என்பது காட்சிபூர்வமாக எடுத்துக் காட் டப்பட்டிருக்கிறது.

வரலாற்று நூலைப் படிக்கின்ற உணர்வு ஏற்படவில்லை - ஒரு சுவையான நவீனத்தைப் படிப் பது போல - ஆர்வநிலைகள் நிறைந்துள்ள ஒரு நாடகத்தைப் பார்ப்பது போன்ற உணர்வே நமக்கு ஏற்படுகிறது. நிகழ்ச்சி களை வாசகர்களுக்கு ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ள பாங்கு தான் இச்சிறப்புக்குக் காரணம்.

இடி அமீனால் சித்திரவதைக்கு ஆளாகிய ஆடவர்களையும், பெண்டிரையும் குறித்து நாம் அறிந்து கொள்ளும் போது - அவர்களுக்காக நமது உள்ளம் இரங்குகிறது; கண்களில் நீர் சொரிகின்றது.

ஆசிரியரின் முன்னுரையே ஒரு நவீனம்போல் சுவையளிக் கிறது. படிக்கத் தொடங்கினால் கீழே வைக்க முடியாதபடி, அலுப் புத் தட்டாதவாறு நூல் அமைந் துள்ளது பாராட்டுக்குரியது. ஓர் ஆராய்ச்சியாளரின் திறமை யும் பண்பும் இந்நூலாசிரியருக்கு உண்டு என்பது புரிகிறது. ஒவ் வொரு அத்தியாயமும் சுவை யான தலைப்புப் பெற்றுள்ளது. ஆசிரியரின் உழைப்பு, நூல் முழு தும் காணப்படுகிறது.

—தமிழ்ப்பித்தன்

# தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்

பள்ளிகளில் ஏற்படுகிற அமைதியின்மையைப் போக்கும் நோக்கத்தோடு, அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரில் 1895 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டது; தமிழகத்தில் இக்கழகம் 1964ல் அமைக்கப்பட்டது. இது சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. இதற்கு மாவட்ட அளவிலும் பள்ளி அளவிலும் கிளைகள் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை, கல்வி அமைச்சரைத் தலைவராகவும், அரசுக் கல்வித்துறை ஆணையர்-செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும் கொண்டு செயல்படும் இக்கழகம், ஒவ்வோராண்டும் சுமார் 4லட்ச ரூபாய் வரை பள்ளிகளுக்கும் பள்ளி மாணவ மாணவியர்க்கும் பரிசுகள் வழங்கியும், பள்ளிகள் வளர்ச்சிபெற ஆக்கப்பணிகளுக்குத் தேவையான பொருட்களை வழங்கியும், பணம் வழங்கியும் சிறப்பாகப் பணியாற்றுகிறது.

தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகம், ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியது. தமிழக அரசு, நீதி-சமூகக் கல்விக்கென உயர்மட்டக்குழு ஒன்றினை அமைத்தது. இந்தக் குழு தனது முதல் கூட்டத்தில், மாணவர்களிடையே தேசிய உணர்வு, நாட்டுப்பற்று, சமூகத்தொண்டு, சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்க்கவும், நல்லொழுக்கம், தன்னடக்கம், கடமையுணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கவும் நல்ல நீதி-சமூகக் கதைகளைப் பள்ளி ஆசிரியர், மாணவர், பெற்றோர், கல்வியாளர், மாநில தேசிய விருது பெற்றோர் ஆகியோரிடமிருந்து பெற முடிவு செய்தது. அதன்படி, தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம், சிறப்புச் சிறுகதைப்போட்டி ஒன்றினை நடத்தியதுதேர்ந்தெடுக்கப்பெற்ற சிறுகதைகளின் ஆசிரியர்களுக்குப் பரிசளிப்பு விழாவும், வானொலி கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயனடைந்த சிறந்த பள்ளிகளுக்கான பரிசளிப்புவிழாவும், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில், சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 19.1.83ல் நடைபெற்றன. பள்ளிக் கல்வி இயக்குநர் திரு ஜே. ஏ. இரயான் அவர்கள் தலைமை வகித்தார்.

சென்னை மாநகராட்சிக் கல்வி அலுவலரும் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக இணைச் செயலாளருமான திரு ஓ.அ.கனகசபை தமது வரவேற்புரையில், ''மாநகராட்சியின் கீழ் உள்ள 410 பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகக் கிளைகள் ஆரம்பிக்கப்பெற்றுள்ளன'' என்று கூறினார்.

பெற்றோர் ஆசிரியர் கழகச் செயலாளர் திரு பெ. இராமமூர்த்தி அறிக்கை படித்தார்.

கல்வி இயக்குநர் திரு ஜே.ஏ. இரயான், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்காக 4 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை கல்வியமைச்சரிடம் வழங்கி, பரிசு பெறும் பள்ளிகளுக்கும் - மாணவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அடுத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள், சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகளையும், வானொலி கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நன்கு கேட்டு,சிறந்த மதிப்பீட்டுத் தாள்களை அதிக அளவில் அனுப்பியதில் மாநில அளவில்,உயர்நிலைப் பள்ளிகளுக்கான சுழற்கேடயங்களையும், தொடக்கப் பள்ளிகளுக்கான பரிசுக் கோப்பைகளையும் வழங்கினார்.

சிறுகதைப் போட்டியில் ''இன்னா செய்தார்க்கு'' என்ற கதையை எழுதிய திரு என். கோபி என்பவருக்கு முதற்பரிசு ரூ. 1,000ம், 'நிறைவு' என்ற கதையை எழுதிய திரு வில்லவன் என்பவருக்கு இரண்டாம் பரிசு ரூ. 500-ம் 'பிரிய முடியாத உறவுகள்' என்ற கதையை எழுதிய திரு அ.முகமது அஸ்லாம் என்பவருக்கு மூன்றாம் பரிசு ரூ.250-ம் வழங்கப்பட்டது. மற்றும் 10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூ.50 வழங்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் திருவாரூர் திரு அரங்கநாத முதலியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சென்னை சிந்தாதிரிப்பேட்டை ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி நடுநிலைப் பள்ளி ஆகியவற்றிற்குச் சுழல்கேடயங்கள் வழங்கப்பட்டன. இந்த வரிசையில், தொடக்கப்பள்ளிகளுக்கான பரிசுக் கோப்பைகள் மாவட்டத்திற்கு ஒன்றாக 17-ம், பல்வேறு வகுப்புகளுக்கு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் சிறந்த 4 மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நான் அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றபோது, பெற்றோர் ஆசிரியர் சங்கங்களே பள்ளிகளை எல்லாவகையிலும் சிறப்பாக நிருவகித்து வருவதைக் கண்டேன். இப்போது இங்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அமைத்த பிறகு, முன்பு நல்ல முறையில் நடைபெறாத பள்ளிகளும் நல்லமுறையில் நடைபெறுகின்றன. எனினும், இம்முறையில் பெற்றோர்களிடமிருந்து இன்னும் போதுமான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இன்னும் பல பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் கொண்டு வந்து சேர்ப்பதற்காகக் கூட வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே ஒரு நல்ல தொடர்பு ஏற்பட வேண்டும்.

''தேசபக்தியுணர்வை நமது குழந்தைகள் உள்ளத்தில் நாம் வளர்க்க வேண்டும். தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற நான் எனது உயிரையும் தரத் தயாராக இருப்பேன் என்கிற உணர்வு நம் குழந்தைகளிடத்தில் ஏற்படுத்தியாக வேண்டும்.''

—சாமிபழனியப்பன்



# சத்தான சமையலுக்கு

மு. முத்துக்காளத்தி

மனிதனுக்கு அடிப்படைத் தேவை உணவு. ஆரோக்கியமான வாழ்வு பெற ஒவ்வொருவருக்கும் போதுமான உணவு கிடைக்க வேண்டும். போதிய உணவை உற்பத்தி செய்ய, காலம் காலமாக மனிதகுலம் அரும்பாடு பட்டு வருகிறது.

இந்தியாவில் 1947-ல் 5.5 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாயின. இப்பொழுது 13.2 கோடி டன் உற்பத்தியாகிறது. இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், உணவின் தரத்தை உயர்த்தவும் இந்தியா அயராது பாடுபட்டு வருகிறது.

சமைக்கும்பொழுது உணவுப் பொருள்களில் உள்ள வைட்டமின்கள், உப்புச் சத்துகள், ஆகியவை சேதமடைந்துவிடுகின்றன. அதைத் தடுக்க சமையல் பாத்திரங்கள் சிறியவையாக இருக்க வேண்டும். தண்ணீர் குறைவாக வைத்துச் சமைக்க வேண்டும். குறைவான நேரத்தில் சமைக்க வேண்டும்.

நாகரிகச் சமையல் முறைகளால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. சமையல் சுலபமாகிறது. இது நன்மை. ஆனால் சத்துகள் அழிந்து விடுகின்றன. இது தீமை.

இயந்திரத்தில் தீட்டிய அரிசியில் எல்லாச் சத்துமே போய் விடுகின்றது. கைக்குத்தல் அரிசியில் அனைத்துச் சத்தும் அப்படியே இருக்கின்றது. அரிசியில் தவிட்டை ஒட்டியுள்ள பகுதியில் தான் உடம்பை வளர்க்கும் புரதம், உப்பு, வைட்டமின், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் எல்லாம் இருக்கின்றன. நெல்லை இயந்திரத்தில் தீட்டும் பொழுது, வெள்ளையாக அரிசி கிடைக்கிறதே தவிர, அதில் உள்ள சத்து அனைத்தும் கொள்ளை போய் விடுகிறது. இதனால் இயந்திரங்களில் தீட்டப்படும் அரிசியை விடுத்து, கைக்குத்தல் அரிசியைச் சாப்பிடும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

தவிடு சாப்பிடும் மாட்டைக் கவனித்துப் பாருங்கள். எப்படி வலிவும் பொலிவும் உள்ளதாக இருக்கிறது! தவிடு சாப்பிடாத மனிதனைப் பாருங்கள்! எப்படி எலும்பும் தோலுமாக இருக்கிறான்!

மைதா, ஆட்டாவைவிடக் கோதுமை மாவு சத்துள்ளது. கோதுமை அரைக்கும்போதும் ஆட்டாமாவு சலிக்கும்பொழுதும் கோதுமையில் உள்ள தவிடு போய்விடுவதால், அந்தத் தவிட்டோடு சேர்ந்து வைட்டமின், உப்பு, புரதம் போன்ற சத்துப் பொருள்களும்போய்விடுகின்றன.

அரிசியைக் கழுவும்பொழுது ஒரு தடவை கழுவினால் போதும். கழுவோ கழுவென்று நான்கு ஐந்து முறை கழுவக் கூடாது. அப்படிக் கழுவினால் அரிசியில் உள்ள சத்தும் கழுவப்பட்டுப் போய்விடும். உலையில் கொஞ்சமாகத் தண்ணீர் வைத்து, சோறு கொதித்து வெந்ததும்இறக்கிவிட வேண்டும். தண்ணீரை வடிப்பதால், அதில் கரைந்துள்ள வைட்டமின் சத்து வயிற்றுக்குள் போகாமல் வீணாகக் கீழே போய் விடுகிறது.

காய்கறிகளை எடுத்துக் கொண்டாலும் சமைக்கும் பொழுது, நன்றாகத் தோலைச் சீவிவிடுவதால் சத்துப் பொருள்கள் குப்பைக்குத்தான் போகின்றன. தொப்பைக்குப் போவதில்லை. இதனால் நாம் சப்பையாக இருக்கிறோம்! எதையும் தோல் சீவாமல் சமையலுக்குப் பயன்படுத்துவதுநல்லது. காய்கறிகளில் இலைகளிலும் மேல் தோலிலும்தான் சத்துகள் இருக்கின்றன. உருளைக் கிழங்கில் தோல் உரித்தால் என்ன பொருள் தெரியுமா? உருளையிலுள்ள வைட்டமின் 30 சதவிகிதம் வீணாகப் போகிறது என்று பொருள்! ஆப்பிளையும் தோலோடுதான் சாப்பிட வேண்டுமே தவிர, தோலைச் சீவிவிட்டு அல்ல.

காய்கறிகள், கனிகளை அதிகம் அலம்புவதும் நீரில் ஊறவைத்தலும் ஆகாது. காய்கறிகளை அரிவதற்கு முன்பு தண்ணீரில் கழுவினால் போதும். வேண்டாத பகுதிகளை நறுக்குவதோடுநின்றுவிட வேண்டும். அதிகம் தோல் சீவக்கூடாது. பொடிப்பொடியாக நறுக்குவதாலும் சத்துப் பொருள் போய்விடுகிறது. நீண்ட நேரம் வேக வைப்பதும்ஆகாது. மூடிய பாத்திரத்திலேயே சமைக்க வேண்டும். இந்தவழிமுறைகளைக் கடைப்பிடித்தால் சத்துகள் இழப்பைக் குறைக்கலாம். பிரஷர் குக்கரில் சமைப்பதும், நீராவியில் சமைப்பதும் சத்துப் பொருள் வீணாவதை மிகவும் குறைக்கின்றன.

மண்பாண்டச் சமையல் உடம்புக்கு நல்லது. பித்தளை, பித்தளை கலந்த உலோகங்கள், இரும்பு ஆகியவை உணவின் தரத்தைக் கெடுத்துவிடுகின்றன. துத்தநாகம், அலுமினியம் போன்ற உலோகங்கள் உணவுப் பொருள்களில் உள்ள சில அமிலங்களில் கரைவதால் உடம்புக்கு ஊறு விளைகிறது.

''சாப்பாடு தயார்'' என்று மனைவி சொன்னதும், நீங்கள் ''சாப்பிடத் தயார்'' என்று உட்கார்ந்துவிட வேண்டும். சாப்பாட்டுக்குக் காத்திருக்கலாமே தவிர, சாப்பாட்டைக் காக்க வைக்கக்கூடாது. ''ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறாதா?' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் ஆறப்பொறுக்கக்கூடாது. அதனால் சத்துகள் அழிந்துவிடுகின்றன.

சமைத்த உணவை எடுத்துக் குளிர்பதனப் பெட்டியில் வைத்து நேரங்கழித்துச் சாப்பிடுவதும் நல்லதல்ல. அதனாலும் சத்துப் பொருள் போய் விடுகிறது. சமைத்த எந்த உணவையும் மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடக் கூடாது. அதுவும் உடலுக்குக் கெடுதல்.

சத்தான சமையலுக்கு முத்தான மூன்று வழிகள் :

1. பாத்திரத்தின் பரப்பைக் குறைத்தல்.
2. சமையல் நேரத்தைக் குறைத்தல்.
3. சமையல் வெப்பத்தைக் குறைத்தல்.




தமிழக அரசின் கல்வி, அறிவியல், தொழில் நுட்பத் துறையும் பெங்களூர் விஸ்வேஸ்ரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்பக் கண்காட்சியகமும் இணைந்து 19.1.83 முதல் 23.1.83 வரை தென்னிந்திய அறிவியல் கண்காட்சியினை, 1983ஐ சென்னையில் மதர் ஏ ஆசாம் பள்ளி வளாகத்தில் உருவாக்கியிருந்தன.

தமிழ்நாடு, ஆந்திர மாநிலம், கருநாடக மாநிலம், கேரள மாநிலம், புதுவை மாநிலம் ஆகிய ஐந்து மாநிலங்களையும் சேர்ந்த உயர்நிலைப்பள்ளிகள் மேநிலைப் பள்ளிகள் என ஏறக்குறைய 300 பள்ளிகள் பங்கு பெற்றன.

மாணவர்கள் தாங்களாகவும், அறிவியல் ஆசிரியர்களின் துணை கொண்டும் பல்வேறு விதமான விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகள் பலவற்றை உருவாக்கியிருந்தனர். அறிவியல் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் இந்தக் கண்காட்சி விளங்கியது.

வெளிமாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் மாணவியர்களும் ஆசிரியர்களும் 'வேற்று மாநிலத்தில் இருக்கின்றோம் என்ற உணர்வில்லாத வகையில் அன்புடனும் ஆதரவுடனும் நடத்தப்பட்டனர்.

மின்னணுவினால் உருவாக்கப்பட்ட வாக்களிக்கும் இயந்திரம், நீராவிக் குழாய், நீரின் ஆற்றலால் பல அற்புதங்கள், மின்சக்தியின் விளைவுகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும், தானியங்கித் துளைபோடு கருவி, தானியங்கிகார், கணிப்பான்கள், சிறு கம்ப்யூட்டர்கள், மழை அமைப்பு, வானவில் அமைப்பு இன்னும் இதுபோன்று பல்வேறு அறிவியல் நுட்பங்கள் இடம்பெற்றிருந்தன.

தொட்டிலில் கிடக்கும் குழந்தை அழுதால், தொட்டில் தானே ஆட்டிக் கொள்ளும் வகையில் ஒரு 'மாதிரி' செய்யப்பட்டிருந்தது. கழிவுப் பொருள்களைப் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்தும் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

ஏறக்குறைய 46 மாணவ மாணவியர் தமது அறிவியல் படைப்புகளுக்காகப் பரிசு பெற்றனர். 16 பேர் படிப்புதவித் தொகை பெற்றனர். 13 ஆசிரியர்கள் ரொக்கப் பரிசு பெற்றனர்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திருவனந்தபுரத்தில் உள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வெண்ட், மிகச் சிறந்த பள்ளிக்குரிய தமிழக முதல்வரின் கேடயத்தைப் பெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் கட்டளையின்படி இந்தக் கேடயத்தில் முழுக்க முழுக்க வெள்ளியினால் ஆன பொருள்களையே இடம் பெறச் செய்தனர். 13 ஆயிரம் ரூபாய் செலவில் ஆனது இது.

அதிகமான பரிசுகளைப் பெற்ற மாநிலத்துக்கு ஆந்திர மாநிலம் வழங்கும் உருள் கலனைத் தமிழ்நாடு பெற்றது.

இந்த அறிவியல் கண்காட்சி மாணவ சமுதாயத்தினரிடம் புது எழுச்சியையும் புதிய ஆர்வத்தையும் உருவாக்கியுள்ளது. ஏறக்குறைய 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கண்காட்சியைக் கண்டு களித்துள்ளனர். காண வாய்ப்புப் பெறாதவர்கள் - கண்காட்சியின் சிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு இனி இது போன்ற கண்காட்சி எப்போது வரும், என்று ஏங்கிய வண்ணம் உள்ளனர். இவர்கள் எல்லாம் அடுத்த ஆண்டு இந்தக் கண்காட்சியைக் காண முடியும்! ஆனால் ஒன்று! இவர்கள் பாண்டிச்சேரிக்குச் செல்ல வேண்டும் அல்லது கேரள மாநிலத்திற்குச் செல்லவேண்டும். அடுத்த ஆண்டு அறிவியல் கண்காட்சியை 'எங்கள் மாநிலத்தில் நடத்த வேண்டும்' என்று இந்த இரு மாநிலங்களும் வேண்டுகோள் விடுத்திருப்பதுதான் காரணம்!

—தமிழ்ப்பித்தன்



**மாணவர் பக்கம்**

# மாணவர்க்கு ஒரு மன்றம்



தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர்களுள் பேராசிரியர் மணி திருநாவுக்கரசர் அவர்களுக்கு சிறப்பானதோர் இடம் உண்டு. அவர்காலத்தில்பற்பல கழகங்கள்- தமிழ்க் கழகங்கள் அவருடைய தொடர்புகொண்டு தமிழ்ப் பணியாற்றிவந்தன. அப்பேராசிரியரின் நினைவாக, பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலான அவர்தம் மாணவர்கள் 'மணியரசு மன்றம்' என்னும் ஓர் அமைப்பினைத் தொடங்கித் தலைசிறந்த தமிழ்ப் பணியாற்றி வந்தனர். பேராசிரியர்களும் அறிஞர் பெருமக்களும் கலந்து தமிழ் வளர்த்த அம்மன்றச் சார்பில் மாணவர் நலம் கருதி 1931ஆம் ஆண்டில் 'மாணவர் மன்றம்' என்ற அமைப்பு தொடங்கப் பெற்றது.

இம் மன்றம் மாணவர்கள் பலர் கூடிப் பல பொருள் பற்றிப் பேசித் தம் சொல்லாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தொடக்கத்திலே பணியாற்றி வந்தது. சென்னையில் உள்ள உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கொண்டு சென்னைக் கடற்கரையில் மாணவர் மாநாடு நடத்திய பெருமை இம் மன்றத்திற்கு உண்டு.

எட்டாம் வகுப்பு மாணவர்க்கென ஒரு மாதிரித் தமிழ்த் தேர்வு நடந்தபோது, முதலில் ஐந்நூறு மாணவர்களே தேர்வில் கலந்து கொண்டனர். பிறகு நிலைமாறி ஆண்டுதோறும் ஆயிரம், இரண்டாயிரம் என வளர்ந்து பதினாயிரக்கணக்கான மாணவர்கள் மன்றத் தேர்வுகளில் பயன் பெறும் நிலை ஏற்பட்டது. அந்நிலையில்தான் வீரத்தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் அவர்களுடைய தலைமை மன்றத்திற்கு வாய்த்தது. அவருடைய செல்வாக்கு மன்றத்திற்கு உரமாக அமைந்தது.

1957ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 20,21ஆம் நாட்களில் நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியவர்கள் தலைமையில் தியாகராயர் கல்லூரி திறந்தவெளி அரங்கில் அமைந்த பெரிய பந்தலில் மன்ற வெள்ளி விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றும் பல தமிழறிஞர்கள் விழாவில் பங்கேற்று மன்றத் தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்தினார்கள்.

இம்மன்றம் பல்வேறு நோக்கங்களுக்காகப் பாடுபட்டு வருகின்றது. அவை:

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்தல். பள்ளிக்கூடம் நிறுவிச் சின்னஞ்சிறு குழந்தைகளிடம் உள்ள கலையுணர்வைத் தூண்டுதல், மாணவர்கள் கதை, கட்டுரை, நாடகம், கவிதை, கையெழுத்து, ஓவியம் முதலிய பல துறைகளிலும் சிறந்து விளங்க ஊக்குவித்தல், மாதிரித் தமிழ்த் தேர்வுகள் நடத்தி மாணவர்க்குப் பயிற்சி அளித்தல், மாணவர் பேச்சுத் திறனை வளர்த்தல், பேரறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவாற்றச் செய்தல்; மாணவர்கட்கும் பொதுமக்கட்கும் பயன்படக் கூடிய வகையில் நூல் நிலையம் ஒன்று நிறுவுதல், சிறந்த தமிழ் நூல்கள் வெளியிடுதல், முதியோர் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றல், இலக்கியத் திங்களிதழ் நடத்துதல்.

மாநிலம் தழுவிய அளவில் ஆண்டுதோறும் நடைபெறும் கதை, கட்டுரை, கவிதை, கையெழுத்து, ஓவியம் முதலிய கலைப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பலர் ஆர்வமுடன் கலந்து கொள்கின்றனர்.

மன்றம் இன்று நாடறிந்த ஒரு பேரமைப்பாக இயங்குவதற்கு மன்றத் தமிழ்த் தேர்வுகளே காரணமாகும். கல்லூரி, மேல்நிலை வகுப்புக்கள், பத்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு ஆகியயவை பல வகுப்புகளுக்கும் மன்றம் ஆண்டுதோறும் மாதிரி தமிழ்த்தேர்வுகள் நடத்தி, பல்கலைக் கழகத் தேர்வு, அரசுத் தேர்வுகள் ஆகியன தொடங்குவதற்கு முன் தேர்வு முடிவுகளை அறிவித்து ஊக்கி வருகிறது. தற்போது ஒன்றரை இலட்சம் மாணவர்கள் இம்மன்றத்தோடு தொடர்புகொண்டுள்ளனர். இதுவரை 20,000 திருக்குறள் நூல்கள் மாணவர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் மன்றத்தின் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.



## ஆழம் தெரிவிக்கும் கருவி

மசாசூசெட்சைச் சேர்ந்த டேடாமெரின் நிறுவனம் (Data Marine) உருவாக்கியுள்ள எல்சிடி ஆழம் தெரிவிக்கும் கருவி (LCD Depth Sound) பாட்டரியினால் இயங்கக் கூடியது. 2 அடியிலிருந்து 100 அடி வரை ஆழத்தைத் துல்லியமாகச் சிறிய திரையில் எண்களால் தெரிவிக்கக் கூடியது. எண்கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் ஒளியூட்டப் பட்டது. ஆழத்துடன், மீன் மற்றும் நீருள் கிடக்கும் பொருட்களையும் தெரிவிக்கக் கூடியது.

— கலைக்கதிர்

## இமயத்தில் மூவர்

உலகிலேயே மிகவும் உயர்ந்த சிகரமான இமயமலையின் மீது கனடா மலையேற்ற வீரர் ஒருவரும், இரு நேபாள ஷெர்பாக்களும் ஏறி வெற்றி கண்டனர்.

இந்த இமயமலைச் சிகரத்தில் அவர்கள் ஏறிக்கொண்டிருக்கும் போது, கனடா டெலிவிஷனில் அது உடனுக்குடன் ஒளிபரப்பப் பட்டது!

அந்தக் கனடா வீரர் லாரீ ஸ்கேரெஸ் லெட், (வயது 34) அவருடன் சென்ற ஷெர்பாக்கள் சுந்தரே ஷெர்பா (36 வயது) லக்கப்பா டோர்ஜி (25) கிழக்கு நேபாளம் வழியாக இவர்கள் எவரெஸ்டை எட்டினர்.

# அறிவுச் சுடர்

டான்சிலைட்டிஸ் சிறு பிள்ளைகளுக்கு தொண்டையில் ஏற்படுகின்ற நோயாகும். தொண்டைவலி, சளி, காதுவலி, மூக்கடைப்பு, மூச்சடைப்பு, சுரம் ஆகியவை இந்நோயின் அறிகுறிகள். பொதுவாக ஸ்டெரப்டோ காக்கஸ் என்னும் நுண்ணணுக்களால் டான்சிலைட்டில் ஏற்படுகின்றது.

சரிவர சிகிச்சை அளிக்காமல் இருந்தால் மேற்கொண்டு பல நோய்கள் உண்டாகின்றன. குறிப்பிட வேண்டிய நோய் ருமாட்டிக் சுரம் ஆகும். ஒட்டைடிஸ் மீடீயா, மெனின்ஜைட்டிஸ் ஆகிய நோய்கள் டான்சிலைட்டிஸ் காரணமாக வரக்கூடியவை; இவற்றிற்கு பெனிசிலின் தான் சிறந்த மருந்தாகக் காணப் படுகிறது.

1. டான்சில்களை அறுவையால் அகற்றலாமா?
2. எந்த வயதில் அகற்றுவது?
3. அகற்றுவதற்கான காரணங்கள் யாவை?

1. சில டான்சில்களை அறுவையால் அகற்றுவது நலம். ஆனால் டான்சில் என்றால் அறுவை என்னும் கொள்கை நல்லதல்ல.
2. நான்கு வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கு அறுவை அவசியம் அல்ல என்று நிபுணர்கள் அறிவிக்கின்றனர்.
3. டான்சில்களை அகற்றுவதற்கான காரணங்கள் அல்லது நோயின் குணங்கள் பின்வருமாறு :-

மீண்டும் மீண்டும் வருகின்ற டான்சிலைட்டிஸ்

இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து ஆறுமுறை வரும் அல்லது ஏற்படும் டான்சிலைட்டிஸ்

காதில் சீழ் வருவதற்குக் காரணமாக இருக்கும் டான்சிலைட்டிஸ்

மூச்சு விட தடை செய்யும் டான்சிலைட்டிஸ்

புற்றுநோய்க்கான அறிகுறிகள் காணப்படும் டான்சிலைட்டிஸ் (வயதானவர்கள்)

நன்றி; விஞ்ஞானச் சுடர்

## சின்னஞ்சிறு மலரே...!

சின்னஞ்சிறு மலரே—தினம் நீ
சிரித்து மகிழ்ந்திடுவாய்
பள்ளி சென்று பாடம்—தினம் நீ
படித்து மகிழ்ந்திடுவாய்

வெள்ளை அலை போலே—தினம் நீ
துள்ளி மகிழ்ந்திடுவாய்
கிள்ளை மொழி தனிலே—செந்தமிழ்
கீதம் இசைத்திடுவாய்

இன்பம் அருவியெனத்—தம்பி
எங்கும் பெருகி வர
அன்பை மழைஎனவே—அள்ளி
எங்கும் பொழிந்திடுவாய்

நாட்டுக் குழைத்திடுவாய்—நல் நூல்
நண்பனைக் கொண்டிடுவாய்
வீட்டுக்குள் இல்லாமல்—வெளி
உலகும் கண்டிடுவாய்

சாலை வழி ஓரம்—தம்பி
நடந்து சென்றிடுவாய்
ஏழைதனைக் காணின்—தம்பி
இரக்கம் கொண்டிடுவாய்!

—குழ. கதிரேசன்



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகைமை அழியும், நேசம் வளரும், ஜீவகாருண்யம் செழிக்கும், சமயப் பகைகள் மறையும். ஆத்ம ஞானம் பெருகும். பூலோகம் ஆன்மீக சொர்க்கம் ஆகும்.

உயிர்கள் அனைத்தும் கடவுள் படைப்பு, அனைத்து உயிரும் ஈசன் குடியிருப்பு. மாசில்லா மனமே ஈசன் கோயில். உயிர்களை நேசி. உனக்குண்டு இறைவன் ஆசி. உயிர்களை வழிபடு. அதுவே கடவுள் வழிபாடு. உயிர்களுக்குத் தொண்டு செய். அதுவே கடவுள் தொண்டு. சடங்குகளும் சம்பிரதாயங்களும் நம்மை கடவுளிடம் இட்டுச் செல்லா, இவ்வாறு திட்டவட்டமாகவே தீட்டுகிறார் திரு. வி. க.

ஆன்மா வயப்படும் இடம் எதுவோ அதுவே ஆலயம் என்பது திருமூலர் வாக்கு. ஆண்டவன் பால் லயப்பட்ட உள்ளங்களுக்கெனத்தொன்றுதொட்டு அமைக்கப்பட்டவைகளே ஆலயங்கள். ஆலயங்களும், மடங்களும் ஆன்மீகம் வளர்க்க வந்தவை. ஆலயங்கள் ஆடம்பரமற்று இருத்தல் வேண்டும். எளிமை - அமைதி தெய்வ குணங்களல்லவா? ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள் ஆண்டவனை மறக்கச் செய்யும் மாயைகள், அர்த்தமற்ற பூசனைகள், பொல்லாக் காட்சிகள் வழிபாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றன. எளிய கோயில்களே அவரின் உள்ளம் கொண்டது. எனவே ஆலயங்களின் செயற்பாடு குறித்து திரு. வி. க. கவலை மிகக்கொண்டார். ஆலயங்கள் அருள் நெறி பரப்ப வந்தவை. அவை இரண்டு விதம். ஒன்று படமாடுங்கோயில். மற்றது நடமாடுங்கோயில். ஆரம்பகாலத்தில் திரு. வி. க. படமாடுங் கோயில் தொண்டில் ஈடுபட்டார். பிற்காலத்தில் நடமாடுங்கோயில் தொண்டில் ஈடுபாடு கொண்டார். மனிதனே நடமாடுங்கோயில். அவனுக்காற்றும் தொண்டே ஆலயத் தொண்டு, ஆண்டவன் தொண்டு எனக் கருதினார். அதுவே அவர் வாழ்க்கையில் நாளேற நாளேற வளர்ந்து பெருகியது.

எனவே, தொழிலாளர் நலம் கருதி அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. தமிழகத்தில் முதன் முதலாகத் தொழிற்சங்கம் நிறுவி, சரித்திரம் படைத்தவரில் அவரும் ஒருவர். அல்லும் பகலும் அனவரதமும் அவர்களுக்காக அயராது உழைத்தார்; அவர்களுக்காக எழுதினார்; எழுதிக் கொண்டே இருந்தார். தொழிலாளர் வாழ்க்கைக்குத் துணை போவது உலகத் தொண்டென உணர்ந்தவர். எனவே, அவர்களின் எழிலான வாழ்வுக்கு இன்னும் ஒருமுறை பிறப்பேன் என சூள் கொட்டியவர். எழுத்தில் ஏற்றம், கருத்தில் ஆழம், நடவடிக்கையில் ஒரு பற்றற்ற தன்மை, சரமிக்க தீரம், தீரமிக்க சரம், யாருக்கும் எவர்க்கும் எதற்கும் எப்போதும் அஞ்சாத உருக்குலையாத போக்கு, தன்னலமற்ற தமிழ்ப்பற்று, உயர்ந்த நாட்டுப் பற்று-இவை அவரின் அணி கலன்கள். அவருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்நாளில் அவரிடமிருந்து ஒரு சில அணி கலன்களையாவது அடைய முயலுவோமாக!

* * * * *

'கலியுகமா? பொல்லாத யுகம்' என்று பலர் கூறுகிறார். உலகில் நடைபெறும் பலதிற மீச்செயல்களை நோக்கும் போதெல்லாம், 'எல்லாம் கலியின் கோலம்' என்று நம்மவர்கள் பேசிக்கொள்வது வழக்கம். மனிதன் செய்யும் அடாத செயல்கட்கெல்லாம் கலியுகத்தின் மீது பழி சுமத்தப்படுகிறது...கலியுகம் பொல்லாத யுகம் என்று கூறும் மக்கள், அப்பொல்லாமைக்குக் காரணம் கலியா அல்லது தங்கள் செயலா என்பதைச் சிந்திப்பார்களாக. ''எல்லாம் மனிதனால் என்னும் உண்மையைக் கலியைக் குறை கூறும் நேயர்கள் உணர்வதில்லை போலும்! நன்மைக்கும் தீமைக்கும் பிறப்பிடம் மனிதன் செயலேயாகும்'' என்று ஆணித்தரமாகச் சொல்லுகிறார் திரு. வி. க.




மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. அதன் துணை கொண்டு அவன் தெய்வநிலை அடைதல் வேண்டும். இக்கலியுகம் கடவுள் யுகமாகும், மனிதன் மனிதனாக வாழ்ந்தால். ஆனால் மனிதன் எத்தனை எத்தனை மீச்செயல்புரிந்து விட்டான். அவை கணக்கில் அடங்குமா?

சாதிகளும் சாதீய அமைப்புகளும் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு இடையூறுகளாக இருக்கின்றன? திரு. வி. க. மனம் வருந்தி, சாதிகள் ஒழிய வழி வகைகளைக் காண விழைந்தார். எண்ணம், எழுத்து, சொல், செயல் அனைத்திலும் திரு.வி.க. சாதியைத் துறந்தார்.

சாதி எதிர்ப்பாளர்கள் மூன்று விதம். உள்ளத்தில் சாதி, எனினும் உதட்டில் சமத்துவம் இருக்கும். அவர்கள் சாதியை மறைப்பவர்கள். ஆனால் சாதியை எதிர்ப்பதுபோல் நடிப்பார்கள்.

இன்னொரு சாரார், சாதியை மறுப்பார்கள். இல்லை எனச் சாதிப்பார்கள். ஆனால் உள்ளத்தில் சாதீய சிந்தனைகளே நிறைந்திருக்கும்.

திரு. வி. க. இந்தவகைகளைச் சாராதவர். அவர் சாதியை மறைத்தவரோ அல்லது மறுத்தவரோ அல்லர். அவர் மூன்றாவது ரகம். சாதியை அடியோடு மறந்தவர். சாதி நினைவே இல்லாதவர். சாதியின் சாயல் படாமலே வாழ்ந்தவர்.

சாதி எனும் சொல்லே தமிழ்ச் சொல் அல்ல என்று தொல்காப்பியத்தினை மேற்கோள் காட்டி தன் வாதத்துக்கு வலுவூட்டி, சாதி - மக்களுக்கு இடையில் இழைக்கப்பட்ட இடுக்கண் என்று புலப்படுத்துகிறார்.

பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதுவது பேதைமை அறியாமையின் அடையாளம். சாதி வேற்றுமையைக் கனவிலும் எண்ணாதே. தீண்டாமையை விலக்கு-இப்படி இளைஞர்களை அறைகூவி அழைக்கிறார். இந்தச் சமுதாயத் தீமைகளைக் களைய இளைஞர்களால் முடியும் என்று திரு.வி.க. நம்பினார். நமது இளைஞர்களின்பால் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை.

பிறப்பையொட்டித் தொழில் அமைவதை திரு. வி. க. ஏற்க

வில்லை. இன்னின்ன வகுப்பார்க்கு இன்னின்ன தொழில் என்று நிர்ணயம் செய்வது சமூக ஆரோக்கியத்துக்கு அறிகுறி அல்ல. தொழில்கள் அவரவர் இயல்புக்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும். அதுதான் இயற்கை. பிறப்பையொட்டித்தான்தொழில் என்பது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும். சாதி அடிப்படையில் தொழில்களைப் பிரிப்பது பத்தாம் பசலித்தனமானது, விஞ்ஞான யுகத்திற்கு விரோதமானது.

''சாதி ஒழிய திரு.வி.க. கண்ட கைகண்டமருந்து கலப்பு மணம். மக்களின் மனக்கலப்பும், இனக் கலப்பும் சாதிகளை ஒழிக்கும் மார்க்கங்கள் என்றார். "சாதி நோயை அறவே நீக்க வல்ல மருந்து தேவை என்று நினைந்தேன். நினைந்தேன், நினைந்தேன், பன்னெடுநாள் நினைந்தேன். ஒன்று கண்டேன். எது? அதுதான் கலப்பு மணம்'' என்கிறார் திரு. வி. க. அவர் பல கலப்பு மணங்கள் செய்து வைத்தார். மேலும் கலப்பு மணங்கள் செய்ய முனைந்து நின்றார். அதற்கெனப் பல பிறவிகள் தாங்கல் வேண்டுமென்பது அவரது தவம் என்கிறார். கலப்பு மணம் உலகெங்கும் பரவ வேண்டும். கலப்பு மணப் பிரச்சாரங்கள் அயராது எக்கணமும் நடத்தல்வேண்டும் என்று கூறுகிறார் திரு.வி.க.

கலப்பு மணத்தால் ஆங்காங்கு விளையும் தீமைகளையும் திரு. வி. க. பார்க்கத் தவறவில்லை. ஆயிரக்கணக்கில்கலப்புமணங்கள் நடந்தால் தீமைகளுக்கு இடமிராது - இது திரு. வி. க. வாதம்.

திரு. வி. க. பெண்ணுரிமை போற்றினார். பெண்ணுரிமை போற்றிய பெருமான் திரு.வி.க. என்றே போற்றப்பட்டார். பெண்ணுரிமை என்பது என்ன? ஆணுடன் போரிடுவதா? இல்லை. ஆணுடன் இயைந்து, இணைந்து வாழ்ந்து அன்பை வளர்ப்பதே பெண்ணின் உரிமைக் கடன், ஆணை அடக்கி ஆள உரிமை கேட்பதன்று. பெண்ணை அடக்கி ஆள ஆண் நினைப்பதும், ஆணை அடக்கி ஆளப்பெண் நினைப்பதும் இயற்கை வழி வாழ்வாகாது. இருவரும் ஒத்துவாழ்தலே இன்பமாகும். ஆண், பெண் சேர்ந்ததே வாழ்வு. உடல் நலத்திற்கு எப்படி தட்பம், வெப்பம் இரண்டும் தேவையோ அதுபோல வாழ்வு நலத்திற்கு ஆண்மை, பெண்மை இரண்டும் தேவை.

பெண்களின் மேம்பாட்டிற்குக் கல்வி மிக அவசியம். கல்வியே பெண்களைக் கரை சேர்க்கும் கட்டுமரம்.

நகைப்பித்து பெண்ணின் இயற்கைக் குணமான இரக்கத்தையும் சிதைக்கிறது. பெண் என்பவள் வீட்டை இன்ப ஒளி வீசுமாறு செய்யும் தெய்வமணி விளக்கு. பெண்கள் அறிவால் மனத்தை அடக்கி, கற்பெனும் தீபத்தை அணையாமல் காக்க வேண்டும்.

இளம் பெண்களை வயது முதிர்ந்தோர்க்கு மணம் முடிப்பது பெண் கொலையே என்றுரைக்கிறார் திரு. வி. க.

பெண்கள் தீய எண்ணங்கள் ஊட்டவல்ல போலி நாவல்களை கையால் தொடுதலும் ஆகாது. அவை வாழ்வை நஞ்சென எரிப்பவை என்று திரு. வி. க. எச்சரிக்கிறார்.

பெண்களை ஒதுக்கிவிட்டு எந்த நாடும் முன்னேற முடியாது. பெண்ணுரிமையுள்ள நாடே நாகரிக நாடெனக் கருதப்படும். பெண் நலனே நாட்டு நலன். பெண் கண்ணீர் விடும் நாடு— வறுமை நாடு; அடிமை நாடு. அது எரிந்து போகும். இவை தமிழ்த் தென்றல் அன்பர்களை வேண்டியிருப்பதுபோல அவரது நூற்படங்களில் அவரைப்பார்த்து கண்டெடுத்த அவரது வைர முத்துக்கள். அவை வாழ்க்கைக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரங்கள்.

**நன்றி: சென்னை வானொலி நிலையம்**

---

# எல்காட்

## குவார்ட்ஸ் டிஜிட்டல்வாட்ச்

## எல்காட்டின் முன்னோடிச் சாதனை!

இந்தியாவில் உள்ள மாநில மற்றும் மத்திய பொதுத்துறை மின் அணு நிறுவனங்களில், தமிழ் நாடு அரசின் நிறுவனமான எல்காட் ( Elcot ) ஒன்றே முதன் முதலாக டிஜிட்டல் கைக் கடிகாரங்களைத் தயாரித்துப் பெருமிதத்துடன் அளிக்கிறது.

மிகப் பெரிய அளவில் கடிகாரங்களைத் தயாரிக்கும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் (HMT ) நிறுவனம்கூட இதுவரை, இதுபோன்ற, டிஜிட்டல் கைக்கடிகாரங்களைத் தயாரித்து, வெளியிடாத நிலையில், எல்காட்டின் இந்தச் சாதனை ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது.

கடிகார வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறினால், பத்து ஆண்டுகளுக்கு முன்புகூட இயந்திர (மெகானிக்கல் - Mechanical) கடிகாரங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது இந்நிலை மாறி டிஜிட்டல் கைக் கடிகாரங்கள் தொழிற் நுட்பத்திலும், உற்பத்தி உயர்விலும் எண்ணிலடங்காச் செயல் திறன்களிலும், பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன.

உலகில், தற்பொழுது, ஆண்டொன்றுக்குத் தயாரிக்கப்படும் 20 கோடி கைக்கடிகாரங்களில் 60 சதத்திற்கும் மேல் மின் அணு. டிஜிட்டல் கைக்கடிகாரங்களே! ஜப்பான், ஹாங்காங் போன்ற நாடுகளில் இந்த விகிதாச்சாரம் இன்னும் அதிகமாகும்.

இந்நிலையில், உலகத்தில் 1990-ஆம் ஆண்டுக்குள் இயந்திர கைக்கடிகாரங்களின் உற்பத்தி அறவே நின்று விடலாம் என்ற சாத்தியக் கூறு இருக்கிறது. ஆனால் இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் சுமார் 50 இலட்சம் கைக்கடிகாரங்கள் முழுவதும் இயந்திரக் கடிகாரங்களே. ஆதலால் இந்தியாவில் உள்ள நிலை உலகத்தில் வளர்ந்து வரும் கைக்கடிகாரங்கள் நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது.

இந்நிலையை மாற்றி அமைக்க மத்திய அரசு, இந்தியாவில் மின் அணு டிஜிட்டல் கைக்கடிகாரங்கள் தயாரிக்க மத்திய அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் பாக்டரிக்கும் (HMT) மற்றும் 13 மாநில மின் அணு நிறுவனங்களுக்கும் அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு அனுமதி பெற்ற நிறுவனங்களில், எல்காட் நிறுவனம் ஒன்றுதான் முதன் முதலாக டிஜிட்டல் கைக் கடிகாரங்களை உற்பத்தி செய்து வெளியிடும் சிறப்புப் பெற்றிருக்கிறது.

ஜப்பானின் புகழ்மிக்க இட்டாச்சி (Hitachi) நிறுவனத்தின் தொழில்நுட்பத்துடன், நம் எல்காட்டின் தொழில் திறன்களையும் இணைத்து டிஜிட்டல் கைக்கடிகாரங்கள் எல்காட்டில் தயாரிக்கப்படுகின்றன.




தமிழ்நாடு மின் அணு நிறுவனம் தயாரித்துள்ள 'எல்காட்' டிஜிடல் கவர்ச்சிமிகு கைக்கடிகாரங்கள் வெளியீட்டு விற்பனை சென்னை இராசாசி மண்டபத்தில் 4-2-83 அன்று நடைபெற்றது. விழாவில் எல்காட் நிறுவனத் தலைவர் திரு கே. ஸ்ரீதரன் இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவிற்கு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள்தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "மின் அணு தொழிலுக்கு மின்சாரம், தண்ணீர் அதிகம் தேவையில்லை. எலெக்ட்ரானிக் கைக்கடிகாரம் தயாரிப்பதுபோல இன்னும் 10 தொழில்களை ரூ.20 கோடி செலவில் தொடங்க உள்ளோம். ஓசூரில் ரூ. 2 கோடி செலவில் மின் அணு சம்பந்தப்பட்ட அலுமினிய தயாரிப்புத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும்.

எக்ஸ்ரே கருவிகள், ரேடியோ ரிசீவர், டெலிபோன் கருவிகள், போன்றவற்றைக் கூட்டாகவும் தனியாகவும் தொடங்க மத்திய அரசிடம் உரிமம் பெற்று இருக்கிறோம். மின்சாரப் பொருட்கள் எலக்ட்ரானிக் மின்அணு தொழில்கள், ஆட்டோ மொபைல்ஸ் சம்பந்தப்பட்ட தொழில்கள் தொடங்க மான்யம் அளித்து வருகிறோம். எலக்ட்ரானிக் பொருட்கள் தொழில் எந்த மாவட்டத்தில் தொடங்கினாலும் வசதிகளை அரசுசெய்து தரும். 1980-81-ல் தொழில் உற்பத்தி ரூ. 19 கோடி ஆக இருந்

**அ. மருதவிநாயகம்**

தது. ஆனால் 1983-84ல் ரூ. 34 கோடி தொழில் உற்பத்தியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது."

எல்காட் முன்னேற்ற மேலாளர் திரு எம். இராமசந்திரன் அவர்கள் தொழில் நுட்பத்தைப் பற்றி விளக்க உரையாற்றினார்.

எல்காட் குவார்ட்ஸ் டிஜிட்டல் வாட்சை வெளியிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்: "சாப்பிட வந்தவனை, சமையல் செய்யச் சொன்னதுபோல கைக்கடிகாரத்தைப் பார்த்து அபிப்பிராயம் சொல்ல வந்த என்னையே, பேசிப் பேசியே பணம் கொடுத்து வாங்க வைத்த திறமையைப் பாராட்டுகின்றேன். கைக்கடிகாரத்தைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன் என்பதை மனநிறைவோடு தெரிவிக்கின்றேன்.

"பல மாநிலங்களும் கைக்கடிகாரம் தயாரிக்கும் உரிமத்தைப் பெற்றிருந்தும், தமிழகத்தின் எல்காட் நிறுவனம்தான் இந்த கைக்கடிகாரத்தை முதன் முதலில் தயாரித்து அறிமுகப்படுத்தி இருக்கிறது என்ற பெருமை தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது. இந்தக் கைக்கடிகாரங்களை விற்கும் பணம் தமிழகத்துக்கேதான் வந்து சேருகிறது என்பதை அனைவரும் உணர வேண்டும். இங்கு வரவேற்புரையாற்றுகையில் கடிகாரத்திற்கு வரி குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். வரி போடாமல் எந்த ஒரு நாட்டிலும் ஆட்சி நடத்த முடியாது. மத்திய அரசு வரி விலக்கு அளிப்பதைப் பொறுத்து மாநில அரசும் நடவடிக்கை எடுக்கும்.

கைக்கடிகாரத்திற்கு தரப்படுகின்ற விளம்பரத்தைப் பொறுத்துத்தான் விற்பனை இருக்கும்.

ஜப்பானில் கைக்கடிகாரத்திற்குத் தேவையான உதிரி பாகங்களைக் குடிசைத் தொழிலாக செய்து வருகிறார்கள். அதுபோல இங்கும் கடிகாரத் தொழிலைக் குடிசைத் தொழிலாக்கி, பல ஆயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க அலுவலர்கள் அரசுக்கு ஆலோசனை கூற வேண்டும்."

தமிழ்நாடு மின் அணு நிறுவனமான எல்காட் நிறுவனம் ஜப்பான் நாட்டுடன் இணைந்து 'எல்காட் குவார்ட்ஸ் டிஜிட்டல்' என்ற 'எலக்ட்ரானிக்' கைக்கடிகாரங்களைத் தயாரித்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்களை தமிழக அரசின் நிறுவனம் தான் முதன் முதலில் தயாரித்து வெற்றி கண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் விற்பனையைத் துவக்கி வைக்கும் முறையில் முதல் கடிகாரத்தை விலைக்கு வாங்கினார்கள்.

விழா இறுதியில் 'எல்காட்டின்' விற்பனை மேலாளர் திரு ஆர். டி. அரசன் நன்றி கூறினார்.



# கலைமாமணி விருது வழங்கும் விழா!

— 'ராஜ-ஓ'

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் எந்த ஆண்டும் போல் இந்த ஆண்டும் சிறந்த கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கும் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் (26.1.83) சிறப்புற நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தலைமை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த 32 கலைஞர்களுக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அந்தக் கலைஞர் பெருமக்களுக்கெல்லாம் கலைமாமணி பட்டம் வழங்கிச் சால்வை அணிவித்தார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற 12 கலைஞர்களுக்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு, செ. அரங்கநாயகம் அவர்கள் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாத் தொடக்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவரான உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழா முடிவில் மன்றச் செயலாளர் கலைமாமணி திரு. டி.வி. நாராயணசாமி அவர்கள் நன்றி கூறினார்.

விருது பெற்ற கலைஞர்களைப் பாராட்டி மேதகு ஆளுநர், மாண்புமிகு கல்வியமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோர் உரையாற்றினர்.

விருது பெற்ற கலைஞர்கள் சார்பில் நன்றி தெரிவித்து திரு, கி. வா. ஜகந்நாதன், திரு, ரஜனிகாந்த், திரு, பாரதிராஜா, செல்வி சரிதா ஆகியோர் பேசினார்கள்.





இந்த ஆண்டில் (1983) பொற்கிழி பெற்ற கலைமாமணிகளின் பெயர்கள் விவரம் வருமாறு:

திரு. மதுரை சி. எஸ். சங்கர சிவம் (இசைக் கலைஞர்),
திரு. மதுரை டி. சீனிவாச அய்யங்கார் (ஜலதரங்கக் கலைஞர்),
திரு. தஞ்சாவூர் டி. டி. சங்கரய்யர் (வயலின் கலைஞர்),
திரு. எம். வி. கிருஷ்ணப்பா (இசை நாடக நடிகர்),
திரு. டி. கே. அப்புக்குட்டி பாகவதர் (இசை நாடக மிருதங்கக் கலைஞர்),
திரு ந. மு. க. சண்முகசுந்தரக் கவிராயர் (பழம் பெரும் இசை நாடக நடிகர்),
திருமதி எஸ். ஆர். பார்வதி (இசை நாடக நடிகை),
திரு ஏ. எஸ். தங்கவேல் (இசை நாடகப் பாடலாசிரியர்),
திரு. எம். கே. ஆத்மநாதன் (நாடகப் பாடலாசிரியர்),
திரு. திலகம் நாராயணசாமி (நாடகாசிரியர்),
திரு. டி. எம். கணேசன் (புரவி நாட்டியக் கலைஞர்),
திரு. மூன்றடைப்பு ஆர். ராமசுப்பு (கிராமியக் கலைஞர்–கணியான் கூத்து).

இந்த ஆண்டில் (1982-1983) விருது பெற்ற கலைஞர்கள் விவரம் வருமாறு:

திரு. கி. வா. ஜகந்நாதன் — இயற்றமிழ்க் கலைஞர்,











| | |
|---|---|
| திரு. மைலம் ப. வஜ்ஜிரவேலு முதலியார் | — இசைக் கலைஞர், |
| திரு. சிக்கில் ஆர். பாஸ்கரன் | — வயலின் கலைஞர், |
| திருமதி. சாரதா சிவானந்தம் | — வீணைக் கலைஞர், |
| டாக்டர் பிரபஞ்சம் சீதாராம் | — புல்லாங்குழல் கலைஞர், |
| திரு. இஞ்சிக்குடி இ. பி. கந்தசாமி | — நாதசுரக் கலைஞர், |
| திரு. இஞ்சிக்குடி இ. பி. கணேசன் | — நாதசுரக் கலைஞர், |
| திரு. டி. ஆர். கோவிந்தராசன் | — தவில் கலைஞர், |
| திருமதி. பாலமீரா சந்திரா | — கதாகாலட்சேபக் கலைஞர், |
| திருமதி. சூலமங்கலம் ஆர். ஜெயலட்சுமி | — இறையருட்பாடற் கலைஞர், |
| திருமதி. சூலமங்கலம் ஆர். ராஜலட்சுமி | — இறையருட் பாடற் கலைஞர், |
| திரு. வடபழநி ந. ஆறுமுக ஓதுவார் | — இறையருட் பாடற் கலைஞர், |
| திரு. பி. எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை | — பரதநாட்டிய ஆசிரியர், |
| திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் | — பரதநாட்டியக் கலைஞர், |
| திரு. வி. கோபாலகிருஷ்ணன் | — நாடக நடிகர், |
| திரு. எம். கே. முஸ்தபா | — நாடக நடிகர் (சிறப்பு), |
| திருமதி சண்முக சுந்தரி | — நாடக நடிகை, |
| திரு. சட்டாம்பிள்ளை கே.என். வெங்கட்ராமன் | — நாடக நகைச்சுவைக் கலைஞர், |
| திரு. அடியார் | — நாடக ஆசிரியர், |
| டாக்டர். ஆறு அழகப்பன் | — நாடகக் கலை ஆய்வாளர், |
| திரு. எஸ். ஆர். சபாபதி | — அயல் மாநிலத் தமிழ் நாடகக் கலைஞர், |
| திரு. ரஜினிகாந்த் | — திரைப்பட நடிகர், |
| செல்வி சரிதா | — திரைப்பட நடிகை, |
| திரு பாரதிராஜா | — திரைப்பட இயக்குநர், |
| திரு. எஸ். சி. கிருஷ்ணன் | — திரைப்பட பின்னணிப் பாடல் கலைஞர், |
| திரு. என். வி. மாமுண்டி | — இசை நாடக நடிகர், |
| திருமதி. கே. பி. மெஞ்ஞானவல்லி | — இசை நாடக நடிகை, |
| திரு. ஏ. கே. காளீஸ்வரன் | — பழம்பெரும் இசை நாடகக் கலைஞர், |
| திரு விகடம் ஜி. சந்துரு | — விகடக் கலைஞர், |
| திரு. புரிசை மண்ணுசாமி உடையார் | — கிராமியக் கலைஞர் (தெருக் கூத்து), |
| சிறந்த கலை நிறுவனம் | — நாரத கான சபா—கரூர். |



# நெல்லை மாவட்டம்..

# அறநிலையத் துறையின் அரும்பணிகள்

—பி. எல். ராஜேந்திரன்

கால்டுவெல், ஜி. யு. போப், வீரமாமுனிவர் போன்ற மேனாட்டு அறிஞர்களெல்லாம் தங்கித் தமிழ் வளர்த்த பெருமை திருநெல்வேலி மாவட்டத்திற்கு உண்டு.

நாம் இப்படிச் சொல்லுவதால்- அங்கே தமிழோ இந்து சமயமோ பலவீனப்பட்டிருந்ததாகப் பொருளில்லை. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரை ஈன்றமண் நெல்லை மண். நூற்றுக்கணக்கான பெருங்கோயில்கள் விளங்கும் மண் நெல்லை மண் என்பது வெளிப்படை.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சமய நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் 2700க்கு மேலாகும்.

திருச்செந்தூர்-அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில் - அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயில், பண்பொழி - திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், நெல்லை - அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், குற்றாலம் - அருள்மிகு குற்றாலநாத சுவாமி திருக்கோயில், நெல்லை - பிள்ளையன் கட்டளைகள், நெல்லை - மேடை தளவாய் கட்டளை, கழுகுமலை- அருள்மிகு கழுகாசல மூர்த்தி திருக்கோயில், சிங்கம்பட்டி — அருள்மிகு சொரிமுத்தையனார் திருக்கோயில், கோவில்பட்டி — அருள்மிகு பூவணநாத சுவாமி திருக்கோயில், இலஞ்சி-அருள்மிகு இலஞ்சி குமாரர் திருக்கோயில், தென்காசி-அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி திருக்கோயில், வீரகேரளம் புதூர் - அருள்மிகு நவநீத கிருஷ்ணசுவாமி திருக்கோயில், ஆழ்வார் திருநகரி— அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், செட்டியாபத்து- அருள்மிகு சிதம்பரேசுவரர் வகையறா திருக்கோயில்கள், சிவகிரி-இராணி கருப்பாயி நாச்சியார் கட்டளை, நான்குநேரி— வானமாமலை பெருமாள் திருக்கோயில் ஆகிய பதினேழு திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உடையவைகளாகும்.

தமிழ்நாடு அரசினுடைய அறநிலையத்துறைக்கு உட்பட்டதான நெல்லை மாவட்டக் கோயில்களுக்கு உள்ள நிலபுலன்கள் பற்றிய மொத்த விவரங்களையும் இங்கே நாம் தெரிந்து கொள்ளுவது நலன் பயப்பதாக இருக்கும். நெல்லை மாவட்டத்திருக்கோயில்களுக்குச் சொந்தமாயுள்ள நன்செய்நிலம் 15 ஆயிரத்து 670 ஏக்கர், 37 செண்ட். புன்செய் நிலமோ 37 ஆயிரத்து 590 ஏக்கா 94 செண்ட். மானாவாரியோ 2 ஆயிரத்து 114 ஏக்கர், 39 செண்ட்.

இவை தவிர, திருக்கோயில்களுக்குச் சொந்தமாயுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை மட்டும் 2346 ஆகும்.

நெல்லை மாவட்டத்தில் உண்டியல் மூலம் அதிக வருமானம் வரும் திருக்கோயில்கள் திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலும், நெல்லை அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுமாகும். அதன் விவரம் வருமாறு:

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவதாகிய அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் (பசலி 1388) ரூ. 14,27,890.84, (பசலி 1389) ரூ. 16,60,669.79, (பசலி 1390) ரூ. 18,08,907.02.

அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் (பசலி 1388) ரூ. 2,56,229.84 (பசலி 1389) ரூ. 3,07,745.62; (பசலி 1390) 3,56,455.21.

**நிதிமூலம் நலன்கள்**

இந்தக் கோயில்களுக்கு வரும் வருமானங்கள் யாவுமே அந்தந்தக் கோயில்களின் திருப்பணிகளுக்காகவோ பராமரிப்புகளுக்காகவோ மட்டுமே செலவிடப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை.

அன்பு இல்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், அன்பு ஆசிரமம், வேத பாடசாலை, சித்த வைத்திய சாலை, தேவாரப் பாடசாலை, திருமுறைப் பயிற்சி வகுப்பு, சமய நூலகம், மதிய உணவுத் திட்டம், சிறப்புத் திருமணம், ஆரம்பப்பள்ளி, துவக்கப்பள்ளி, மகளிர் மேநிலைப் பள்ளி, மகளிர் தங்கும் விடுதி போன்ற பல அமைப்புகளெல்லாம் திருக்கோயில்களின் வருமான நிதியிலே சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.







பக்தர்கள் தங்கிடவெனப் பயன்மிகு விடுதிகள் பலவும் கட்டப்பட்டுள்ளன. மதுரை - குற்றாலம் போன்ற இடங்களில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் செய்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நுணுக்கமான சிற்ப வேலைப் பாடுகளின் சிறப்புத் தெரிவிப் பவை திருவேல்வேலி திருக்கோயில்கள். நெல்லையப்பர் கோயிலில் ஆனித் திங்களில் நடைபெறும் தேரோட்டத் திருவிழா தமிழகத்திலேயே மூன்றாவது தேர்த் திருவிழாவாகும்.

தமிழும் சைவமும் தழைத்தோங்கிடும் நெல்லை மாவட்டத்திலேயே சிறப்புற்றதெனக் கருதப் பெறும் திருச்செந்தூர்— அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருநெல்வேலி - அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் - காந்திமதியம்மன் திருக்கோயில் இரண்டின் சார்பிலும் மட்டும் ஆற்றப்படும் பொதுப் பணிகள் பற்றிய குறிப்புகளே மற்ற கோயில்களின் பணிமுன்னோட்டமாக அமையக் கூடும்.

எனவே, அந்த இருகோயில்களின் நிதிச்செலவினச் செயல்முறை விவரங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

## திருச்செந்தூர்

திருச்செந்தூர்க்கோயில் நிதிச் செலவில் அப்பகுதிப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு 235 கட்டிகள் சாதம் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர்கள் -மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத் திருமணம் செய்து கொள்ளத் தாலி, துணிமணி பாத்திரம் பண்டங்கள் யாவற்றுக்குமென ஒரு திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் வரை உதவி செய்யப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ரூ. 40 வீதம் செலுத்திடும் பக்தர்களுககு, அவர்கள் விரும்பும் நட்சத்திரத்தன்று சுவாமிக்கு மாதந்தோறும் கோயில் செலவிலேயே அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

அன்பு இல்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம்,

சித்த வைத்தியசாலை, நூல் நிலையம், வேத பாடசாலை, போன்ற பல அமைப்புகள் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

## திருநெல்வேலி

நெல்லையப்பர் கோயில் நிதியிலிருந்து நாள்தோறும் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

குழந்தைகளுக்காகத் தனியொரு தேவாரப் பாடசாலை நடத்தப்பெறுகிறது.

ஸ்ரீ காந்திமதியம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரம இல்லம், சுவாமி நெல்லையப்பர் ஆதாரப் பள்ளி, திருஞான சம்பந்தர் பாலர் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் நன்முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இன்னொரு பள்ளிக் கட்டடம் பெருமளவில் கட்டப்பட்டு வருகிறது. மேநிலைப் பள்ளிக்கு ரசாயன

ஆய்வுக்கூடம் 60 ஆயிரம் ரூபாய் செலவில் பொருட்கள் வாங்கப்பட்டு மாணவியரின் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உதவப்பட்டுள்ளது. சமய நூலகங்களும் நடத்தப் பெறுகின்றன.

நெல்லை மாவட்ட அறநிலையங்கள் ஆற்றிடும் பணி இத்தகு சீரும் சிறப்பும் உடையவைகளாகும்.






**வ**ரலாற்றுப் புகழ்மிக்க, சிறப்பு வாய்ந்த இந்தியத் துறைமுகங்களில் தூத்துக்குடி ஒன்றாகும். வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே முத்துக் குளிப்பதற்குப் பெயர் பெற்றது இந்தத் துறைமுகம்.

முத்து வாணிபத்தின் தொடக்கமே இங்கு ஆரம்பமாகியது என்று கூறலாம். சோழ மன்னர்கள் மற்றும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கிழக்கில் சீனாவையும், மேலை நாடுகளில் கிரேக்க நாட்டையும், ரோமாபுரியையும் முத்து வாணிபத்தில் இணைக்கும் பாலமாகத் தூத்துக்குடித் துறைமுகம் விளங்கியது. சிறிய துறைமுகமாக இருந்த இந்தத் துறைமுகம் இன்று மிகவும் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

1980-ஆம் ஆண்டு வாக்கில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் வாணிகப் பொருட்கள் இந்தத் துறைமுகத்தின் வாயிலாகச் சென்றன. உரம், உணவுத் தானியங்கள், நிலக்கரி மற்றும் சரக்குகள் இறக்குமதியாயின. முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் உப்பு, வெங்காயம், சிமிண்ட், பனைமரப் பொருட்கள் முதலியவையாகும். இந்தியநாடு சுதந்திரமடைந்த பின் இத்துறைமுகத்தின் வழியாக வாணிகம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.



நடுத்தரத் துறைமுகங்களின் விரிவாக்கக் குழு இந்திய அரசினால் 1959-ல் அமைக்கப்பட்டது. இங்கு தூத்துக்குடி துறைமுகத்தின் விரிவாக்கத்திற்கு ஒரு திட்டத்தைப் பரிந்துரை செய்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டது.

## பெரிய துறைமுகம்

எண்ணெய்க் கப்பல் தளம் ஏற்பட்டதும் தூத்துக்குடி 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 10-வது பெரிய துறைமுகமாகியது.

1979-80-ஆம் ஆண்டில் இத்துறைமுகத்தில் இறக்குமதியும், ஏற்றுமதியும் 24.11 இலட்சம் டன் எடை அளவை எட்டியது. முந்திய ஆண்டில் இந்த அளவு 17இலட்சம் டன்னாக இருந்தது.

## வருமானம்

1979-80-ஆம் ஆண்டில் இந்தத் துறைமுகத்தின் நடப்பு வருமானம் 332.26 இலட்சம் ரூபாயாகும். 290.08 இலட்சம் ரூபாய் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இதன் நிகர வருமானம் 542.18 இலட்சம் ரூபாயாகும்.



## தூத்துக்குடி

**தூத்துக்குடி** மாபெரும் நகரமாக விளங்குகிறது. உப்பு உற்பத்தியும், முத்துக் குளித்தலும் இந்நகரின் பண்டையத் தொழில் பெருமையாகும். இன்றும் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெறுகிறது. மீன் பிடிக்கும் துறையாகவும் சிறப்புற்று விளங்குகிறது இது. கடலில் மூழ்கி முத் தெடுப்பவர்களின் பணி உயிராபத்திற்குள்ளானது என்றாலும் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பயிராகும் நிலவாகை மருந்து இலை (Semia) ஆண்டொன்றுக்கு 2500 டன் ஏற்றுமதியாகிறது. இது பேதி மருந்து உட்பட, மருந்து தயாரிப்பதற்குப் பெரிதும் உதவுகிறது.

பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இதனை வாங்குகின்றன.

இப்பொழுது 'ஸ்பிக்' நிறுவனத்தின் மூலமாக உர உற்பத்தியும் அதிகரித்துள்ளது. மற்றும் பல தொழில்களும் பெருகி வருகின்றன. கனரக உற்பத்தித்தொழிற்சாலை, அனல் மின்நிலையம் ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவை.

## மற்றும் சில குறிப்புகள்

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு 1963-ல் ரூ. 46.55 கோடி செலவில் அங்கீகாரமளிக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் கப்பலோட்டிய தமிழர் திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டு முதல் இது பெரிய துறைமுக





மாகச் செயல்படுகிறது.

1981-82-ல் இத்துறைமுகத்தின் வணிகப் போக்குவரத்து 3.66 இலட்சம் டன்னாகும்.

1981 செப்டம்பர் 1ஆம் தேதி முதல் துறைமுகத் தொழிலாளர்கள் 3 ஷிப்டுகளில் வேலை செய்து வருகிறார்கள்.

சரக்குகளை ஏற்றுமதி-இறக்குமதி செய்வதிலும் இத்துறைமுகம் புதிய சாதனைகளைப் புரிந்துள்ளது. ஒரே நாளில் (1981 ஜூலை 29ஆம் நாளன்று) 6150 டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது.

6-வது திட்டகாலத்தில் (1980-85) ரூ. 25.57 கோடி ரூபாய் செலவில் இத்துறைமுக வசதியைப் பெருக்க அங்கிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி சேலைகள் ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும் அழகோவிய சேலைகள்...

கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்···அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி




Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676





சோவியத் விண்வெளி வீரர் பியோடர் கிளிமுக், சோவியத் இந்திய நட்புறவுக் கழகத்தின் துர்கேனியக் கிளைத் தலைவர் ஆர். எம். ஈசினோவ் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் (2.2.'83) சந்தித்தனர்.



தமிழ்நாடு அரசின் மின் அணு நிறுவனம் தயாரித்துள்ள டிஜிட்டல் கைக்கடிகாரங்களின் விற்பனையை (4.2.1983) சென்னை ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு முதல்வர் தொடங்கி வைத்தார். இந்தியாவில் உள்ள பொதுத்துறை மின் அணு நிறுவனங்களில் முதன் முறையாக இத்தகைய கைக்கடிகாரத்தைத் தயாரித்திருப்பது எல்காட் நிறுவனம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை மருத்துவக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற (24.1.83) பொங்கல் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலந்துகொண்டார்.